வெளியீடு 24–9–1987 Issued 24–9–1987

1621/87
2962

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை மார்ச் 25, 1987—தொகுதி 34 எண் 4

Wednesday the 25th March 1987—Volume 34 No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

2962

T.N.L.A. Debates

Official Report

Vol 34 No 4

25, March 1987

D
V211,31 N87
N87.34.4
136507

D
V2ll,31 N87
N87-34-4
136507
சென்னை-600 008.

உள்ளடக்கம்

25—3—1987


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள் விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 515—557 |
| 2. தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் அறைகளில் தொலைபேசி இயங்காமலிருந்தது குறித்து .. .. | 557—558 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (அ) விவசாயிகளுக்கு வெடி மருந்துப் பொருள்கள் கிடைப்பதில் தடங்கல் .. | 558—561 |
| (ஆ) கோவில்பட்டி வட்டம், பாண்டவர் மங்கலம் கிராமத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து .. | 562—563 |
| 4. விதி 111-இன் கீழ் கல்வியமைச்சரின் அறிக்கை பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு வினாத் தாள் வெளியானது குறித்து .. .. | 564—565 |
| 5. வரவு-செலவுத் திட்டம், 1987—88 பொது விவாதம் தொடர்ச்சி— | |
| திரு. ஆர். தியாகராசன் .. | 565—578 |
| திரு. இரா. முத்தையா .. | 578—586 |
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. | 586—598 |
| திரு. கு. அ. செங்கோட்டையன் .. | 598—605 |
| திரு. சு. சிவராஜ் .. | 606—612 |
| திரு. எஸ். டி. துரைராசு .. | 612—617 |
| திரு. க. பாலசுப்பிரமணியன் .. | 617—625 |
| திரு. ப. தீர்த்தராமன் .. | 626—632 |
| திரு. த. பழனி .. .. | 633—640 |
| திரு. மு. இராசாங்கம் .. .. | 640—644 |
| திரு. தி. அன்பழகன் .. .. | 645—651 |
| திரு. எஸ். ரெத்தினராஜ் .. | 651—655 |
| 6. அறிவிப்பு— | |
| பேரவை அலுவல் .. .. .. | 645 |
| 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 655—656 |

2962

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

*1987, மார்ச் 25, புதன்கிழமை.*

**பங்குனி 11, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு-2018.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

கடமை இவை என்று அறிந்து சான்றாண்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழக அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான ஒதுக்கீடு.

157—(*வினா எண் 3534)—திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு பணிகள் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையில் பணிபுரிந்த சுமார் 12,000 தற்காலிக பணியாளர்கள் கடந்த 24—6—1984 அன்று நிரந்தரமாக்கப்பட்டதில் தாழ்த்தப் பட்ட மக்களுக்கான 18 சதவிகிதம் உரிய அளவில் தரப் பட்டுள்ளதா ?

(ஆ) இல்லை எனில், ஏன் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். இரண்டு துறைகளில் மூன்று பணியிடங்களில் மட்டும் இடஒதுக்கீடு விதி சரியாக பின்பற்றப்படாமல் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் நியமனம் செய்யப்படவில்லை.

(ஆ) நியமன அதிகாரிகள் இடஒதுக்கீடு விதிகளை சரியாக பின்பற்றவில்லை. சம்பந்தப்பட்ட துறைகளில் நியமன அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கு. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு பணிகள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையில் பணிபுரிந்த சுமார் 12,000 தற்காலிகப் பணியாளர்கள் கடந்த 24—6—1984 அன்று நிரந்தரமாக்கப்பட்டதில் தாழ்த்தப் பட்ட மக்களுக்காக் 18 சதவீதம் உரிய அளவு என்றால் 2,160 பணிகள் தரப்பட்டிருக்கவேண்டும். தராமல் தவிர்த்திருக் கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூட இதற்காகத் தனியாக ஒரு துரித நடவடிக்கை மேற்கொண்டு, காலி இடங்களில் தாழ்த்தப்பட்டவர்களை நிரப்ப வேண்டுமென்று அறிவித்ததாக அறிகிறேன். அதற்கான திட்டத்தை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன். அரசுப் பணிகளிலும் அரசு சார்புத் துறைகளிலும் 18 சதவிகிதம் தரப்படுகிறதா என்பதை ஆராய்வதற்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 18 சதவீதம் தரப்பட வேண்டு மென்று அந்தந்தத் துறைகளுக்கும், தேர்வாணைக் குழுவுக்கும் ஏற்கனவே ஆணைகள் இருந்து வருகின்றன. ஆனால், 25—6—1984 அன்று தற்காலிகப் பணியிலிருந்தவர்களை நிரந்தரமாக்கும் வகையில், கூட்டுறவு தணிக்கை இயக்குநர் அலுவலகம், வணிக வரி துணை ஆணையர், சிறப்பாணையர், மற்றும் ஆணையர் அலுவலகத்திலிருந்து தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீட்டில் கூட்டுறவு தணிக்கை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு





தட்டச்சர், வணிக வரி துணை ஆணையர், மதுரை கோட்டத்தில் ஒரு இளநிலை உதவியாளர் மற்றும் வணிக வரி சிறப்பு ஆணையாளர், சென்னை, அலுவலகத்தில் ஒரு இளநிலை உதவியாளர் நியமனங்களில் இட ஒதுக்கீடு விதி கடைப்பிடிக்கப் படவில்லையென்று கண்டு பிடிக்கப்பட்டது. மூன்று பணியிடங்களில் மட்டுமே இட ஒதுக்கீடு விதி கடைபிடிக்கப் படவில்லை. இட ஒதுக்கீடு விதிகளுக்கு மாறாக நியமனம் செய்யப்பட்ட மூன்று பேர்கள் பணியிலிருந்துள்ளார்கள். அவர்கள் பணியில் நியமிக்கப்பட்டதை ரத்து செய்து, அந்த மூன்று இடங்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டது. ஆனால், அந்த மூன்று பேர்களும் தங்களை ஏற்கனவே நியமித்து விட்டதன் காரணமாக, அந்த உத்தரவை நிலைநாட்ட வேண்டுமென்றும் தடையாணை தரவேண்டுமென்றும் உயர்நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்தின் தடையாணை இருக்கிறது. ஆகவே, இந்த வழக்கு நிலுவையில் இருப்பதன் காரணமாக, இந்த வழக்கு முடிந்ததற்குப் பிறகு அதனுடைய முடிவு வெளி வரும். அந்த இட ஒதுக்கீட்டைப் பின்பற்றாத அதிகாரிகள் மீது முறைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த இட ஒதுக்கீட்டில் பிற்பட்ட சமுதாயத்தினரைப் பொறுத்தும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரைப் பொறுத்தும் எவ்வளவு ஒதுக்கீடுகள் செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்பது எல்லா துறைகளிலும் முறைப்படி கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

**திரு. கு. தமிழரசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெற்று, அரசு உதவியோடு செயலாற்றி வருகிற தனியார் கல்லூரிகளிலும் தனியார் பள்ளிகளிலும் இட ஒதுக்கீடு முறையாகத் தரப்படுவதில்லை. இதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெறுகின்ற எந்த ஒரு நிறுவனமாக இருந்தாலும் இந்த ஒதுக்கீடு முறையைக்

கடைப்பிடிக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. எங்காவது தவறுகள் நடைபெறுமானால் அந்தத் தவறுகளை ஒட்டி நடவடிக்கை எடுக்க அரசுக்கு உரிமையிருக்கிறது.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் அளித்த போது 12 ஆயிரம் தற்காலிகப் பணியாளர்களில் 18 சதவீதம் உரிய அளவுக்குக் கொடுக்கப்படவில்லை, அப்படிக் கொடுக்கப் படாததற்குக் காரணமாக இருந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் இனிமேல் ஏற்படுகின்ற காலியிடங்களைப் பொறுத்தவரையில் நிரப்பப் படாமல் விடப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அதிகமான நபர்களை அமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு ஏற்பட்ட இடங்கள் மூன்றே மூன்று இடங்கள்தான். அந்த மூன்று இடங்களைப் பொறுத்தும் தாழ்த்தப்பட்டவர்கள் எடுக்கப்பட்டு இருக்க வேண்டும். அப்படி அவர்கள் எடுக்கப்படவில்லையென்ற காரணத்தினால் அந்த இடங்களில் நியமிக்கப்பட்டவர்களின் நியமனத்தை ரத்து செய்து அந்த இடங்களில் தாழ்த்தப் பட்டவர்களை நியமிக்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டது. அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இது எல்லாத் துறைகளிலும் கடைப்பிடிக்கவேண்டுமென்பதுதான் அரசின் கொள்கை.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள அரசுப் பணியாளர்களில் தாற்காலிக ஊழியர்களின் எண்ணிக்கை என்ன? தாற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு மாநில அரசு என்ன நடைமுறை விதிகளை கையாள்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும், தற்போது எவ்வளவு பேர்கள் தற்காலிகமாகப் பணியாற்று கிறார்கள், அதனுடைய தன்மைகள் என்ன என்பதைக் கண்டறிய.

ஆனால் ஏற்கெனவே இருந்தவர்களை 22—9—1984 அன்றைய ஆணையின்படி 25—6—1984 அன்று தற்காலிகப் பணியிலிருந்த தமிழ்நாடு அரசுப் பணி, தமிழ்நாடு அமைச்சுப் பணியிலுள்ள இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் தமிழ்நாடு செயலகப் பணியில் உள்ள தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் ஆகிய பணியாளர்கள் அனைவரின் பணியும் வரன்முறை செய்யப் பட்டது. இப்போது இருக்கிற நிலைமைக்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

### அண்ணா மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம்.

158—(* வினா எண் 4742) **திரு. கு. ரமணி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் கட்ட, திண்டுக்கல் செட்டிநாயக்கன்பட்டி கிராமத்தில் 300 ஏக்கருக்கு மேல் நிலம் ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், 50-க்கும் அதிகமான பாசனக் கிணறுகளும் 100-க்கும் அதிகமான விவசாயக் குடும்பங்களும் உள்ள விவசாய நிலங்களுக்குப் பதிலாக அதே ஊரில் வேறு நிலங்களை ஆர்ஜிதம் செய்ய விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை வந்துள்ளதை அரசு கவனிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அண்ணா மாவட்டத்தில் மாவட்ட தலைமை அலுவலக கட்டடங்கள் கட்டவும், அலுவலர் குடியிருப்பு கட்டடங்கள் கட்டவும் செட்டிநாய்க்கன்பட்டி கிராமத்தில் 215.47 ஏக்கர் நில எடுப்பு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஆ) நில எடுப்பில் உள்ள நிலங்களில் நல்ல நிலையில் 20 கிணறுகளும், பாழடைந்த நிலையில் ஐந்து கிணறுகளுமே உள்ளன. இந்த நிலங்களில் உள்ள விவசாயிகள் எண்ணிக்கை சுமார் 60 ஆகும். அரசால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு பல்வேறு நிலங்களைப் பார்வையிட்டு இறுதியாக இந்த நிலங்களை நில எடுப்பு செய்ய பரிந்துரைத்துள்ளதால் வேறு நிலங்களை நில எடுப்பு செய்யும் அவசியம் ஏற்படவில்லை.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசன நிலங்களை, நன்செய் மற்றும் நல்ல விளைச்சல் தரக் கூடியதாகவும் உள்ள பாசன நிலங்களைக் கட்டடங்கள் கட்டுவதற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது, அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என்ற ஒரு கொள்கை இருக்கிறபோது—மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடங்கள் வரவேண்டியது அவசியம்—அதற்காக அருகாமையில் நல்ல இடம் இருக்கிறது. விவசாயிகளுக்குக் கஷ்டங்களை ஏற்படுத்தாமல்—இன்றைக்கு உண்மையிலேயே 100-க்கு மேற்பட்ட விவசாயிகள் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பக்கத்திலே இருக்கிற பாசனமில்லாத நல்ல இடத்தை எடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட அண்ணா மாவட்டம் அமைந்ததற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், பிற அலுவலகங்களும் கட்டுவதற்கான வகையில் நிலம் கையகப்படுத்துகின்ற பெருமுயற்சி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்கேற்ற வகையில் ஒரே இடத்தில் பரந்த அளவில் நிலம் கிடைக்குமா என்று மூன்று, நான்கு இடங்கள் பார்க்கப்பட்டு அதிலே மிக முக்கியமாக செட்டிநாய்க்கன்பட்டி கிராமத்தில் புல எண் 633 இன்ன பிற எண்களில் அடங்கிய 259.69 ஏக்கர் பரப்பு கொண்ட பட்டா நிலத்தையும் அதே கிராமத்திலே வேறு ஒரு பகுதியில் உள்ள பட்டா நிலங்களையும் சீலப்பாடி கிராமத்தில் உள்ள நிலங்களையும் இந்த மூன்று இடங்களையும் ஆராய்ந்து பார்த்ததற்குப்



பிறகு செட்டிநாய்க்கன்பட்டி கிராமத்தில் 311 ஏக்கர் நிலப்பரப்பு ஒரே இடத்தில் அமைந்திருப்பது ஏற்றது என்று கருதப்பட்டது. அந்த 311 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டபோது அங்கே பாசன வசதிகள், பயிரிடுகிற நிலைமைகள் எல்லாம் இருந்தன என்று அங்கே இருக்கின்றவர்கள் முறையீடு செய்ததன் அடிப்படையில் ஓராய்வுக்கு அந்த முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த வகையிலே, 80.69 ஏக்கர் கைவிடப்பட்டு இப்பொழுது 215.47 ஏக்கர்தான் இந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்குக் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே 311 ஏக்கர் கையகப்படுத்த எண்ணினாலும் பிறகு 80.69 ஏக்கர் கைவிடப்பட்டது. இப்பொழுது 215.47 ஏக்கர்தான் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலே நஞ்சை கையகப் படுத்தப்பட்டிருப்பது 75 சென்ட்தான். தோட்டம் 59 ஏக்கர் 7 சென்ட். அதிலே மானாவாரி 155 ஏக்கர் 1 சென்ட்; ஆக, 215.47 ஏக்கரிலே, நஞ்சை, மொத்தத்திலே 75 சென்ட்தான் வருகிறது. ஏற்கனவே, இருந்ததிலே 80.69 ஏக்கர் கைவிடப்பட்டு விட்டது. அதிலே 825 மரங்கள் இருக்கின்றன. உள்ளபடி, தகுந்த அளவிலே, பல்வேறு வசதி வாய்ப்புகள் மற்றவையெல்லாம் காணும்போது, இந்த இடத்தைவிட்டால் வேறு இடம் இல்லையென்ற நிலை ஏற்படுகிற காரணத்தால்தான், வேறு வழியில்லாத நிலையில் இந்த 215 ஏக்கரையும் கையகப்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது.

(முற்பகல் 10-10)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் ரொம்ப விளக்கமான பதிலைக் கொடுத்திருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம் அந்த இடத்திலே ஏற்பட வேண்டியது நியாயம் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஆனால், இந்த மாதிரி நிலைமை பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. சாதாரண மக்கள் வீடு கட்டுவதற்கு வாங்கிய நிலத்தைக் கூட திருப்ப ஆர்ஜிதம் பண்ணி வாங்குவது நடந்து வருகிறது. அப்படிப்பட்ட நிலைமை வராமல் இருப்பதற்கும் இப்பொழுது அந்த இடத்திலே எடுக்கப்பட்ட இடங்கள் தோப்பு

நிலம் என்றால் சில இடங்களில் நஞ்சை பூமியைவிட, நெல் விளையக்கூடிய பூமியைவிட, அதிகப்படி பலன் கொடுக்கக்கூடிய கிணறு உள்ள தோட்ட பூமி எடுக்கப்பட்டது. இப்படி எடுக்கப் பட்டதில், அந்த நிலச் சொந்தக்கார விவசாயிகளுக்கு என்ன நஷ்டஈடு அல்லது வேறு தகுந்த நிலம் அல்லது அவர்கள் விவசாயம் செய்வதற்கான ஏற்பாட்டை அரசு செய்துள்ளதா? அப்படிப்பட்ட உதவி அவர்களுக்குச் செய்து அவர்கள் குடும்பம் அழியாமல் இருக்க பாதுகாப்பு செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றிய முழு விவரக் குறிப்புகள் என்னிடத்திலே இல்லையென்றாலும் அதற்கெல்லாம் சிலபல வரைமுறைகள் இருக்கின்றன. அந்த வரைமுறைகள் அடிப்படையிலே அவர்களுக்கு நட்டயீடு வழங்கப்படுகின்றது. அந்த நட்டயீட்டை, கணக்கின் அடிப்படையிலே அளிக்கின்ற பொழுது அதை வாங்குகின்றவர்களுக்குப் போதுமான அளவுக்குத் திருப்தி ஏற்படவில்லையென்றால் அவர்கள் மேல் முறையீடு செய்கிறார்கள். அப்படி மேல்முறையீட்டின் அடிப் படையில் ஆராய்ச்சி செய்த பிறகும் திருப்தி ஏற்படவில்லை யென்றால், அவர்கள் வழக்குமன்றங்களுக்குச் செல்லவும் வாய்ப்பு இருக்கிறது. வழக்குமன்றங்கள் பிறகு அவார்டு செய்கிறார்கள். அந்த அவார்டு செய்கின்றபொழுது, அவர்கள் கணக்கிட்டு கூடுதலாக தர வேண்டுமென்று அரசுக்கு ஆணையிடும்போது, அப்படிக் கூடுதலாக அரசு தருகின்றது. சில சமயங்களில் அவார்டு தருகின்றபொழுது நீதிமன்றம் ஒத்துக்கொள்கிறது. சில சமயங் களில் கூடுதலாகத் தரவேண்டுமென்று சொல்கிறார்கள். கூடுதலாகத் தர வேண்டுமென்று சொல்கின்றபொழுது மறுபடியும் மேல்முறையீடு நாங்கள் செய்வதில்லை. அந்த அவார்டை நாங்கள் ஏற்றுக்கொண்டு செய்கிறோம். அப்படிப்பட்ட நடைமுறைதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.



### நடப்பு ஆண்டில் தமிழகத்தில் வறட்சி நிவாரணத் தொகை

159—(*வினா எண் 11848)—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நடப்பு ஆண்டில் தமிழகத்தில் நிலவிய வறட்சிக்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நிலவிய வறட்சிக்காக குடிநீர் திட்டங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கும் மொத்தம் ரூ. 10,539.81 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**திரு. சி. பழனிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நடப்பு ஆண்டில் வறட்சி என்று அறிவிக்கப்பட்டிருந்தும் நில வரி வசூல் செய்துள்ளார்கள். ஆகவே, அந்த நிலவரியைத் தள்ளுபடி செய்து, மேலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கிணற்றை ஆழப்படுத்த போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமல் பல ஊராட்சி ஒன்றியங்களிலே நிதிப் பற்றாக்குறையினால் எந்தக் காரியமும் செய்யவில்லை. ஆகவே, இந்த ஆண்டு வறட்சியிலே இந்தப் பணிக்கு ஒதுக்கித் தர இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஏற்பட்டிருக்கிற வறட்சியைப் பொறுத்து எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை களைப் பற்றியெல்லாம் இந்த அவையிலே ஆளுநர் உரைக்குப் பதில் உரை தருகின்றபொழுது ஓரளவுக்கு நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அந்த, அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை யிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வப்போது நிதியையும் நாம் தேவையான அளவுக்கு ஒதுக்கீடு செய்து வருகிறோம். இப்படிப்பட்ட அடிப்படை பிரச்னைகளிலே கவனம் செலுத்தி, அவர்கள் அனுப்புகின்ற அறிக்கையின் அடிப்படையில், வருவாய்த் துறையும் அரசும் தக்க முடிவெடுத்து வருகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதிகளாகக் கணக்கெடுக்கப்பட்டு, அதற் காக நிதிகளை ஒதுக்கி செலவிடுவதில் ஆண்டினுடைய மழை அளவை கணக்கெடுத்து 16 மில்லி மீட்டருக்கும் குறைவாக மழை பெய்திருக்கிற பகுதிகள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப் படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிற செங்கிப்பட்டியில் ஆண்டு முழுவதும் 16 மில்லி மீட்டருக்கும் குறைவாக மழை பெய்திருக்கிறது. இருந் தாலும் அங்கு வறட்சி நிவாரணப் பணிகள் நடக்கவில்லையென் பதை அரசு அறியுமா? அதற்கு உரிய நடவடிக்கையெடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் பொழுது வரித்தள்ளுபடி அளிக்கிற வகையிலும், அதுபற்றி நிவாரணப் பணிகளை மேற்கொள்கிற முயற்சிகளிலும் ஈடுபடுகிறபொழுதும் ஆங்காங்கே பெய்துள்ள மழையினுடைய அளவு, அங்கே ஏற்பட்டிருக்கிற தன்மைகள், அங்கே ஏற்பட்டி ருக்கிற வேலையின்மை, உற்பத்தியினுடைய தன்மை ஆகியவற்றை யெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் நாம் செய்து கொண்டு வருகிறோம். சென்ற ஆண்டு மத்திய அரசு நமக்கு அனுமதித்த தொகை 31 கோடி ரூபாயாக இருந்தாலும் 105 கோடியே 39 லட்சம் ரூபாய் அளவிற்கு நாம் செலவு செய்திருக் கிறோம். அதிலே குடி தண்ணீர் வகைக்கு மட்டும் 24 கோடியே 48 லட்சம் ரூபாயும், வேலை வாய்ப்பிற்கு மட்டும் 80 கோடியே 92 லட்சம் ரூபாயும் நாம் செலவழித்து இருக்கிறோம். தேவை களுக்கு ஏற்ற அளவிற்கு அரசு அவ்வப்போது ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆங்காங்கே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவ்வப்போது அரசுக்கு தெரி வித்து வருகிறார்கள்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, வறட்சிப் பணி களுக்காக மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெறுகிற போது அது மானியமாகப் பெறப்படுகிறதா? இல்லையென்றால் முழு மானிய மாகப் பெறுவதற்கு அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய குழுவினர் வந்து ஆராய்ந்து அவர்கள் இந்த அளவிற்கு அனுமதி தருகிறார்கள் என்று ஒரு தொகையைத் தருவார்கள். ஆண்டுதோறும் மார்ஜினல் தொகை யென்று பட்ஜெட்டிலே ஒரு தொகையை ஒதுக்குகிறோம். அந்தத் தொகையைக் கழித்துக் கொண்டு மீதி தொகையிலே 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாகவும் தருவார்கள். அந்த அடிப்படையிலே தான் வறட்சியைப் பொறுத்த வரையிலும் தருவார்கள். வெள்ளமாக இருக்குமானால் 70 சதவீதம் மானியம், 30 சதவீதம் கடனாக இருக்கும். வறட்சியென்றால் 70 சதவீதம் கடன், 30 சதவீதம் மானியம்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஆண்டுதோறும் வறட்சி ஏற்படுவதும் அதற்கு நிவாரணம் அளிப்பதும் தவிர்க்கமுடியாத ஒரு நிலைமையாக தற்போது இருந்து வருகிறது. இப்போதிருக்கிற முறைகளின்படி வறட்சி ஏற்பட்ட பிறகு அரசு நிலைமைகளைப்பற்றி ஆராய்ந்து, நிலை மைகளைப் பற்றி தகவல் பெற்று, அதற்கு பிறகு அறிக்கை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசு ஒரு குழுவினை அனுப்பி அவர்கள் நிலைமைகளை ஆராய்ந்து நிதியொதுக்கம் செய்யப்படுகிறது. இந்த நடைமுறை கால தாமதத்திற்கு வழி வகுப்பதால் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காக வருவாய்த் துறையிலே 'ஸ்டேட் லெவல் மானிட்டரிங் செல்' என்று ஒரு கண்காணிப்புக் குழுவை ஆரம்பித்து, ஒரு மையத்தை ஆரம்பித்து அவ்வப்போது இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து அரசுக்கு உடனுக்குடன் தகவல் தெரிவித்தால் வறட்சிப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு, காலதாமதத்தை தவிர்ப்பதற்கு இயலும். அப்படிப்பட்ட ஒரு கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்துவதற்கு அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலப்போக்கில் பருவக் கோளா றுகள். பருவத்தின் நிலைமைகள் எப்படி இருக்கும் என்பதை

வானிலை ஆராய்ச்சி மையங்களும், புவியியல் ஆராய்ச்சி மையங்களும், மத்திய அரசினைச் சார்ந்திருக்கிற நிலையங்களும் அவ்வப்போது ஆராய்ந்து வருகின்றன. என்னதான் ஆராய்ந்தாலும் ஒரு மூன்று மாதம் அளவிற்கு, நான்கு மாதம் அளவிற்கு தான் அவர்கள் கணித்துச் சொல்லமுடியுமே தவிர, இரண்டு ஆண்டுக் காலத்திற்கு ஜோஸ்யம் சொல்கிற அளவிற்கு எந்த ஆராய்ச்சி நிலையமும் எடுத்துச் சொல்ல முடியாது. வேண்டுமானால் பஞ்சாங்கத்தைப் பார்த்து சொல்லலாமே தவிர, வேறு எந்த வகையிலும் சொல்ல முடியாது. அறிவியல் அணுகுமுறையில் பார்த்தால், இருக்கிற சூழ்நிலைகள் மற்றவைகள் எல்லாம் வைத்து பார்க்கிறபோது ஒரு நான்கு மாத, ஐந்து மாத காலத்திற்குத் தான் இருக்கிற சூழ்நிலைகளை வைத்து முன்னெச்சரிக்கையாகச் சொல்வார்கள். அப்படி முன்னெச்சரிக்கையாக எடுத்துச்சொல்கிற கணக்கை வைத்து தான் மத்திய அரசிலும், மாநில அரசிலும் பல்வேறு முன்னேற்பாடுகளை நாம் செய்கிறோம். அந்த முன்னேற்பாடுகளில் அரசும். அரசைச் சார்ந்த வருவாய்த் துறை, வளர்ச்சித் துறைகள், ஊராட்சி ஒன்றியங்களும் மற்றவைகளும் செயல்முறைகளில் ஈடுபடவேண்டியவைகளாக இருக்கின்றன. இதற்குத் தனி செல் அமைக்க வேண்டிய அவசியம்

(முற்பகல் 10-20)

இல்லை. ஆனால் அதற்கான திட்டங்கள் என்று வருகிறபோது, யார் யாரை எந்தந்தப் பொறுப்பிலே ஈடுபடுத்தவேண்டுமோ அதிலே ஈடுபடுத்த ஏற்கனவே மெஷினரிகள் இருக்கின்றன; இயந்திரங்கள் இருக்கின்றன. அதை நாம் உபயோகப்படுத்தவேண்டும் என்கிற அளவிற்குதான் இப்போது நிலைமை இருக்கிறது. இதற்கு என்ற ஒரு தனி செல் வைத்தால், தனிச் செலவு ஆகுமே தவிர, இதனால் உருப்படியான பலன் எதுவும் ஏற்படாது. எனவே இதற்கு என்று இயந்திரங்கள் மற்ற அமைப்புகள் எல்லாம் இருக்கின்றன.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு மத்திய அரசுக்கு 357 கோடி ரூபாய் அளவிற்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறது. அப்படி கேட்டு ஒரு மாதத்திற்கு மேலாகிறது.



ஆனால் இதுவரையில் நிபுணர் குழு மத்திய அரசிடமிருந்து அனுப்பப்படவில்லை. எனவே உடனடியாக துரிதமாக வேலை நடப்பதற்கு, தமிழக அரசு 150 கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கி வறட்சி நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு நாம் கணக்குகள் எல்லாம் கொடுத்து இருப்பது, அவர்கள் குழுவினரை அனுப்பி, அவர்கள் வந்து ஆராய்ந்து நமக்கு கணக்குகள் தெரிவிப்பதற்கும், அவர்களுடைய பதவியை பெறுவதற்காகவும்தான். ஆனால் அந்தப் பணிகள் எந்தவகையிலும் தடைப்படுவதில்லை. செய்யப்படவேண்டிய பணிகள் முறைப்படி செய்யப்பட்டுக் கொண்டேயிருக்கும். அவர்கள் கொடுக்கின்ற உதவி ஓரளவிற்கு நமக்கு ஒத்துழைப்புத் தருவதாக அமையுமே தவிர, நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, சென்ற ஆண்டு ஏற்பட்ட வறட்சியின்போது, நாம் செலவழித்தது 105 கோடியாக இருந்தாலும், அவர்கள் தந்தது சில பல கோடிகள்தான். மீதியை நாம்தான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியது வரும். அதிகம் தந்தால் நமக்குக் கொஞ்சம் சுமை குறையும். குறைவாகத் தந்தால் நமக்குக் கொஞ்சம் சுமை கூடுமேதவிர, அதற்காக, இந்தப் பணிகள் எந்த வகையிலும் தடைபடாது. நாம் தான் பொறுப்பேற்று தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே அவர்கள் விரைவிலே குழுவை அனுப்பவேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். மத்திய அரசு அதற்கான அளவிற்கு ஆராய்ந்து பார்த்து, அதற்கான நடவடிக்கைகளை முறைப்படி எடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் வறட்சி ஏற்பட்டபோது, விவசாயக் கூலிகளுக்கு இலவச வேஷ்டி, சேலை வழங்கும் திட்டம் இருந்தது. இப்போது அந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா? மத்திய அரசின் வறட்சி நிவாரணக் குழு எப்போது வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் வறட்சி நிவாரணக் குழு எப்போது அனுப்பப்படும் என்பதை மத்திய அரசு ஆய்வு செய்து முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் தெரிய வரும். அதைத்தான் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று ஏற்கனவே நான் குறிப்பிட்டேன். மற்ற விளைவுகளைப்பற்றி. சூழ்நிலைகளைப் பொறுத்து அரசு முடிவு எடுக்கும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வறட்சிப் பகுதிகளாக அறிவித்த இடங்களில், அடிக்குழாய்கள், ஆழ்துளைக் குழாய்கள் போடுவதில் மூன்றில் ஒரு பங்குதான் போடப்பட்டு இருக்கிறது. மீதமுள்ளவற்றைப் போடுவதைப் பற்றி நகராட்சியிலோ ஊராட்சியிலோ கேட்டால், இன்னும் அதற்கான நிதி ஒதுக்கீடு வரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே அவைகள் எப்போது போடப்பட இருக்கின்றன? இது தவிர, இன்னின்ன மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று ஏற்கனவே அறிவித்ததைப் போல், இப்போது அறிவிக்க இன்னும் ஏன் தாமதம் ஆகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே. எந்த ஒரு காலத்திலேயும், எந்த ஒரு தன்மையிலேயும் கெசட்டிலே இது வறட்சி மாவட்டம், இது வறட்சிப் பகுதி என்று அறிவித்ததே இல்லை. அவரவர்கள் பத்திரிகையிலே, இது வறட்சி மாவட்டம், வறட்சி, வறட்சி என்று சொல்கிறார்களே தவிர, இடத்தைப்பற்றி எந்த ஒரு காலத்திலேயும் ஒரு அனௌன்ஸ்மென்ட் என்ற வகையில், வறட்சி மாவட்டம் என்று சொல்வதில்லை. ஆனால் வறட்சிக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்கிறபோது, அதற்கான நார்ம்ஸ் இருக்கின்றன. அந்த நார்ம்சினுடைய அடிப்படையிலே ஆங்காங்கு பணிகளை மேற்கொண்டு வருவார்கள் என்று நாம் எடுத்துச்சொல்லி வருகிறோம். ஆகவே 50 சதவீதத்திற்குக் குறைவாக விளைச்சல் இருந்தால், வரித் தள்ளுபடி செய்யலாம், அதுவும் எங்கெங்கு உண்டோ, அந்த இடத்திலே தான் செய்யலாம் என்று பொதுவாக



அந்த வறட்சி நிவாரணப் பணிகள் இருக்கின்றன. குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிற இடத்திலே, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெறவேண்டும். ஆகவே எந்த ஒரு இடத்தையும், இது வறட்சிக்கு உரிய பகுதி, இது வளமான பகுதி என்று படத்தைப் போட்டு சரிக்கட்டி விட முடியாது. ஒரு பகுதி முழுவதும் வறட்சி என்று சொல்லிவிடவும் முடியாது. ஆனால் அப்படிப்பட்ட நிலைமையில், ஆங்காங்கு என்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ, அதை எடுக்கின்ற தன்மைதான் இருக்கிறது. பொதுவாகச் சொல்கிறபோது, மேலெழுந்தவாரியாக நாம் சொல்கிறோமே தவிர, பொதுவாக தமிழ்நாடு முழுவதும் வறட்சியாக இருக்கிறது, பல்வேறு மாவட்டங்கள், பெரும்பாலான மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன, இன்னின்ன மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்று சொல்கிறோமே தவிர, கெசட் நோட்டிபிகேஷன் மூலமாக இது வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அறிவிக்கப்படுவதில்லை. எனவே நிவாரணப் பணிகள் அதற்கு ஏற்றாற்போல் எடுக்கப்பட்டு வருகின்றன.

## பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை

**160—(* வினா எண் 881)—திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை அருகில் இருந்த தாலுக்கா அலுவலகம் புதிய வளாகத்திற்கு மாற்றப்பட்டு இருப்பதால், பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான அந்தப் பழைய தாலுக்கா அலுவலகக் கட்டிடம் மற்றும் உள்ள காலி இடங்கள் சேர்ந்து 2 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தை மருத்துவ மனை விரிவாக்கத்திற்கு எடுக்கவேண்டி, பொதுமக்கள் வேண்டு கோளின்படி, மாவட்ட மருத்துவ அதிகாரி, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதி, அது தற்போது பொதுப்பணித் துறையிடம் நிலுவையில் உள்ளது. இது குறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து, மருத்துவமனைக்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டு இருக்கிற 12 படுக்கைகள் கொண்ட கட்டி டத்தைக் கட்டி அந்த இடத்தைப் பெற்றுத்தர அரசு முயலுமா? அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற இடம் பொதுப்பணித் துறைக்கு சொந்தம் என்று சொல்லு கிறார்கள். அதில் வருவாய் துறை அலுவலகம் இருந்து அதற்கு சொந்தம் என்று சொல்லுகிறார்கள். அதை வருவாய் துறையிட மிருந்து மருத்துவத் துறைக்கு மாற்றிக்கொடுத்தால் ஒழிய, அங்கே கட்டிடம் கட்ட இயலாது. அதுபற்றி அறிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை. இதுபற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு கூட நமது மாநிலத்தில் ராசிபுரத் தினைப் பொறுத்து இப்படி ஒரு செயற்குறிப்பு இருந்து, அப்படி இட மாற்றம் செய்து கொடுத்து இருக்கிறார்கள், மருத்துவ மனையை விரிவு படுத்துவதற்கு. ஆகவே அதை முன் மாதிரியாகக் கொண்டு அந்த இடத்தில் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்து





வதற்கு தமிழக அரசும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன் மாதிரி தேவையில்லை. மருத் துவமனையை விரிவுப்படுத்த வேண்டும் என்று சொன்னால் போதும். அந்த இடம் பொதுப் பணித்துறையின் இடமாக இருந் தாலும், வருவாய்த்துறையின் இடமாக இருந்தாலும், வேறு எந்த ஒரு துறையின் இடமாக இருந்தாலும் தேவைப்பட்டால் அந்தத் துறை இணக்கம் தெரிவித்தால் எடுத்துக்கொள்வதில் தவறு எதுவும் இல்லை.

## கடையநல்லூர் அரசு மருத்துவமனை.

**161—(* வினா எண் 9183)—திரு. தெ. பெருமாள் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனை யில் படுக்கை வசதிகள் அதிகமாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இட மில்லை.

**திரு. தெ. பெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அரசு மருத்துவ மனையான இது குறைந்த படுக்கை வசதிகளைக் கொண்டதாக இருக்கிறது. இன்றையதினம் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக ஏறத்தாழ 1 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை அங்கே இருப்பதால் அங்கே செல்லுகின்ற நோயாளிகள் அந்த ஆஸ்பத்திரியில் படுக்கை வசதி இல்லாமல் பாயிலும், தரை யிலும் படுத்துக்கொண்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்கள்.

ஆகவே இந்த நிலையை மாற்ற இந்த 'ஆண்டிலாவது கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 54. ஆனால் சராசரியாக தினம் அங்கே படுக்கைகளில் இருந்து சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 95 என்று புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. இந்த மருத்துவ மனையில் மட்டும் அல்ல, எல்லா மருத்துவ மனைகளி லும் இதே நிலைமை தான் இருக்கிறது. நிதி ஆதாரத்திற்கு ஏற்ப தான் படுக்கைகளின் எண்ணிக்கையை நாம் விரிவு ஆக்க முடியும். ஆனால் இது போன்ற அவசரமான நேரங்களில் சில சமயங்களில் பாய் போட்டு மருத்துவம் செய்ய வேண்டிய அவசியம் கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது.

### திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையை விரிவுபடுத்தல்

**162—(* வினா எண் 9622)—திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் அரசு பொது மருத்துவ மனையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் உள்ள மருத்துவமனை தாலுக்கா தலைமை மருத்துவ மனையாக இருக்கிறது; மிகப் பழமையான மருத்துவமனையாக இருக்கிறது. அங்கு நாள்தோறும் ஏறக் குறைய 2 ஆயிரம் புறநோயாளிகளுக்கும் அதிகமாக நோயாளிகள்



வந்து அங்கே சிகிச்சை பெறுகிறார்கள். மேலும் விரிவுபடுத்த அதற்கு போதிய இட வசதியும் இருக்கிறது. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை கருத்தில் கொண்டு அங்கு புதிய வார்டுகளை அமைக்க ஆலோசனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மருத்துவமனை 156 படுக்கை களைக் கொண்ட மருத்துவமனையாக இருக்கிறது. அங்கு உள் நோயாளிகள் 180 பேர் தங்கி மருத்துவம் பெற்று வருகிறார்கள். சராசரியாக வெளி நோயாளிகளின் வருகை எண்ணிக்கை 2 ஆயிரம் பேர் வருகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. 1,200 பேர் தான். இருந்தாலும் அங்கே மேலும் இடம் காலியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இடம் காலியாக இருக்கிறது என்பதற் காகக் கட்டிடங்களை கட்டிவிட முடியாது. நிதி ஆதாரங்களை பார்த்து புதிய கட்டிடங்களை கட்ட மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே புற நோயாளிகளுக்கு சிகிச்சை பார்க்கும் டாக்டர்கள் ஒரு சிறிய அறையில் ஒரே மேஜையில் சுற்றி 10 மருத்துவர்கள் உட்கார்ந்து அந்த புற நோயாளிகளை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது போல் 1,200 புற நோயாளிகளை சிறிய அறையில் உட்கார்ந்து கொண்டு சிகிச்சை பார்த்து வருகி றார்கள். இந்த நிலையை கருத்தில் கொண்டாவது அந்த புற நோயாளிகள் சிகிச்சை பிரிவை மேலும் விரிவுபடுத்தி அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடியவே முடியாது என்று சொல்ல வில்லை. தற்சமயம் இல்லை என்று தான் சொன்னேன். நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப நிச்சயமாக கவனிக்கப்படும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, திருப்பத்தூரில் உள்ள அந்த மருத்துவமனை தாலுக்கா தலைமை மருத்துவமனையாக இருப்பதால் அங்கே அதிக அள வுக்கு புற நோயாளிகள் வருகிறார்கள். இதுவரையில் அங்கே ரத்த சேமிப்பு நிலையமோ அல்லது ஸ்பெஷல் வார்டோ இல்லை. ஆகவே அவைகளை அமைக்க ஏதாவது செயற்குறிப்பு இருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகள் தற்போது இல்லை. இருந் தாலும் தாலுக்கா தலைமை மருத்துவமனை என்ற காரணத்தால் இவைகளைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

## விக்கிரமசிங்கபுரம் அரசு மருத்துவமனை.

163—(* வினா எண். 9666)—திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை.

(முற்பகல் 10-30)

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் ஏறத் தாழ 65,000 மக்கள் வசிக்கின்றார்கள். இந்த மருத்துவமனை யானது குறைந்த படுக்கைகளைக் கொண்ட, சிறிய மருத்துவமனையாக இருக்கிறது. மேலும் இந்தப் பகுதியிலே தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கின்றார்கள். தனியார் மருத் துவமனை என்று இங்கு ஒரு மருத்துவமனையும் கிடையாது.



ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு, அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்த இனியாவது அமைச்சரவர்கள் நடவ டிக்கை எடுப்பார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அங்கு புற நோயாளிகளுக்கு ஏற்ற படுக்கை வசதிகள் இல்லை. அதனால் படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சிவகிரி சுமார் 1½ இலட்சம் மக்கள் தொகை கொண்ட இடம். சிவகிரி மருத்துவமனை அரசு மருத்துவ மனையாவதற்கு எல்லா மருத்துவப் பிரிவுகளும் வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களிடம் ஏற்கனவே மனுக்கள் கொடுத்துள்ளேன். ஆகவே இந்த நிதியாண்டிலாவது எல்லா மருத்துவப் பிரிவு களையும் அமைக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனி யாகக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தருகிறேன்.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் டி.எம்.ஓ. ஆபீஸ் பெரியகுளத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு அட்மினிஸ்ட்ரேடிவ் பிளாக் ஒன்று கட்டாது இருப்பதனால் அங்குள்ள அட்மினிஸ்டிரேஷன் சரியாக இயங்காத நிலையிலுள்ளது. அந்த அட்மினிஸ்டிரேடிவ் பிளாக்கை சீக்கிரம் முடித்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்கவும்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் ஒரு பெரிய தாலுக்கா சென்டர். அங்கு 17,500 மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில், பல கிராமங்களிலிருந்து மக்கள் மருத்துவமனைக்குச்

செல்லவேண்டுமென்றால், கிட்டத்தட்ட 30 மைல் செல்ல வேண்டி யிருக்கிறது. அங்கேயிருக்கிற அரசு மருத்துவமனை 4 படுக்கை களைக் கொண்டது. 4 ஆண்டுகளாக விரிவுபடுத்தவேண்டுமென்று கேட்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டி லாவது அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** விக்கிரமசிங்கபுரத்தைப் பற்றி கேள்வி கேட்டுவிட்டு, சாத்தான்குளத்தைப் பற்றிக் கேட் டால் பதில் தருவதற்கு ஏதும் விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

**உத்திரமேரூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான தங்கும் விடுதி.**

164—(* வினா எண். 9842)—**திரு. க. நரசிம்மபல்லவன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக தங்கும் விடுதி ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) உத்திரமேரூரில் பிற்படுத் தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக புதிய விடுதி தொடங்கும் உத்தேசம் ஏதுமில்லை.

**திரு. க. நரசிம்மபல்லவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நிறைய பிற்படுத்தப்பட்ட மாண வர்கள் படிக்கின்ற காரணத்தால், மேலும் பரிசீலித்து அமைத்துத் தரவேண்டும். மேலும் விடுதியில் தங்கி படிக்கின்ற மாணவர் களின் பராமரிப்புக்காகக அரசு என்ன உதவிகளைச் செய்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூரைச் சுற்றி இருக்கின்ற ஊர் களில் ஏற்கனவே விடுதிகள் இருக்கின்ற காரணத்தால் தற்சமயம் உத்திரமேரூரில் விடுதி அமைக்கும் உத்தேசம் இல்லை. உத்திர மேரூரில் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி ஒன்று இருக்கிறது. அந்த விடுதியில் 9 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். தனியாகக் கேள்வி போட்டால், மற்ற விவரங்கள் தரப்படும்.

**நத்தம் தொகுதியில் புதிய மருத்துவமனை**

165—(* வினா எண் 11798)—**திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி நத்தத்தில் மருத்துவமனை கட்டித்தர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை.

**திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4, 5 பேர்கள், அவர்கள் தொகுதிக்கு மருத்துவ மனை கேட்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சரவர்கள் இல்லை, இல்லை என்று சொல்கிறார்கள். இது அரசு மருத்துவமனை பற்றியது. மக்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காகவாவது அமைச்சரவர்கள் இரக்கப்பட்டா வது, இந்த நத்தத்திலே மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தர வேண்டும். காரணம், பிள்ளையார் நத்தத்திலிருந்து விழிநத்தம், மதுரை, திண்டுக்கல், மேலூர் அவசர சிகிச்சைக்கு செல்ல வேண்டு மென்றால் 80 கிலோ மீட்டர் செல்லவேண்டும். மதுரைக்கோ, மேலூருக்கோ செல்ல வேண்டுமென்றாலும் அதிக தூரம் இருக் கின்ற காரணத்தால், ஏழை எளிய மக்கள் அவசரமாக நோயாளி களை அழைத்துச் செல்ல வேண்டுமென்றாலும் ரொம்ப சிரமமாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சரவர்கள் நத்தத்திலே 40 படுக்கைகள் கொண்ட ஒரு அரசு மருத்துவ மனையை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் வைக்கிறார்கள். இப்போது இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை, உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவது பற்றி அரசாங்கம் விரைவிலே ஆணை பிறப்பிக்க இருக்கிறது. அரசு மருத்துவமனையாக ஆக்குவதற்கு தற்சமயம் உத்தேசம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் நிதியாதாரத்திற்கேற்ப முடிவு எடுக்கப்படும்.

**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஹெல்த் சென்ட்டரையாவது அரசு மருத்துவமனையாக மாற்றி அங்கு உடனடியாக அந்த அரசு மருத்துவமனையை அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இப்படி ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனையாக மாற்றலாமா என்பதுபற்றி ஏற்கனவே அரசு ஒரு முடிவு எடுத்தது. ஆனால் ஆரம்ப சுகாதார நிலையமாக இருக்க வேண்டுமென்று, பல பேர்கள் அதை அரசு மருத்துவமனையாக ஆக்க வேண்டாம் என்று பிடிவாதமாக இருந்தார்கள். அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்கலாம் என்றால் அதற்கும் மக்களிடமிருந்து பல இடங்களிலிருந்து ஆட்சேபணை வந்தது. இதுபற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். பி. மணவாளன்:** தலைவர் அவர்களே. அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றக்கூடிய பகுதி மக்கள் விருப்பத்தை அரசு நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மக்கள் விருப்பத்தை மட்டும் நான் கவனிக்க முடியாது. எனக்கு இருக்கின்ற காரிஸ்டம் நிதியமைச்சர் விருப்பத்தையும் நான் கவனிக்க வேண்டியிருக்கிறது



**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் கூட பெண்ணாகரம் தாலுக்கா 8 வருடங்களாக தாலுக்காவாக இருக்கிறது. அங்கே அரசு மருத்துவமனை இருக்கிறது. ஆனால் படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக இல்லை. அங்கே புற நோயாளிகள் தான் வந்து செல்லுகிறார்கள். பெண்ணாகரம் ஒன்றியம் ஒரு மலைப்பகுதி ஒன்றியமாக இருப்பதால் அந்த பெண்ணாகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையை, படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக ஆக்கித்தர அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரோடு நானும் அனுதாபப்படுகிறேன். ஆனால் மாண்புமிகு நாவலர் அவர்கள் இணக்கம் தெரிவிப்பார்களானால் அதற்கு ஆட்சேபணை இருக்காது. ஆனால் தற்சமயம் நிதியாதாரத்தைப் பொறுத்து இந்த ஆண்டு எங்கே துவக்கலாம் என்பது பற்றி அரசு முடிவு எடுக்கும்.

### சாத்தான்குளத்திலிருந்து கோயம்புத்தூருக்கு திருவள்ளுவர் பேருந்து.

**166—(* வினா எண். 3443)—திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளத்திலிருந்து திருச்செந்தூர் வழியாக கோயம்புத்தூருக்கு திருவள்ளுவர் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய செயற்குறிப்பேதும் இல்லை.

**திரு. எஸ். என். இராமசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற் குறிப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் சாத்தான்குளம், திசையன்விளை, உவரி,

உடன்குடி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பழனி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளில் வர்த்தகம் செய்து வருகிறார்கள். அவர்கள் போய் வருவதற்கு மிகவும் சிரமமாக இருப்பதால் இந்த திருச்செந்தூர்-கோவை பேருந்து வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அவர்களுடைய நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக இந்த சூப்பர் டீலக்ஸ் பஸ் ஒன்றை விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கனவே, உடன்குடியிலிருந்து கோவைக்கு ஒரு பேருந்து இயக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆனால் உடன்குடிக்கு நீங்கள் கேட்கின்ற சாத்தான்குளத்திலிருந்து ஏறத்தாழ ஒரு நாளைக்கு 34 முறை—அது 14 கிலோ மீட்டர் தூரம் உள்ளது—7 பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. எனவே, அந்த பேருந்துகளில் வந்து கோவை பேருந்திலே போவது சிரமமாக இருக்காது. எனவே, இது நல்ல வசதியோடு இருக்கிறது என்று தான் கருதுகிறேன்.

**திரு. எஸ். என். இராமசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுவதைப்போல் அது நல்லதாக இருந்தாலும் அங்கு இரயில் வசதி இல்லாத காரணத்தினால், அங்கிருந்து சென்னைக்கு, கோவைக்கு வரவேண்டுமென்றால் நெல்லைக்கும் தூத்துக்குடிக்கும் வந்து தான் இரயில் ஏற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதன் காரணமாக இந்த பஸ் கட்டாயம் விட வேண்டுமென்று ஏற்கனவே இரண்டு ஆண்டுகளாகக் கேட்டு வருகிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதை மறு பரிசீலனை செய்து இந்த பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இது ஏற்கனவே சொன்னபடி அந்த கோவைக்கு செல்லுகின்ற பேருந்துக்கு வருவதற்கு வசதியாக இருக்கிறது. எதாவது ஒரு சென்ட்டரிலிருந்து தான் வண்டியை ஆரம்பிக்க முடியும். காரணம் இது எக்ஸ்பிரஸ் பஸ்ஸாக இருப்பதால் எல்லா ஊர்களி



லிருந்தும் ஆரம்பிப்பது என்பது முடியாத நிலையாக இருக்கிறது. அப்படி எல்லா ஊர்களிலிருந்தும் ஆரம்பிப்போமானால் இந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் என்பது தனித் தன்மையை இழந்துவிடும் என்று கருதுகிறேன். இருந்தாலும் இவ்வளவு தூரம் நீங்கள் சொல்லுகின்ற காரணத்தினால் அதை பரிசீலித்து பின்னாலே சொல்லுகிறேன்.

**திரு. சு. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே, எடப்பாடியிலிருந்து சென்னைக்கு அரசு பேருந்து விட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கும் எடப்பாடிக்கும் ரொம்ப தூரம். ஆனால் இப்போது கேட்டிருக்கின்ற அந்த கோரிக்கை ஏற்கனவே பரிசீலனையில் இருப்பதாகக் கருதுகிறேன். எனக்கு நினைவு இல்லை. தனியாக கேள்வி போட்டால் விளக்கமாகத் தருகிறேன்.

**திரு. ஆ. சந்திரசேகரன்:** தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மதுரைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலிருந்து திண்டுக்கல் வழியாக பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இது கொஞ்சம் திருநெல்வேலிக்கு பக்கமாக போய் இருக்கிறது. தனியாக அது பற்றி விவாதித்தால் சரியாக இருக்குமே ஒழிய, இந்தக் கேள்வியோடு இணைத்து கேட்கின்றபோது சரியான விளக்கம் இப்போது இருக்காது.

### ஹெல்மெட் அணியும் முறை செயற்படுத்தப்பட்டபின் ஏற்பட்ட விபத்துக்கள்.

167—(*வினா எண். 8511)—**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஹெல்மெட் ( Helmet ) அணியும்முறை செயல்படுத்தப்பட்டபின் விபத்துக்குள்ளானவர்கள் எவரேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தலைக்கவசம் அணியும் முறை செயல்படுத்தப்பட்ட பின் ஜூலை 1986 வரை தலைக்கவசம் அணிந்தும், விபத்துக்குள்ளாகி இறந்தவர்களும் காயமுற்றவர்களும் பின்வருமாறு உள்ளது :—

| | |
|---|---|
| 1. இறந்தவர்களின் எண்ணிக்கை | 111 |
| ஆண்கள் | 106 |
| பெண்கள் | 5 |
| 2. காயமுற்றவர்களின் எண்ணிக்கை | 763 |
| ஆண்கள் | 735 |
| பெண்கள் | 28 |

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தலைக் கவசம் அணிவதன் மூலமாக தலைக் காயங்களிலிருந்து தப்பிக்கமுடியும் என்றாலும் கூட, இந்தத் தலைக் கவசம் அணிவதே சில நேரங்களில் விபத்திலே மரணம் அடைவதற்கு காரணமாக இருக்கிறது என்றும் மருத்துவ நிபுணர்கள் கருத்து சொல்லியிருக்கிறார்கள். அதுபோலவே, இந்த தலைக் கவசம் அணிவது, தலை முடி உதிர்வதற்கான ஒரு நோயை உருவாக்கிவிடுகிறது என்றும் மருத்துவ நிபுணர்கள் சொல்லி இருக்கிறார்கள். எனவே, இதைக் கருத்தில் கொண்டு தலைக்கவசம் அணிகிற அந்த விதியை அரசு ரத்து செய்யுமா? இல்லையெனில், குறைந்தபட்சம் பெண்களுக்காவது விதிவிலக்கு கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மருத்துவ நிபுணர்கள் சொல்லியிருப்பதாகச் சொல்கிறார்கள். விபத்துக்கள் இந்த தலைக் கவசம் அணிந்த காரணத்தினால் தான் குறைந்திருக்கிறது என்று கூட மருத்துவ நிபுணர்கள்தான்





சொல்லியிருக்கிறார்கள். அனுபவமாகக் கூட பார்க்கிறோம். பல இடங்களில் அதன் காரணத்தினால்தான் இதை அறிமுகம் செய்திருக்கிறார்கள். இன்னொன்று, முடி உதிர்ந்து விடுகிறது என்று சொன்னார்கள். முடியை விட உயிர் முக்கியம் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் எப்படி நினைக்கிறாரோ, எனக்குத் தெரியாது. இன்னொன்று, நான் கூட தலைக் கவசம் அணிவதில்லை. ஆனால் எனக்குக் கூட அப்படி முடி கொட்டிக் கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு உதாரணம் அவரே கூட. இப்படியெல்லாம் இருக்கிற போது முடி விழுவதற்கும், இதற்கும் பெரிய சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, இதை விட்டு விடுவது என்பது, இரண்டு சக்கர வண்டிகளை ஓட்டுபவர்களுக்கு பெரிய ஆபத்தாகப் போகுமோ என்ற காரணத்தினால் தான் அரசாங்கம் இதை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கருதுகிறது. இருந்தாலும் நீங்கள் சொல்லிய கருத்துக்களை கொஞ்சம் தனியாக விரிவாகப் பரிசீலித்துப் பார்க்கலாம்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைத் தவிர, தமிழகத்திலுள்ள மற்ற நகரங்களில் இந்த ஹெல்மெட் விதிமுறையை அதிகமானவர்கள் பின்பற்றவில்லை. அதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதோடு ஒரு முறை இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் ஈ. வே. கி. ச. இளங்கோவன் ஒரு கேள்வி எழுப்புகிற போது, பெண்களுடைய கூந்தல் கலையாமல் இருக்கின்ற அளவுக்கு ஹெல்மெட் தயாரிக்கப்படுமா என்று கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தயாரிக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரை தாய்க்குலத்தினுடைய கூந்தல் கலையாமல் இருக்கின்ற அளவுக்கு ஹெல்மெட் தயாரிக்கப்பட்டு இருக்கின்றதா? அப்படி தயாரிக்கப்பட்டிருந்தால், எத்தனை விற்பனை ஆகியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் அப்படிச் சொன்னதாக எனக்கு நினைவு இல்லை. அதற்கான ஏற்பாடுகளை அது சம்பந்தப்பட்டவர்கள் செய்யலாம். இதுவே கூட அவர்களுக்குத் தெரிந்தால் அதைச் செய்வதற்கு வாய்ப்பு

இருக்கும் என்று கருதினேன். அதற்கு ஒரு உதாரணம், இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பாக நான் காரிலே போய்க்கொண்டிருக் கிறபோது ஹெல்மெட் அணிந்துகொண்டு ஒரு பெண் வண்டியை ஓட்டிக்கொண்டு போய்க்கொண்டிருந்தாள். அந்த ஹெல்மெட் டிலே பார்த்தால் பின்னாலே ஒரு வட்டமாக இருந்தது. காரணம், அவர்கள் கொண்டை அதிலே சரியாக அமை வதைப்போல் அந்த ஹெல்மெட் அமைக்கப்பட்டிருந்தது. இதைக் கருதித்தான் அலை அமைத்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, அப்படி விற்பனைக்கு வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அடுத்து, சென்னையிலே இப்போது அதிகமான காவலர்களை நாம் நியமிக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் இது கொஞ்சம் கடுமையாக்கப்பட்டிருக்கின்றது. மற்ற இடங்களில் இருக்கின்ற காவலர்கள் ஆங்காங்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய வேண்டு கோள் எல்லாம், இது அவர்களுடைய நன்மையைக் கருதி செய்யப் படுகிற காரியம். இதையே கூட, நாங்கள் செய்வதற்குத் தயா ராக இல்லை, காவல்துறை அதிகாரிகளும், அரசாங்கமும் பக்கத் தில் வந்து நின்றால்தான் அதை அணிந்துகொள்வோம் என்று சொல்வது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல. எனவே, நீங்கள் எல்லாம்கூட பார்க்கிறபோது சொல்லலாம், ஹெல்மெட் போடாமல் வண்டியிலே போகாதீர்கள் என்று. பொதுவாழ்க்கையில் வந்தபிறகு இதையெல்லாம் செய்யவேண்டும். எனவே, அரசாங்கத்தைப் பொறுத்தவரை, இதை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அவர்களும் ஒத்துழைக்கவேண்டும். அடுத்து, பெண்களுக்கு இதிலே விதிவிலக்கு வேண்டும் என்று கேட்டார்கள். விதிவிலக்கு கொடுக்கிறவரை இதிலே பிரச்சினை வராது. ஒருவேளை, பெண் களுக்கு விதிவிலக்கு கொடுத்த பின்னால், எதிர்க்கட்சி துணைத் தலைவரேகூட, எழுந்து கேட்கலாம்; அப்படியானால் பெண்க ளுடைய உயிரிலே உங்களுக்கு அக்கறை இல்லையா என்று கூடக் கேட்கலாம். எல்லோருக்கும் ஒன்றுபோல் இருப்பது நியாயமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.



**டாக்டர் அ. பொன்னுசாமி**: பெருமை பெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, ஹெல்மெட் அணிவதால் ஹெட் இன்ஜூரி தடுக்கப்படுகிறது என்பது உண்மையானாலும் ஹெல்மெட் அணிவ தால் ஏற்படுகிற செர்விக்கல் இன்ஜூரி, ஹெல்மெட் அணியாததால் ஏற்படுகிற ஹெட் இன்ஜூரியைவிட மிகவும் ஆபத்தானது. துக்க மானது, துயரமானது. இது அதிகமாக ஏற்படுகின்றது என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. ஆகவே, இதைக் கருத்திற் கொண்டு, குறிப்பாக கிராமப்புறங்களிலேயாவது இந்த ஹெல்மெட் அணிவது தடுத்து நிறுத்தப்படுமா? அதிலும் குறிப்பாக பெருந் துறைத் தொகுதியில் அது தடுத்து நிறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: தலைவர் அவர்களே, கடைசி யில் அவருக்கு நிறுத்தப்படுமா என்று கேட்காமல் விட்டார்கள். இதைப் பொறுத்தவரை, ஆய்வின்படி எங்களுக்குக் கொடுத் திருப்பது—இன்றைக்கு டாக்டர்களாக கேள்வி கேட்டுக்கொண்டி ருக்கிறீர்கள். அதே டாக்டர்கள்தான் எங்களுக்குக் கொடுத் திருக்கிற அறிக்கையின்படி ஹெல்மெட் அணிந்து செல்கிற காரணத்தினால் கீழே விழுகிறபோது தலைக்காயம் ஏற்படாமல் பாதுகாக்கப்படுகிறது, அதனால் பாதுகாக்கப்படக்கூடிய உயிர்கள் அதிகமான எண்ணிக்கையில் இருக்கின்றன, இந்த ஹெல் மெட்டை அணிகின்ற காரணத்தால் சில இடங்களிலே விபத்தின் காரணமாக சில பாதிப்புகள் ஏற்பட்டுவிட்டாலும் அது மிக குறைந்த எண்ணிக்கை என்ற வகையிலேதான் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் ஹெல்மெட் இருக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இப்போது இவ்வளவு விவாதங்களைப் பார்க்கிறபோது இதைத் தனியாக, விரிவாக ஆய்வு செய்து உண்மையிலே என்ன நிலை என்றுகூட தெரிந்து கொண்டால் சரியாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். அதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

**திரு. அ. மலர்மன்னன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே. இன்றையதினம் நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலே ஹெல் மெட் அணிவதிலே பெண்கள் ஹெல்மெட் அணியாமல் செல்லும் போது காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எவ்வளவாகக் கவனிப்ப

[1987 மார்ச் 25

தில்லை. ஆகவே, அவர்களும் அணிய வேண்டுமென்று, இந்த முறையை கடைப்பிடிக்கவேண்டுமென்று தமிழக அரசு காவல் துறையை வற்புறுத்துமா என்பதையும், ஆண்கள் இன்றைய தினம் இந்த ஹெல்மெட்டை அணிந்து செல்கின்றபோது பின்னாலே வருகின்ற ஹாரன் சப்தம் கேட்காத காரணத்தால் அவர்கள் விலகாமல் இருக்கிறார்கள். ஆகவே, ஹெல்மெட்டில் காதுகளுக்கு அருகில் துவாரங்களைப்போட்டு—இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல—கொண்டையைச் சொருகுவதற்கு ஓட்டை இருப்பதுபோல காதுப்புறங்களுக்கு ஓட்டை செய்து புதிய ஹெல்மெட்டுகளை தயாரிப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, பெண்கள் வண்டியை ஓட்டுகிறபோது கட்டாயமாக ஹெல்மெட் அணியவேண்டுமென்பதை இப்போது நாங்கள் கட்டாயப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். பின்னாலே அமர்ந்துவருகிற போது சில நேரங்களிலே அதை விட்டுவிடுகிறார்கள் என்பதில் உண்மை இருக்கிறது. இருந்தாலும் மற்றவர்கள் அவர்களாக ஒத்துழைத்தால் நன்றாக இருக்கும். பெண்களையெல்லாம் நிறுத்திவைத்து பிரச்னை ஏற்படுத்துகிறபோது இதே கேள்வியை திருப்பி தலைகீழாக நீங்கள் கேட்பீர்கள். எனவே அவர்களே ஒத்துழைத்துவிட்டால் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காது ஓட்டைகளை சில ஹெல்மெட்டுகளிலே நான் பார்த்திருக்கிறேன். சின்ன சின்ன ஓட்டைகளாகப் போட்டிருக்கிறார்கள். டாக்டர் நரேந்திரன்கூட ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள், வெளிநாட்டிலே பார்க்கிறபோது ஒரு சின்ன ஓட்டையை காது அருகிலே போட்டு, காது நல்லபடியாக கேட்கும் வகையிலே ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதை சம்பந்தப்பட்டவர்களுக்கு நாம் தெரிவிக்கலாம். தயாரிக்கும்போது அப்படி தயாரிக்கச் சொல்லலாம். காது கேட்காமல்தான் சிலர் ஒதுங்காமல் இருக்கிறார்கள் என்று நாம் சொல்லிவிட முடியாது. கார் ஹாரனை எவ்வளவு வேகமாக அடித்தாலும்கூட ஒதுங்காமல் போகக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அது அவரவர்களுடைய தன்மையைப் பொறுத்தது



1987 மார்ச் 25]

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இரண்டு சக்கர வாகனங்களில், லைட் வெய்க்கில்ஸ்
களான மொபெட், டி.வி.எஸ். 50 போன்ற, சாதாரண சைக்கிள்
களைப் போன்ற வாகனங்கள், அதாவது அதிகமான வேகம்
இல்லாமல், குறைந்த வேகத்தில் செல்லுகின்ற அந்த வாகனங்
களுக்கு மாத்திரம் ஹெல்மெட்டை அணிவதிலிருந்து விதி
விலக்கு வழங்கினால் சரியாக இருக்கும். எனவே அந்த முறை
யில் அவைகளுக்கு விதிவிலக்கு வழங்கப்படுமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இது
பற்றி விவாதிக்கப்பட்டது. நான் பார்த்திருக்கிறேன். ஹானா
வைப்பற்றியும் எனக்குத் தெரியும். இந்த வண்டியிலே போகிற
போது அதிலே போகிற ஸ்பீட் ஸ்கூட்டரிலோ மோட்டார் சைக்
கிளிலோ போகிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது.
இன்னும் சொல்லப்போனால், நகரத்திற்குள்ளே, அதிலும் சிட்டிக்
குள்ளே எவ்வளவு வேகமாகப் போகிறார்கள் என்பதை, அதிலும்
அந்த வண்டியை ஓட்டக்கூடியவர்கள் கல்லூரிகளிலே படிக்கக்
கூடிய மாணவர்கள்; அதன் காரணத்தால் அவர்கள்—ஆரம்பத்தில்
அப்படித்தான் இருக்கும்—பாதுகாப்பாகச் செல்லவேண்டுமென்
பதுதான் நோக்கமே தவிர, அரசாங்கத்திற்கு மக்களுக்கு தொந்
திரவு கொடுக்கவேண்டுமென்பது நோக்கம் அல்ல. திரு. சுப்ப
ராயன் அவர்கள்கூட அதற்கு விதிவிலக்கு கொடுத்துவிட்டால்
பரவாயில்லை என்று கருதுகிறார்கள். அவர் மொபெட் வைத்தி
ருக்கிறார் என்று கருதுகிறேன். மொபெட் வாங்கும்போது ஒரு
ஹெல்மெட்டையும் வாங்கிக்கொண்டால் நன்றாக இருக்கும் என்று
நான் அவர்களுக்கு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஹெல்மெட் அணிந்தபிறகுங்கூட இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பைச் சொன்னார்கள். ஆனால் ஹெல்மெட்டிலே இருக்கிற அந்த வாரை கட்டாத காரணத்தினாலே, சிறு மேடுகள் வந்தவுடனே ஹெல்மெட் தலையிலேயிருந்து விழுந்துவிடுகிறது. பெரிய விபத்துக்

களுக்கெல்லாம் இது ஒரு காரணமாக இருக்கிறது. இரண்டாவது, தரம் குறைந்த ஹெல்மெட்டுகளை அணிகிறார்கள். அதற்கு தரக் கட்டுப்பாட்டைக் கொண்டு வரவேண்டும். என்னுடைய துணைச் செயலாளராக இருந்த புகழேந்தி என்பவர் சாதாரண ஒனாவிலே வந்தபோது, கீழே விழுந்து அடிபட்டபோது டாக்டர் சொன்னது, அவர் மட்டும் ஹெல்மெட் அணிந்திருந்தால் நிச்சயமாக செத்திருக்க மாட்டார் என்றுதான் ரிப்போர்ட் கொடுத்தார்கள். எனவே தயவுசெய்து இந்த ஹெல்மெட் அணிவதிலே இன்னும் தீவிரம் காட்ட வேண்டும். அமைச்சர் பெருமகனார் இங்கே சொல்கிறபோது நீங்களெல்லாம் சொல்லவேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களைச் சொன்னார். நான் ஒரு தடவை இங்கே பேசுகிறபோது போக்குவரத்திலே இருக்கிற கோளாறுகளை சட்டமன்ற உறுப்பினர்கள் கண்டால் அதனை அங்கே யாரிடமாவது சொல்வதற்குரிய உரிமை இருக்கிற அளவுக்கு நீங்கள் ஒரு அமைப்பை உருவாக்கித் தருவீர்களா என்று கேட்டபோது, அப்போது அதைப் பரிசீலிப்பதாகச் சொன்னார்களா, பரிசீலித்தார்களா என்று தெரியவில்லை. இப்போது அவர்கள் சொல்வதன் மூலம் எங்களுக்கு அந்த உரிமையை கொடுப்பதாக இருந்தால் நாங்களும் உதவி செய்ய தயாராக இருக்கிறோம்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஹெல்மெட் போடும்போது பெல்ட் போட்டால்தான் பாதுகாப்பாக இருக்கும். அவர்கள் சொன்ன உதாரணம்கூட இதிலே பொருத்தமாக இருக்கிறது. ஒரு டாக்டர் டிரெயினிங்க்காக இங்கே வந்திருந்தார். வண்டியை ஓட்டிக்கொண்டு போய் இருக்கிறார். இரண்டுபேரும் ஹெல்மெட் அணிந்துகொண்டிருந்திருக்கிறார்கள். ஆனால் வண்டியை ஓட்டிச்சென்றவர் பெல்டைப் போடாமலும் பின்னாலே அமர்ந்திருந்தவர் பெல்ட் போட்டுக்கொண்டும் இருந்திருக்கிறார். அந்த இரண்டுபேருமே விழுந்துவிட்டார்கள். அதில் அந்த ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டிருந்தவர் ஹெல்மெட்டின் பெல்டைப் போடாமல் இருந்ததால் அவர் மட்டும் இறந்திருக்கிறார் என்ற செய்தி பத்திரிகையில் வந்தது. எதற்காக இதையெல்லாம் இவ்வளவு விளக்கமாகச் சொல்கிறேன் என்றால் பத்திரிகையில் இவைகளெல்லாம் வந்தால் அதைப் படித்து எல்லோரும் அப்போதாவது இந்த முறையைக் கடைப்பிடிப்பார்கள் என்றுதான் சொல்லுகிறேன். மேலும் தரமில்லாத ஹெல்மெட்டுகளை அணிந்து போகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது அவர்களுக்கே நல்லதல்ல. அவர்களே நல்லதாக உள்ள ஹெல்மெட்களை வாங்கிக் கொண்டால் நன்றாக இருக்கும். இருப்பினும் அரசாங்கமும் அவர்களுக்கு அறிவுறுத்தும் என்று சொல்லி அதைக் கண்காணிக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டும் என்றும் சொல்லிக் கொள்கிறேன்.



அடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படிப்பட்ட நிலைமைகளைப் பார்த்தால் யாரிடமாவது சொல்லி நடவடிக்கை எடுக்க ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் பொதுமக்களிடம் இப்படிப்பட்ட குறைகளைப் பார்க்கும்போது நேரடியாகவே அவர்களிடம் சொல்லி சரியாக நடந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தலாம். "இன்றைக்கு இப்படி நடக்கிறீர்கள். நாளைக்காவது ஹெல்மெட் அணிந்து கொண்டு வாருங்கள்" என்று அவர்களிடம் எடுத்துச் சொல்வதுதான் சரியாக இருக்கும். இதற்கெல்லாம் ஒரு அமைப்பை ஏற்படுத்துவது என்றால் அது கடினமாக இருக்கும். இவைபற்றிய அதிகாரம் ஏற்கெனவே பரவலாக இருக்கிறது. பொதுமக்களிடம் உங்களுக்குள்ள உரிமையை வைத்துச் சொல்லுகிறபோது அவர்களும் கேட்பார்கள். அதன் மூலம் அரசாங்கத்தின் பளுவை பாதியாவது நீங்கள் ஏற்றுக் கொள்வதாக இருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெல்மெட் அணிவதன் காரணமாக தலைவலி வருகிறது என்பதோடு அல்லாமல் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் முடி கொட்டுகிறது என்றும் சொல்லுகிறார்கள். அதைப்போலவே அதை அணியும் பெண்களும் அது அழகாக இல்லை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வேலு அவர்களுக்கு முடி கொட்டிய காரணம் வேறு. அறிவாற்றலால்தான் அவருக்குக் கொட்டிவிட்டது. (சிரிப்பு)

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** எனவே பெண்களுக்கும் அழகாக இல்லை, அது அசிங்கமாக இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். மேலும் பல ஹெல்மெட்கள் தரமுள்ளவைகளாக இல்லை என்றும் சொல்லுகிறார்கள். எனவே அரசாங்கமே விஞ்ஞான ரீதியில் முடி கொட்டாத வகையிலும், அணிந்தாலும் அழகாக இருக்கும் வகையிலும் ஹெல்மெட்டுகளைத் தயாரிக்க ஒரு தொழிற் சாலையை நிறுவுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றிற்குமே அரசாங்கம் தொழிற்சாலைகளை நிறுவிக் கொண்டே போனால் பின்னாலே மிகக் கடுமையான ஒரு சூழ்நிலைதான் உருவாகும். கடுமையான சூழ்நிலையை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும். எதையெதை யார் யார் செய்ய வேண்டுமோ அதையதை அவர்களிடம்தான் விட வேண்டும். அரசாங்கமே அப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நிச்சயமாகத் தயாராக இல்லை. நாம் எல்லோரும் சேர்ந்து ஹெல்மெட் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு "இப்படி இருந்தால் பரவாயில்லை என்றும் எப்படிப்பட்ட ஹெல்மெட்டுகளை விரும்புகிறார்கள்" என்றும் தெரிவிக்கலாம். அதைவிட யார் அணிகிறார்களோ அவர்களேகூட நேரடியாக எழுதினால் தேவையான மாற்றங்களை ஹெல்மெட்டில் உருவாக்க வாய்ப்பாக இருக்கும். எனவே அப்படிப்பட்ட ஆலோசனை அரசுக்கு இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது டாக்டர்களுடைய சிபாரிசின்பேரில்தான் ஹெல்மெட் அணிய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் எப்படி நினைக்கிறேன் என்றால்—அப்படி சிபாரிசு செய்யும் டாக்டர்கள் எல்லாம் பெரும்பாலும் காரில் செல்லுகிற டாக்டர்



களாகத்தான் இருப்பார்கள். எங்களைப் போன்ற ஏழை டாக்டர்கள் ஸ்கூட்டர் மற்றும் பைக்-கில் செல்லுகிறவர்களுக்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன. உதாரணமாக இஸ்னோபீலியா வியாதி உள்ளவர்கள் தங்கள் தலையில் ஹெல்மெட் அணிந்து பயணம் செய்யும்போது வியர்ப்பதன் காரணமாக அவர்களுக்கு ஆஸ்த்மா மற்றும் "வீசிங்" தொந்தரவுகள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. அதோடு பைக்கில் போகிறவர்கள் தலையில் பாரத்தை வைத்துக்கொண்டு போவது என்றால் சிரமமாக இருக்கும். எனவே "இவருக்கு இஸ்னோபீலியா இருக்கிறது, எனவே இவருக்கு ஹெல்மெட் வேண்டாம்" என்று டாக்டர் சர்ட்டிபிகேட் புரொட்யூஸ் செய்தால் அவர்களுக்காவது விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்கூட்டரில் போகிற டாக்டர்கள் ஒரு மாதிரியாகவும், காரில் போகிற டாக்டர்கள் ஒரு மாதிரியாகவும் அறிக்கைகள் கொடுப்பார்கள் என்று நான் நம்பவில்லை. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காரில் செல்கிற நிலைமை ஏற்படும்போது இதை நியாயம் என்று ஏற்றுக் கொள்வார்களோ என்னவோ தெரியாது. அடுத்து, இஸ்னோஃபீலியா பற்றி எனக்குத் தெரியாது. நான் டாக்டர் அல்ல. எனவே எனக்குத் தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. இப்படி ஒவ்வொன்றுக்கும் நாம் விதிவிலக்குக் கொடுத்துக்கொண்டே போனால் கடைசியில் மொத்தமாகவே விதி விலக்கைப் பெற்றுவிடுவார்கள். எனவே அது சரியல்ல. நான் ஏற்கெனவே சொன்னபடி அவர்களின் உயிர்களைப் பாதுகாக்கவே அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. அவர்களே புரிந்து கொண்டு ஒத்துழைத்தால் அரசாங்கம் இப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டு வரவேண்டியதில்லை. இதையெல்லாம் அவர்களே செய்யவேண்டும். தற்போது நம்முடைய பொதுமக்களுக்கு அத்தகைய ஆர்வம் வரவேயில்லையே என்று தான் நாம் அவர்கள்மீது திணிக்கிறோம். அவர்களுடைய நன்மைக்காகத்தான் இதைச் செய்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

திரு. வை. பாலசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடலில் தலை மிகவும் முக்கியமான பகுதியாக இருப்பதால் தலைக்குக் கவசம் அணிய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதைப்போலவே உடலில் மார்பும் முக்கியமான பகுதியாக இருப்பதால் மார்புக்கும் கவசம் அணிய வேண்டும் என்று அரசு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடம்பே முக்கியம்தான்.

திரு. வை. பாலசந்திரன்: ஆகவே, மார்புக்கும் கவசம் அணிய வேண்டும் என்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைக் கவசத்திற்கே இந்தப் பாடுபடுத்துகிறபோது உடல் முழுவதும் கவசம் அணிய வேண்டும் என்றால் என்னென்ன பிரச்சினைகள் ஏற்படுமோ. தலையைப் பாதுகாத்தால் பெரும்பாலான உயிர்களைப் பாதுகாக்க முடியும் என்றுதான் இதைச் செய்கிறோம். ஆகவே மார்புக்கு கவசம் அணியும் திட்டம் கொண்டுவரும் நோக்கம் அரசுக்கு இல்லை.

**காட்டுமன்னார்கோயில், சிதம்பரம் வட்டங்களில் சாலை பராமரிப்பை விரிவுபடுத்தல்.**

168 (*வினா எண் 9399) திருவாளர்கள் எஸ். ஜெயச்சந்திரன். கே. ஆர் கணபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் சிதம்பரம் வட்டங்களில் சாலை பராமரிப்பு விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) காட்டுமன்னார்கோவில் மற்றும் சிதம்பரம் வட்டங்களில் உள்ள அரசு சாலைகள் முடிந்தவரை நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. நிதி வசதிக்கேற்ப சாலைகள் பராமரிப்பு மேற்கொள்ளப்படும்.





திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் தாலுக்காவில் பெரும்பாலான ஆறுகள், வாய்க்கால்கள் ஆகியவற்றில் நெடுஞ்சாலைகள் அமைந்திருப்பதால் அந்த டிவிஷனுக்கு ஒதுக்கப்பட்ட பணம் போதவில்லை என்பதால் அங்குள்ள சாலைகளைச் சரியாக நிர்வகிக்க முடியவில்லை என்ற புகார் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து அதிக நிதி ஒதுக்கித் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் பரிசீலனை செய்த பிறகுதான் நிதி ஒதுக்கப்படுகிறது. எந்தெந்த இடத்திலே தன்மைகள் என்னென்ன என்பதையெல்லாம் பார்த்து நிதி ஒதுக்கும்போது பரிசீலனை செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கோரிக்கையை வைத்து வேண்டுமென்றால் போதிய அளவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதா, நிலை என்ன என்பதை தனியாகப் பார்க்கிறேன்.

**உசிலம்பட்டி பசும்பொன் கூட்டுறவுத் தீப்பெட்டி சங்கம்.**

169—(*வினா எண். 9511)—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி பசும்பொன் கூட்டுறவுத் தீப்பெட்டி சங்கம் இலாபகரமான முறையில் செயல்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி, இந்தச் சங்கம் இலாபகரமான முறையில் செயல்பட்டு வருகிறதா என்பது. "இல்லை" என்றால் இலாபம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். 'கேள்விக்கு இடமில்லை' என்று சொல்லி விடுவார்களோ என்று நினைத்தேன். ஆனால் இந்தச் சங்கம் அங்கே

இலாபகரமாக நடக்கிறது என்று சொல்லுவதற்கு முடியாத அளவிற்கு அந்த இயக்கமே இல்லாத நிலை இருக்கிறது. அதிலே கடன் பெற்றவர்கள் அத்தனை பேரும் முழுத் தொகையையும் பெறாமல் இருக்கிறார்கள். மீதமுள்ள தொகையை பெறாத நிலையில் அவர்களால் முழுமையாக அந்தச் சங்கத்தை நிர்வகித்து தீப்பெட்டிகளை தயாரிக்கக்கூடிய நிலையில் இல்லை. இப்படிப்பட்ட நிலையிலே அவர்கள் ஏற்கெனவே பெற்றுள்ள தொகையை தர வேண்டும் அதற்கான வட்டித் தொகையை தர வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்றி அவர்களுடைய சங்கம் நல்ல முறையில் இயங்கி தீப்பெட்டி தொழிற்சாலை நடைபெறுவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட அமைப்புகள் சிறப்பாக வர வேண்டும், அதன் மூலமாக நாட்டிலே பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட திட்டங்களை செயல்படுத்த அரசாங்கம் முயற்சிகளை எடுக்கிறது. ஆனால் கொடுக்கப்பட்ட பணத்தை வைத்து தொழிலை ஒழுங்காக நல்ல முறையில் நடத்தாமல், வாங்கிய கடனையும் திருப்பிச் செலுத்தாமல் இருந்தால், அதுவும் வளராது, நம்முடைய நோக்கமும் நிறைவேறாது. இந்தச் சங்கத்தைப் பொறுத்தவரையில் கொடுக்கப்பட்ட பணம் முழுவதையும் பயன்படுத்தவில்லை, இச்சங்கத்தினர் இதிலே ஆர்வம் காட்டவில்லை என்பதுதான் எனக்கு கிடைத்துள்ள குறிப்பு. இச்சங்க உறுப்பினர்கள் முழுமையான அக்கறை இல்லாமல் இருந்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு மேலும் பணம் கொடுத்தால் அதுவும் எந்த வகையிலே போகும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. எனவே அதை பற்றி உத்தரவாதம் எதுவும் இப்போது தர முடியாது. தனியாக வேண்டுமானால் ஆய்வு செய்யலாம்.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொடுக்கப்பட்ட தொகையை அவர்கள் முழுமையாக பயன்படுத்தவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே மறுபரிசீலனை



செய்கின்ற நிலையில் இவைகள் எல்லாம் தெரிய வரும். அவர்கள் கொடுத்த பணத்தை வைத்து ஆரம்பத்திலேயே கட்டிடம் கட்ட வேண்டும் என்ற நிலையில் அடிமட்டம் நிலையிலே கட்டிடம் கட்டப்பட்டு பாதி அளவிலே விடப்பட்டிருக்கிறது. எனவே மீதமுள்ள தொகையையும் கொடுத்து அந்தச் சங்கத்தினரை நல்ல முறையில் வரையறைபடுத்தும் நேரத்தில்தான் அந்தப் பகுதியில் இத்தகைய சிறு தொழில் பெற்றுத் தர வாய்ப்பு இருக்கும். எனவே அமைச்சர் அவர்கள் மீண்டும் தீவிரமாக பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சங்கத்திலே 67 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதிலே பெரும்பாலானவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்பதுதான் எனக்கு கிடைத்துள்ள தகவல். பெரும்பாலானவர்கள் ஆர்வம் காட்டாமல் தொழிலை செய்வதற்கு முயற்சி எடுக்காமல் இருக்கிறார்கள் என்ற தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியுள்ள கருத்தின் அடிப்படையில் மீண்டும் தெளிவாக ஆய்வு செய்து பார்க்கலாம்.

**திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எல்லாக் கூட்டுறவு சங்கங்களும், குறிப்பாக கோவில்பட்டியில் உள்ள சங்கங்கள் எல்லாம் நஷ்டத்திலே ஓடுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தைப் பற்றிய குறிப்புதான் என்னிடத்திலே இருக்கிறது. மற்ற சங்கங்கள் பற்றி தகவல் கொடுத்தால் ஆய்வு செய்து பார்க்கலாம். சங்கம் ஆரம்பிப்பதற்கு பணம் கொடுப்பது, உதவி செய்வது என்பது அரசாங்கத்தின் பொறுப்பு. சங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உறுப்பினர்கள் சிறப்பாக தொழிலை நடத்த வேண்டியது என்பது அவர்களது கடமை. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி அதற்கு எதிர்மறையாக போகுமானால் அரசாங்கம் அதற்கு பொறுப்பேற்க முடியாது. நல்ல முறையில் செயல்படுமானால் அரசாங்கம

கை கொடுத்து உறுதுணையாக இருக்கலாம். அப்படிப்பட்ட தகவல்களை உறுப்பினர் கொடுத்தால் தனியாக ஆய்வு செய்கிறோம்.

## தருமபுரியில் பட்டுக்கூடு அரசு விற்பனை அங்காடி.

**170—(*வினா எண் 9650)—திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கூடு விற்பனைக்காக தருமபுரியில் அரசு அங்காடி இருந்தும் விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி அரசு பட்டுக்கூடு அங்காடியில் விவசாயிகளால் விற்கப்படும் பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலை அளிக்கப்படுகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே சரியான விலை கொடுக்கப்படுகிறதாகச் சொன்னார்கள். தமிழகத்திலேயே தர்மபுரியிலே, அந்த மாவட்டத்திலே விளைகின்ற பட்டுக்கூடுதான் சிறந்ததாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றது. நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அரசில் என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே சுமார் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அங்காடி கட்டப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தர்மபுரி மாவட்டம் பட்டு உற்பத்தியிலே சிறந்த மாவட்டமாக இருப்பதால், அங்கே விவசாயிகள் விளைவிக்கின்ற



பட்டை அரசாங்கமே ஏற்று, அதாவது நல்ல விலைக்கு வாங்கி விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யுமா என்பதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற அரசு சம்பந்தமான நிறுவனத்திலே இதை வாங்குகிறார்கள். அதேபோன்று தனியார் சம்பந்தப்பட்ட நிறுவனத்திலும் உற்பத்தியாளர்களிடம் இருக்கும் பட்டை வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அப்படி அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கின்ற பட்டிற்கு நல்ல விலை கொடுக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தை அடிப்படையாக வைத்து பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 171 முதல் 175 வரை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினா எண் 176 மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் அறைகளில் தொலைபேசி இயங்காமலிருந்தது குறித்து.

**திரு. அ. மலர்மன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்கெனவே என் னிடம் கேட்டீர்கள். நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. அ. மலர்மன்னன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எங்கள் அறைகளில் டெலிபோன் இணைப்பை துண்டித்திருக்கின்றார்கள். கடந்த மாதம் 6 ஆம் தேதியில் இருந்து 9 ஆம் தேதிவரையில் எங்களுடைய அறைகளிலே இருக்கும் டெலிபோன் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது. அதற்கு காரணம் கேட்கிறபோது, தமிழக அரசு பணம் கட்டாததனால் இப்படி இணைப்பு துண்டிக்கப்பட்டதாக சொன்னார்கள். ஆகவே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே பணம் கட்டிவிட்டிருக்கின்றார்கள். அந்தப் பிரச்சினை அலுவலகம் சம்பந்தப்பட்டது. அதுபற்றி தெரிந்துகொண்டு மீண்டும் இங்கே பேசுவது முறையல்ல.

**திரு. அ. மலர்மன்னன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆம் தேதியிலிருந்து 9 ஆம் தேதி வரை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அறைக்கு வந்தால் அங்கே பேசலாம்.

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) விவசாயிகளுக்கு வெடிமருந்துப் பொருள்கள் கிடைப்பதில் தடங்கல்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் வெடி மருந்து, வெடி மருந்து பொருட்கள் (கிணறு தோண்டப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள்) விநியோகம் தடை செய்யப்பட்டுள்ளதால், தற்போதுள்ள வறட்சியின் காரணமாக விவசாயிகள் கிணறுகளை ஆழப்படுத்த முடியாத நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

தமிழ்நாட்டில் சென்னை மாநகர் மற்றும் பல்வேறு பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட வெடி குண்டு வெடிப்புகளினால் ஏற்பட்ட நிலைமையினை கட்டுப்படுத்தும்பொருட்டு வெடிபொருட்கள் கொண்டு செல்லுதல், விநியோகம் செய்தல், மற்றும் சேர்த்து வைத்தல் ஆகியவைகள் அரசால் தற்காலிகமாக தடை செய்யப்பட்டது. அவ்வப்போது நிலைமையினை கவனமாக பரிசீலனை செய்த பின்னர், வெடிபொருட்கள் விநியோகம் செய்வதை தடை செய்து விதிக்கப்பட்ட ஆணையினை அரசு 16—2—1987 அன்று ரத்து செய்து விட்டது. இதற்கான ஆணைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது. வெடிபொருட்கள் விநியோகம் செய்ய விதிக்கப்பட்ட தடை ஆணை ரத்து செய்யப்பட்டு விட்டதால், கிணறுகளை ஆழப்படுத்த வெடி மருந்து பொருட்கள் கிடைக்காத நிலை தற்போது இல்லை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த தடை ஆணை நீக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி இங்கே சொல்லியிருக்கின்றார்கள். இப்போது விவசாயிகள் இப்படிப்பட்ட வெடி மருந்துகள் பெற மாவட்ட அளவிலே இருக்கின்ற மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அவர்களிடம் தான் அதற்கான அனுமதி பெறவேண்டியதாக இருக்கின்றது. இது உண்மையிலேயே விவசாயிகளுக்கு கால நேரத்தை வீணாக்குகிற வகையிலும், செலவுகளை அதிகரிக்கின்ற வகையிலும் இருக்கின்றது. ஆகவே வட்ட ஆட்சியாளர்களிடமே அதற்கான அனுமதி பெற, அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே நாட்டிலே ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதன் காரணமாகத்தான் இடையிலே தடை விதிக்கப்பட்டது. இப்போது வருவாய் துறை அதிகாரி என்ற அளவுக்கு வைத்திருப்பதிலே இருக்கின்ற கஷ்டங் களை மற்றவைகளை ஆராய்ந்து பார்த்து அதை வட்ட ஆட்சி யாளர் அவர்களுக்கு மாற்றுவதன் மூலம் கேடு ஏதும் ஏற்படாது என்ற நிலைமை ஏற்படுமானால் அவர்கள் கருத்தை பரிசீலிக் கலாம்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதை வட்ட ஆட்சியாளர் அளவிலே கொடுப்பதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்று சொன்னார்கள். உண்மையிலேயே நான் அதற்கு நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல இருக்கின்ற விதி களில் வெடி மருந்துகள் கொடுக்கின்றபோதுகூட ஒரு சமயத்தில் 5 கிலோதான் கொடுக்கமுடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு 5 கிலோவுக்கும் அனுமதி பெறுவது என்ற நிலைமை இருப்பதால் அது மேலும் விவசாயிகளுக்கு துன்பத்தை விளைவிக்கின்றது. எனவே கொடுக்கின்றபோது, தெளிவாக அந்த பகுதியிலே கிணறு வெட்டுகின்ற இடத்திலே சென்று இன்ஸ்பெக்ஷன் செய்து, அந்த கிணற்றுக்கு எவ்வளவு தேவை என்று தெரிகின்றதோ அதில் மூன்றில் ஒரு பங்கு அல்லது பாதி பங்கு அளவுக்குக் கொடுத்தால், அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் சிரமம் குறையக்கூடிய நிலைமைகள் இருக்கும். எனவே அந்த 5 கிலோ என்ற அளவை உயர்த்தி கொடுக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலே வைக்கப்பட்டிருக்கின்ற இடங்களில் இருந்து எடுக்கப்பட்டிருக் கின்ற வகையில்—இன்றைக்கு காலையிலே பத்திரிகையிலேகூட வந்திருக்கின்றது—19 பீப்பாய்களிலிருந்து வெடி மருந்துகள்



எடுக்கப்பட்டன என்றெல்லாம் செய்தி வருகின்றது. அந்த செய்தி வருகின்றபோது, கொடுக்கப்பட்டிருக்கின்ற மருந்துகளை எந்த நோக்கத்திற்காகக் கொடுத்தோமோ அந்த நோக்கத்திற்காக பயன்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் நல்லது. வருவாய் கருதி, பணம் கருதி அதை விற்றுவிடுகின்ற சூழ்நிலையில், அதை வாங்குகின்றவர்கள் அநியாயத்திற்குப் பயன்படுத்துகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலேயே மிகவும் எச்சரிக்கையாகவும், கடுமையான விதிமுறைகள் அடிப்படையிலே பயன்படுத்த வேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கும் நாம் ஆளாக்கப் பட்டிருக்கிறோம். ஆகவேதான் இப்பொழுது, இருந்த தடை ஓரளவு நீக்கப்பட்டு, விவசாயிகளுக்கு இருக்கிற கஷ்டங்கள் போக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் தடை நீக்கப் பட்டிருக்கிறது. மருந்துகளை வழங்குகின்ற முயற்சியும் எடுக்கப் பட்டிருக்கிறது. ஆனாலும் விதிகளை எந்தெந்த அளவுக்கு தளர்த்தலாம் என்பதையும், முறைப்படுத்தலாம் என்பதையும் அனுபவத்தின் அடிப்படையில் நாட்கள் செல்ல செல்ல நாம் முறைப்படுத்தி மேற்கொள்ளலாம்.

### (ஆ) கோவில்பட்டி வட்டம், பாண்டவர் மங்கலம் கிராமத்தில் வீட்டு மனைப் பட்டா வழங்குவது குறித்து.

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வ. உ. சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி தாலுகா பாண்டவர் மங்கலம் கிராமத்தில் சர்வே எண் 553/1 ஏ-யில் உள்ள நத்தம் புறம்போக்கை, நிலமில்லாத 46 பெயர் குறிப்பிடப் பட்ட ஏழைகளுக்கு வீட்டு மனைக்காகப் பட்டா வழங்க மாவட்ட வருவாய் அதிகாரி ஆணை பிறப்பித்து ஓராண்டாகிய பின்னரும், இதுவரை கோவில்பட்டி வட்ட ஆட்சியர் பட்டா வழங்காமல் காலந்தாழ்த்துவதால் அந்த ஏழைகள் அடைந்துள்ள அளப்பரிய கவலைக் குறித்தும் காலதாமதத்தால் உருவாகும் புது சூழ்நிலை காரணமாக ஏற்படும் அசாதாரண நிலைக் குறித்தும்" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

## அறிக்கை.

சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி வட்டம், பாண்டவர் மங்கலம் கிராமத்தில் சர்வே எண் 553/102-ல் 1.84 ஏக்கர் தீர்வை ஏற்படுத்தப்பட்ட புஞ்சைத் தரிசாக வகைப்படுத்தப்பட்ட நிலம் 1—11—1961-ல் முன்னாள் படைவீரர் திரு. முருகேசன் பிள்ளை என்பவருக்கு சாகுபடி செய்வதற்காக ஒப்படை செய்யப்பட்டது. ஆனால் அவர் மேற்படி நிலத்தை சாகுபடி செய்யாமல் 12 நபர் களுக்கு விற்பனை செய்து விட்டார். இவ்வாறு விதி மீறல் இருந்ததால், 16—2—1981-ல் இந்த ஒப்படை ரத்து செய்யப் பட்டது. பின்பு மேற்படி தீர்வை ஏற்பட்ட புஞ்சை தரிசாக இருந்த இந்த நிலத்தை நத்தமாக மாற்றி 32 நபர்களுக்கு வீட்டு மனை ஒப்படை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் மேற்படி நிலத்தை ஒப்படைதாரரிடமிருந்து கிரயம் பெற்ற 12 நபர்களும் ஆட்சேபனை தெரிவித்ததால், அது பற்றிய அறிக்கை ஒன்று மாவட்ட வருவாய் அலுவலர் நில நிருவாக ஆணையருக்கு அனுப்பியுள்ளார். அதன் மேல் நில நிருவாக ஆணையரால் விரைவில் முடிவெடுக்கப்படும்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்வை ஏற்பட்ட புஞ்சை தரிசாக இருந்த அந்த நிலத்தை, நத்தமாக மாற்றி 32 பேர்களுக்கு கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எப்போது? கிரயம் பெற்ற 12 நபர்கள் ஆட்சேபனைத் தெரிவித்தது எப்போது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, எந்த நோக்கத்திற்காக நிலம் ஒப்படைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற முடியாத அளவுக்கு அந்த முன்னாள் படை வீரருக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டது. அவர் உழவு செய்து வாழவேண்டும் என்பதற்காக



நிலம் ஒப்படை செய்யப்பட்டது. அந்த நோக்கத்தை நிறை வேற்றுகிற விதி முறைகளுக்கு புறம்பாக அதை அவர் 12 பேர்களுக்கு விற்று விட்டார். வாங்கியவர்கள் கூட நோக்கத்தைப் புரிந்துகொண்டு வாங்கியிருக்க வேண்டும். அதற்குப் பிறகு அதைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு பிறகு, அந்த நிலத்தை மறுபடியும் ஒப்படை செய்ததை ரத்து செய்து விட்டு முறைப்படி கொடுக்கப்பட வேண்டியவர்கள் 32 ஏழைகள் என்பதால் அதை நத்தமாக பிரகடனப்படுத்தி 32 பேர்களுக்கு ஒப்படை செய்வதற்கு அரசு உத்தரவிட்டது. அதற்குப் பிறகு அவர்கள் மேல்முறையீடு செய்தார்கள். 12 பேரும் கிரயம் கொடுத்து வாங்கிவிட்டோம் என்றார்கள். வருவாய் துறை ஆணையாளர் ஆராய்ந்த பிறகு பிரஸ்தாப நிலத்தை அந்த 32 வீடற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்ய, முன்னர் தீர்மானம் செய்யப்பட்டபடி ஒப்படை செய்யவும், கிரயம் பெற்றவர்களுக்கு ஒப்படை செய்ய தேவையில்லை என்றும் சிதம்பரனார் மாவட்ட வருவாய் துறை அலுவலருக்கு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையரால் ஆராய்ந்த பிறகு அறிவுறுத்தப்பட் டிருக்கிறது. அவர்கள் ஆராய்ந்த பிறகு அந்த 32 வீடற்ற ஏழை களுக்கு நிலத்தை ஒப்படைக்கலாம் என்றும் கிரயம் பெற்றவர் களுக்கு ஒப்படை செய்ய தேவையில்லை என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சருடைய பதிலுக்கு நன்றி. ஆனாலும் குறிப்பிட்ட ஒரு காலக் கெடுவுக்குள் வீட்டு ஒப்படை பட்டாக்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு, அதுசம்பந்தமான பணி துரிதப்படுத்தப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 32 பேர்களுக்கு வழங்கலாம் என்று ஆணையர் அவர்கள் அறிவுறுத்தி யிருக்கிறார்கள். அதனால் சிதம்பரனார் மாவட்ட வருவாய் அலுவலர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். காலத் தாழ்வு ஏற்பட்டால் அதற்கு நாம் அறிவுரை வழங்கலாம்.

(முற்பகல் 11-10)

(94. விதி-111 இன் கீழ் கல்வியமைச்சரின் அறிக்கை.)

## பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு வினாத்தாள் வெளியானது குறித்து.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று அவையில் தற்போது நடந்து வருகிற பத்தாவது வகுப்பு அரசுத் தேர்வு தொடர்பாக காஞ்சிபுரத்திலே ஒரு பள்ளியிலே கேள்வித்தாள் மாற்றலாகத் தரப்பட்ட காரணத்தால் அது வெளியாகியிருப்பதாகவும் அது குறித்து அரசினுடைய நடவடிக்கை என்ன என்றும் அவையிலே வினா எழுப்பப்பட்டது.

அதுகுறித்து அரசு சி.ஐ.டி. மூலமாகவும், துறை மூலமாகவும் தீர ஆய்வு நடத்தியது. காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கன்னையா அண்ணா கவர்ன்மென்ட் ஹைஸ்கூல்—மன்னிக்க வேண்டுகிறேன்—ஆண்டர்சன் ஹையர் செகன்டரி ஸ்கூல், காஞ்சிபுரம் என்ற பள்ளியில் இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது. தேர்வு 20—3—1987 அன்று இங்கிலிஷ் ஃபர்ஸ்ட் பேப்பர்—ஆங்கிலம் ஃபர்ஸ்ட் பேப்பர் என்று அன்று தேர்வு நடந்தது. அது 27 வகுப்புகள் மொத்தம். ஏழு வகுப்புகளுக்கு அந்தக் கேள்வித்தாள் சென்றபொழுது 23—3—1987 அன்று நடக்கவேண்டிய இங்கிலிஷ் செகன்ட் பேப்பர் பண்டிலை—கட்டைத் தவறுதலாக அங்கே எடுத்துச் சென்று விட்டார்கள். அந்தக் கட்டைப் பிரித்துப் பார்க்காமல் அப்படியே அதை அந்த ஏழு அறைகளுக்கும் எடுத்துச் சென்று விட்டார்கள். மணி அடிப்பதற்குப் பத்து நிமிடங்கள் இருந்தன. 10 நிமிட நேரம் அந்தப் பண்டில் அந்த ஏழு வகுப்பிலே இருந்த ஏழு கண்காணிப்பாளர்கள் கையிலே—அவர்கள். அந்த ஏழு பேர்களும் ஆசிரியர்கள்—அவர்கள் பொறுப்பிலே இருந்தது. பிறகு அந்த பண்டிலை எடுத்தபொழுது அது ஆங்கிலம் செகன்ட் பேப்பர் 23—3—1987 அன்று நடக்க வேண்டிய தேர்வுக்கு உரிய கேள்வித் தாள் என்பது தெரிய வந்த காரணத்தால் அவர்கள் அந்த



பண்டிலைத் திருப்ப எடுத்து உடனே அவர்கள் Paper Custodian and departmental Officer என்று இருக்கின்ற திரு. பத்மனாபன், திரு. மாணிக்கவேல் ஆகிய இருவரிடமும் அந்த ஏழுவரும் தந்திருக்கிறார்கள்.

வெளி வந்திருக்கின்ற செய்தி, சில பகுதிகளில் அப்படியே கேள்வித்தாள் அவுட்டாகி ரோனியோ போட்டு விற்கப்பட்டதாகவும் எல்லாம் செய்தி வந்திருக்கிறது. அதை சி.ஐ.டி. யும் விசாரித்தது. அது தவறான தகவல். பேப்பரைப் பொறுத்த வரைக்கும் ஆங்காங்கு சில பேப்பர்கள் வெளியாகிவிட்டது என்று வியாபார நோக்கத்தோடு மக்களையும். மாணவர்களையும் ஏமாற்ற சிலர் செய்து கொண்டிருக்கின்ற காரியமாக இருக்கலாம். வெளியாகி இருப்பதாகச் சொல்லப்படுகின்ற அந்த வினாத்தாளுக்கும், 23—3—1987 நடந்த தேர்விலே வந்த வினாத்தாளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இருந்தபோதிலும் அந்த ஏழு ஆசிரியர்களும் அந்தக் கேள்வித்தாளை ஒரு பத்து நிமிடம் நேரம் பார்த்து இருக்கின்ற காரணத்தால் அவர்கள் மூலமாக வேண்டியவர்களுக்கு, நினைவில் வைத்துக்கொண்டு ஒருசில வினாக்களை அவர்கள் சொல்லியிருக்கக்கூடும். அதனால் மற்ற மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்திற்காக, செங்கை மாவட்டம் முழுவதும் 23—3—1987 நடந்த ஆங்கிலம் செகன்ட் பேப்பர் தேர்வை மீண்டும் மறு தேர்வு வைக்க அரசு ஆணையிட்டிருக்கிறது.

## 5. வரவு-செலவுத் திட்டம் 1987-88 பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு மிகவும் ஒரு சோதனையான கட்டத்தில் துவங்கியிருக்கிறது. நாடு பூராவும், தமிழகம் முழுவதும் நிறைந்த அளவில் இன்றைக்கு வறட்சி நடமாடிக்கொண்டு இருக்கிறது. விவசாயத்தை எடுத்துக் கொண்டால் மரம், செடி, கொடி, கரும்பு

[திரு. ஆர். தியாகராசன்] [1987 மார்ச் 25

போன்றவைகள் நீர் அற்ற காரணத்தினாலே மிகவும் காய்ந்து போயிருக்கின்றன. இந்த ஆண்டு தமிழகத்தில் சோதனையான காலமாகும். இயற்கை, மின் இடையூறுகளாலும் மாநிலம் இன்றைக்கு அவதிபடும் நிலையிலே இருக்கிறது. இயற்கை இடர் பாடுகளும் ஏற்பட்டு உள்ளன. இன்னல்களும் தொல்லைகளும் இன்றைக்கு உண்டாகியிருக்கின்றன. எனவே, தமிழகத்தில் இன்றைக்கு நம்முடைய சபாநாயகரிடம் அனுமதி கேட்டேன், கொடுக்கவில்லை. இந்த வறட்சியான நிலையிலே மாவட்ட ரீதியிலோ அல்லது வட்ட ரீதியிலோ இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து அந்தத் தொகுதியிலே சுற்றுப்பயணம் செய்து அதற்கான, அந்த வறட்சி நிலை அறிக்கையைத் தயார் செய்தார்களா என்றால் இல்லை.

மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் ஒரு தடவை சிதம்பரத்திலே வறட்சி கமிஷனர் அவர்கள் வருகிறார்கள், அவர்களிடத்தில் நீங்கள் உங்களுடைய பகுதியில் உள்ள நிலைமையை கமிஷனரிடம் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். மறுநாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேண்டாம் என்று தடை செய்து விட்டார்கள், அந்த கமிஷன் வரவில்லை என்பதால். அதற்குப் பின்னால் மாவட்ட ரீதியிலான வறட்சி நிலையை சட்டமன்ற உறுப்பினர் களை கலந்து ஆலோசித்து, வறட்சி நிலையை சட்டமன்ற உறுப் பினர்களைக் கேட்டு தெரிந்து கொண்டு அரசுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்களா என்று கேட்டால் இல்லை. இப்போதாவது இந்த அரசு தொகுதி வாரியாக அங்குள்ள அதிகாரிகள் மூலமாக எங்களைச் சந்தித்து, அதிகாரிகள் எங்களோடு இணைந்து இந்த கடுமையான வறட்சி நிலை காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய தொல்லைகளை, விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்து அரசுக்கு அறிக்கை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுவசதிக்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களைச் சொல்லியிருக்கிறது. இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கின்ற நிலைமை என்ன என்பதை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். வீடு கட்ட சொந்த நிலம் இல்லாமல் ஏழை எளிய மக்கள், விவசாயிகள் செங்கல் அறுக்கின்ற சிறு தொழிலாளர்கள்



1987 மார்ச் 25] [திரு. ஆர். தியாகராசன்]

ஆற்றுப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, ஓடைப் புறம் போக்கு, குளத்துப் புறம்போக்கு ஹைவேஸ் புறம்போக்கு போன்ற அரசு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து வீடுகளைக் கட்டிக்கொண்டு குடியிருந்து வருகிறார்கள். இன்றைக்கு இந்த அரசு நகரப்புறங்களில் வீட்டு வசதியை ஏற்படுத்தியிருப்பதைப் போல கிராமப்புறங்களிலே இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி, அவர்களுக்கு பெரிய அளவில் ஆங்காங்கே காலனிகளை ஏற்படுத்தி, அங்கே எல்லோருக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். காலனி அமைத்து, வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அங்கே மின்சார வசதி, விளையாட்டு அரங்கு வசதி, செய்தித் தொடர்பு வசதி போன்றவற்றையும் ஏற்படுத்திக் கொடுத்து, அந்த மக்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொள்ள அங்கே கூட்டுறவு அமைப்பையும் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையை எடுத்துக் கொண்டால் வேளாண்மைக்கு 1986-87 ஆம் ஆண்டில் 116 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1987—88 ஆம் ஆண்டுக்கு 141 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறையில் உற்பத்தியைப் பெருக்க இந்த அரசு நவீன உத்திகளை ஏற்படுத்த வேண்டும்; நவீன சாகுபடி முறைகளைக் கையாள வேண்டும் என்று சொல்கிறது. ஒரு ஏக்கருக்கு கிட்டத்தட்ட 30 டன், 40 டன், மகசூல் பெற வேண்டுமென்ற எண்ணத்தைச் செயல்படுத்த திட்டமிட்டிருக்கிறது இந்த அரசு. ஆனால் அதற்குத் தேவையான பணத்தை ஒதுக்கியிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. இந்த நாட்டினுடைய அமைப்பைப் பார்க்கின்றபோது, முழுக்க முழுக்க விவசாயத்தையே இந்த நாடு நம்பிக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக நம்முடைய தமிழ் நாடு விவசாயத்தையே நம்பியிருக்கிற ஒரு மாநிலமாகும். அப்படி இருக்கும்போது இங்கே ஒதுக்கியிருக்கிற இந்த 141 கோடி ரூபாயைக் கொண்டு எப்படி விவசாயத்தை நவீனப் படுத்தப் போகிறீர்கள் என்று தெரியவில்லை.

[திரு. ஆர். தியாகராசன்] [1987 மார்ச் 25

நம்முடைய நாட்டில் 40 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் முழுக்க முழுக்க விவசாயத் தொழிலிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். பண்டைக்காலத்தில் ஏரி, குளம், அணைக்கட்டு, மானம்பார்த்த ஏரி போன்றவைகளை கிராம மக்களே தூர் எடுத்து, ஆழப் படுத்தி, அகலப்படுத்தி, நீர் வரும்போது அந்தந்தப் பகுதியில் இருக்கிற ஆயக்கட்டு நிலங்களுக்கு முழுமையாக பாசனம் கிடைக் கின்ற அளவுக்கு அங்கே எல்லாம் தண்ணீரைத் தேக்கி வைத்து, பயிர் செய்துவந்தார்கள். ஆனால் இந்த அரசோ அல்லது எந்த அரசோ அதைப்பற்றி நான் சொல்ல வரவில்லை; ஏரி, குளம், குட்டைகளைத் தூர் எடுக்கும் பணியை அப்படியே விட்டு விட்டது. ஆங்கிலேயர் காலத்தில் ஆழப்படுத்தப்பட்ட ஏரி, ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட அணை, ஆங்கிலேயர் காலத்தில் வெட்டப்பட்ட வாய்க்கால்—அவை எல்லாம் இன்று வரையில் மறு பரிசீலனை செய்யப்பட்டனவா என்றால் இல்லை. இருக்கிற ஏரி, குளங்களும் தூர்ந்து, மேடாகி அங்கே இருக்கிற ஏழை எளிய மக்களும் மற்றவர்களும் பயிரிடும் நிலமாகி இருக்கிறது. அந்த அளவுக்கு தூர்ந்து போனால் எப்படி ஆயக்கட்டு நிலம் பாசனம் பெறும்?

விவசாயத்தை நவீனப்படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிற அரசு, திட்டங்களைத் தீட்டியிருக்கிற அரசு, ஏரி குளங்களை ஆழப்படுத்தி, பாசனத்தைப் பெருக்குவதற்கு தேவையான பணத்தை ஒதுக்கியிருக்கிறதா என்றால் இல்லை. வாய்க்கால் வெட்ட பணம் ஒதுக்கியிருக்கிறதா என்றால் இல்லை. அணைக்கட்டுகளை சீரமைக்கும் திட்டம் இருக்கிறதா; அதற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. மொத்தத்தில் வேளாண்மைத் துறையை நவீனப்படுத்துகின்ற அளவுக்கு இந்த அரசு எதையும் கொண்டுவரவில்லை என்பதை வேதனை யோடும் வருத்தத்தோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அண்மையில் இந்த விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட விதைகள் எல்லாம் தரக்குறைவான விதைகளாக இருந்தன. நானே விருத்தாச்சலத்தில் ஒரு தடவை கோ. 43 என்ற நெல்லை



1987 மார்ச் 25] [திரு. ஆர். தியாகராசன்]

வாங்கிக்கொண்டுபோய் விதைத்த போது அந்த விதை சரியாக முளைக்கவில்லை. பிறகு மறு நெல் வாங்கித்தான் நாற்றுவிட வேண்டிய நிலைமை வந்தது. ஆனால் இப்போது வேளாண்மைத் துறையில் தரமான விதைகள் எங்களுக்குக் கிடைக்கிறது என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட விதை களையும், மருந்துகளையும், மற்றும் விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகளையும் குறைந்த விலையில் கொடுக்கின்ற வகையில் விலைக்குறைப்பு வந்திருக்கும் என்று நான் நினைத்தேன். சப்சிடி என்ற முறையில் விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு. கிராம விவசாயிகளுக்கு பாதி விலையில் அவற்றை வழங்குகின்ற வகையில் அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்.

விவசாயிகள் நல்ல உணவை உற்பத்தி செய்கிறார்கள். தரமான, நலமான உணவை காய்கறி முதற்கொண்டு நல்ல முறையில் உற்பத்தி செய்து கொடுக்கக் கூடியவர்கள் விவசாயிகள். ஆனால் இன்றைக்கு உளுந்து, நெல் போன்றவற்றில் கலப்படம் செய்கிறார்கள் வியாபாரிகள். இப்படி சுத்தமான நெல்லையும், உணவுப்பொருட்களையும் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய விலை குவிண்டாலுக்கு 140 ரூபாய். அப்படி குவிண்டாலுக்கு 140 ரூபாய்க்கு வாங்கிக் கொண்டு போய் நெல்லிலே கலப்படம் செய்து, உளுந்திலே கறுப்புக் கல்லைக் கலப்படம் செய்து, துவரையில் பாசிப்பருப்பையும், விஷப் பருப்புகளையும் கலந்து விற்கிறார்கள். ஆகவே கள்ள மார்க்கெட்காரர்களையும், கறுப்பு மார்க்கெட்காரர்களையும் பிடிப்பதில் இந்த அரசு சரியான கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கள்ள மார்க்கெட்காரர்கள் நெல்லை வாங்கிக் கொண்டுபோய் ஸ்டாக் செய்து விடுகிறார்கள். பிறகு அந்த நெல்லை அதிக விலைக்கு விற்று இலாபத்தை அவர்கள் அடைகிறார்களே தவிர, நாங்கள் அடையவில்லை.

[திரு. ஆர். தியாகராசன்] [1987 மார்ச் 25

இன்றைக்கு கரும்பினால் இந்த அரசுக்கு ஏகப்பட்ட இலாபம் வருகிறது. அதற்கு வரி விதிக்கிறீர்கள். மொலாசஸ் உற்பத்தி ஆகிறது. இப்படி எல்லாம் அதிகப்படியான அளவுக்கு அதாவது கரும்பு டன்னுக்கு 500 ரூபாய்க்கு மேலே கூட அரசுக்கு இலாபம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் எங்களுக்குக் கிடைக்கக் கூடியது எவ்வளவு என்றால் 208 ரூபாய்தான். இந்த நிலையிலே இப்படி உணவுப் பொருட்கள் மருந்தாலும் கூட எங்களுக்கு வேண்டியது கிடைக்கவில்லை. பாசன வசதியில் எங்களுக்கு நன்மை செய்யவில்லை. மின்சாரம் கிடைப்பதில் எங்களுக்குத் தாமதம் இருக்கிறது. ஓரிடத்தில் தண்ணீர் வற்றி விட்டால் வேறிடத்திற்கு மாற்ற வேண்டுமென்றால் முடியாது. என் பெயரிலே இருக்கக்கூடிய மின் இணைப்பை அடுத்தவருக்கு மாற்ற வேண்டுமென்றால் முடியாது. இன்றைக்கு தண்ணீர் 300 அடி, 400 அடி என்று கீழே போய்விட்டது. விவசாயிக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. தண்ணீரை வெளியே கொண்டுவர வேண்டுமென்ற ஆசையில் எப்படி, எப்படி எல்லாமோ மனக் கோட்டை கட்டி உழைக்கிறார்கள். ஆனால் அரசு அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. லைன் சர்வீஸ் லைனிலே இருந்து நேராக மின்சாரத்தை எடுத்துக் கொடுத்தால் அதற்கு மிகச் சிக்கனமாக செலவுதான் ஆகும். ஆனால் மின்சார இணைப்பு கேட்டால், அதைக் கொடுக்க 10 ஆயிரம் ரூபாய் செலவாகும். எனவே அப்படிக் கொடுத்தால் ஏகப்பட்ட நஷ்டம் என்று சொல்கிறார்கள். ஒருபோல் சர்வீஸ் என்ற வகையில் லைனை அப்படியே இழுத்துக் கொடுத்து கீழே ஃபீஸ் போட்டால் நாங்கள் எடுத்துக் கொள்வோம். அதற்கு 300 ரூபாய் 400 ரூபாய்க்கு மேலே செலவாகாது. அப்படி ஒரு போஸ்டிலே இருந்து சர்வீஸ் எடுத்துக் கொடுக்க அதிகச் செலவாகிவிடாது. இன்றைக்கு நாம் வறட்சிக்காகக் கேட்டிருக்கிறோம், 300 கோடி, 400 கோடி, 132 கோடி என்று கோடி கோடியாகக் கேட்டிருந்தாலும் கூட அதன் பலன் யாருக்குச் சென்று சேரவேண்டுமோ அவர்களுக்குச் சென்று சேரவில்லை. எனவே யாருக்கு நன்மை செய்யவேண்டும், அதற்கு என்னென்ன திட்டங் களைத் தீட்ட வேண்டும், எப்படி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பன பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும். எங்களுக்கு



1987 மார்ச் 25] [திரு. ஆர். தியாகராசன்]

வேண்டியது எல்லாம் நீர்ப்பாசன வசதித் திட்டங்கள்தான். பெரிய ஏரியோ, வாய்க்காலோ, அணைக்கட்டுகளோ ஓடையோ கட்ட வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் நீரால் சூழப் பட்ட இந்த இந்திய நாட்டிற்கு, நீரால் உற்பத்தி செய்யக்கூடிய இந்த நாட்டிற்கு உற்பத்தி செய்வதற்கு எந்தெந்த வகையில் உதவி களைச் செய்ய வேண்டுமோ அவற்றை நவீன முறையில் செய்து கொடுப்பது பற்றி இன்றைக்கு இருக்கிற அரசு உரிய வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். அன்றைய அரசுக்கு வருவாய் இருந்தது. இன்றைய அரசுக்கு வருவாய் இல்லை. இருந்தாலும் வரி எப்படியோ போடுகிறீர்கள். வேண்டாம் என்று சொல்ல வில்லை. விவசாயப் பொருள்களுக்கு நல்ல விலை கொடுக்கவில்லை என்றால் என்ன ஆகும்? விவசாயம் சீரழிந்தால் உண்ணும் உணவு சீரழியும். அதுதான் இன்றைய நிலைமை யாகும். 3, 4 ஆண்டுகளாக எங்களுடைய விவசாயப் பொருள் களுக்கு சரியான விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டும் இன்று வரை கிட்டத்தட்ட 120 ரூபாய் தான் பெற்று வருகிறோம். எங்களுடைய விவசாயப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய முடியவில்லை. கரும்புக்கு விலை நிர்ணயம் இன்னும் செய்யவில்லை. ஆனால் மத்திய சர்க்கார் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்து அவ்வப்போது அறிவித்து வருகிறது. ஆனால் உங்களைப் பொறுத்த வரையில் இன்று வரை கரும்புக்கு சரியான விலை தரவில்லை. நாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய ஒவ்வொரு உணவுப் பொருளுக்கும், நாங்கள் விதைப்பதற்கு முன்பாகவே விலையை அறிவிக்க வேண்டும்.

உரம் வேண்டுமானால் உரத்திற்கு விலையை நிர்ணயம் செய் கிறீர்கள். விதை வேண்டுமானால் விலை நிர்ணயம் செய்து விடுகிறீர்கள். உழவுப் பொருள்களுக்கு விலையை நிர்ணயம் செய்து விடுகிறீர்கள். ஆனால் நாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய எங்களுக்கு உரிமை இல்லை. ஆகவே மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்கள் இதை கவனிக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். தியாகராசன்] [1987 மார்ச் 25

வறட்சியைப் பொறுத்தவரை எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு வறட்சி மிகவும் கொடூரமாக இருக்கிறது, பருவ மழை தவறி விட்டதன் காரணமாக. கிணற்றில் தண்ணீர் கீழே உள்ள நீர் இன்னும் கீழ் நோக்கி போய்க்கொண்டிருக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் மின் சப்ளை கொடுப்பதில் சற்று அதிக நேரம் கொடுக்க வேண்டும். முன்பெல்லாம் இவ்வளவு மணி நேரம் என்று நிர்ணயிக்கப்பட்டு மின் சப்ளை கொடுக்கப்பட்டு வந்தது. ஆகவே இந்த வறட்சியான நிலைமையில் மின் சப்ளையை சற்று அதிகரித்து தர வேண்டும்.

அடுத்தபடியாக கிராமத்தில் எங்காவது ஓரிடத்தில் அதிகாரிகள் பார்வையிட்டால் எங்காவது ஒரு நெல் மணி சற்று வெளியே தெரிந்தால், இது மணிகண்ட சாவி என்று சொல்லி அதிகாரிகள் அதற்கு தீர்வை கட்ட வேண்டும் என்று சொல்லிவிடுகிறார்கள். அதற்கு எந்தவித தள்ளுபடியும் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். நிலைமை என்னவென்றால், அறுவடை செய்து மொத்தமாக தூற்றும்போது ஒரு மூட்டை கூட தேராது. அதேமாதிரி பக்கத்தில் யாராவது ஒருவர் டிராக்டர், என்ஜின் வைத்திருந்தால் அவர் நல்ல விளைச்சல் விளைத்திருப்பார். அதை வந்து பார்த்து விட்டு, பக்கத்தில் இருக்கும் எல்லா விவசாயிகளுக்கும் எந்தவித வரி தள்ளுபடியும் கிடையாது, என்று சொன்னால் அந்த விவசாயிகளுடைய நிலைமை என்ன ஆகும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இந்த வறட்சி காலக் கட்டத்தில் அதிகாரிகள் வந்து எங்களையெல்லாம் பார்த்து கேட்டபிறகு அதற்கு முடிவு செய்ய வேண்டும் என்றும் அந்த வகையில் எங்களுக்கு, விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். விவசாய உற்பத்திக்கு தேவையான பொருள்களுக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 5 சதவீதத்திலிருந்து 3½ சதவீதமாக ஆக்கி 1½ சதவீதம் வரியை குறைத்திருக்கிறார்கள். என் விவசாய இடு பொருள்கள் அத்தனைக்கும் வரியைக் குறைக்கக் கூடாது? நாங்கள் உற்பத்தி செய்த உணவுப் பொருள்களை கொடுக்கும் போது எந்த வரியும் நாங்கள் கேட்பதில்லையே. ஆகவே விவசாய உற்பத்திக்கு உண்டான இடுபொருள்கள், மருந்து, கருவிகள் அத்தனைக்கும் உள்ள வரிகளை நீக்கம் செய்து



1987 மார்ச் 25] [திரு. ஆர். தியாகராசன்]

கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்த பட்ஜெட்டிலாவது இப்படி வரி நீக்கம் செய்கிறோம் என்ற நல்ல சேதியை அறிவித்து, விவசாயிகளுக்கு மனநிறைவு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அடுத்தபடியாக நகராட்சி நிர்வாகம். நகராட்சி நிர்வாகத்திற்கு 1986–87 ஆம் ஆண்டில் நீங்கள் ஒதுக்கியது 177 கோடி ரூபாய். ஆனால் 1 987–88 ஆம் ஆண்டில் அது 193 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. நகராட்சி நிர்வாகம் இது வரையில் அரசாங்கத்தின் மூலமாகவே நடந்து வந்தது. ஆனால் நகராட்சியில் இருக்கக்கூடிய பெரும் தலைவர்கள் வீட்டு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு என்று கேட்டால் 10 சதவீதம் உயர்த்தியிருக்கிறார்கள். 1 ரூபாய் என்றால் 10 ரூபாய், 10 ரூபாய் என்றால் 100 ரூபாய் என்று உயர்த்தி இருக்கிறார்கள். அந்த உயர்வை கண்டித்து விருத்தாசலத்திலே உண்ணா விரதம் இருந்தார்கள். அங்கே இருக்கக்கூடிய பெரும் தலைவர்களை இது சம்பந்தமாக கேட்டபோது நாங்கள் இந்த வரியை உயர்த்தவில்லை. அரசாங்க அதிகாரிகள் தான் வந்து வீடுகளைப் பார்த்து விட்டு உயர்த்தி இருக்கிறார்கள் என்றும், நாங்கள் அதை செய்யவில்லை என்றும் எங்களுக்கு இதில் சம்பந்தம் இல்லை என்றும் மன்றத்திலேயே அன்றைக்கு சொன்னார்கள். நான் சொன்னேன், இன்னும் சட்டமன்றத்திலே வரவில்லையென்று. வீட்டுக்கு வரி விதிப்பது என்ற உரிமை பஞ்சாயத்து நிர்வாகத்திற்கு, அந்த அமைப்பிற்குத் தான் இருக்கிறது. அதை அரசு செய்கிறதென்று ஒரு கேள்வியை அங்கே எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதுகுறித்து தன்னுடைய பதிலில் விளக்கமளிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். தியாகராசன்] [1987 மார்ச் 25

இந்த நகராட்சிகளில், உதாரணத்திற்கு விருத்தாசலம் நகராட்சியை எடுத்துக் கொண்டாலும் கூட, நகராட்சி நிர்வாகம் மிகவும் சீர்கேடாக உள்ளது. 1970 ஆம் ஆண்டில் நகராட்சிகளான நகர மன்றங்கள், அன்றைக்கு எத்தனை ஆட்களை கூட்டுவதற்கும், மலம் எடுப்பதற்கும் போட்டார்களோ, எத்தனை லாரிகள், வண்டிகள் இருந்தனவோ அதே அளவிற்குதான் இன்றைக்கும் வைத்திருக்கிறார்கள். 1970-ம் ஆண்டில் 50 ஆயிரம் ஜனத்தொகை இருந்தது என்றால் இன்றைக்கு லட்சக்கணக்கில் அது உயர்ந்திருக்கிறது. ஜனத்தொகை உயர்ந்து விட்டதே தவிர கூட்டுகிற ஆட்கள், சுத்தம் செய்கிற ஆட்கள் மற்றும் வாகன வசதிகள் இவற்றில் எந்த உயர்வும் செய்யப்படவில்லை. நிர்வாகத்தில் அன்றைய நிலையிலிருந்த பணியாளர்களும் வசதிகளும் தான் இன்றைக்கும் நீடித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே நியமித்து, மற்ற வசதிகளைப் பெருக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரத்தைப் பொறுத்தவரையிலும் சுகாதாரம் என்றால் என்னவென்றே எங்களுக்குத் தெரியவில்லை. முன்பெல்லாம் கொசுவென்றால் சின்ன பிராணியாக இருக்கும். கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும். அந்த கொசுக்கள் எல்லாம் இன்றைக்கு ஈக்களாகி விட்டன. கொசுக்களை ஒழிப்பேன் என்று சொல்லிக்கொண்டு எங்கள் ஊர் நகர்மன்றத் தலைவர் வந்தார். இப்போது கூட கேட்டுக்கொண்டு இருக்கிறோம். ஏன் கொசுவை ஒழிக்கவில்லையென்று. இப்படி நாங்கள் கேட்கிற போது நான் என்ன செய்வது? அரசாங்கம் கொடுக்கும் மருந்து தரமானதாக இல்லையே என்று சொல்கிறார். அரசாங்கம் நல்ல தரமான மருந்தாகக் கொடுக்குமானால் அந்த மருந்தடிக்கும் பணியாளரே அந்தக் கொசுக்களை ஒழித்து விடுவார். ஆகவே இந்தக் கொசுக்களை ஒழிப்பதற்கு நல்ல தரமான மருந்துகளை அரசாங்கம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்



1987 மார்ச் 25] [திரு. ஆர். தியாகராசன்]

அடுத்து கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் எல்லாம் இன்றைக்கு நகர்ப்புறங்களுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி நகர்ப்பகுதிகள் விரிந்து போவதற்கு என்ன காரணம்? கிராமப்புறங்களில் உழைப்பிற்கு குறைந்த கூலியைப் பெறக் கூடியவர்கள் நகரங்களுக்கு வந்து சாதாரணமாக மூட்டை தூக்கினாலும் கூட நூற்றுக்கணக்கில் ரூபாய் பெறலாமென்று நகரத்திற்கு வந்து விட்டார்கள். நகராட்சி நிர்வாகம் பெரியதாகப் போய்விட்டது. இங்கே சாக்கடைகள் எல்லாம் குட்டை குட்டையாக தேங்கி நிற்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதிபற்றி ஒருசிலவற்றைச் சொல்லிவிடுகிறேன். சாக்கடைகளைப் பொறுத்த வரையிலும் சாக்கடை நீரை அப்புறப்படுத்துவதற்கு எல்லா நகரங்களிலும் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும். முன்னாலே வீடு கட்டியவர்கள் எல்லாம் சாக்கடைகளை வீட்டிற்கு முன்பகுதியில் வைத்துக் கட்டிவிட்டார்கள். சாக்கடைத் தண்ணீர் ரோட்டிற்கு வந்து மிகவும் அசிங்கமாக இருக்கிறது. வாய்க்கால்கள் வெட்டப் போனால் நகராட்சி தங்களுடையது இல்லையென்றும், பி.டபிள்யூ.டி., மற்றும் ஹைவேஸ் போன்ற துறைகள் தங்களுடையது இல்லையென்றும் சொல்லிவிடுகிறார்கள். இவர்கள் போட்டி போட்டுக்கொண்டு யாரும் அந்தப் பணியைச் செய்யாமல் இருந்து வருகிறார்கள். பெரிய அளவிற்கு சீர்கேடாகி இருக்கிறது. கழிப்பிடங்கள் எல்லாம் சரியாக இல்லை. மின் விளக்குகள் சரிவர எரிகின்றதா என்றால் இல்லை. (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரத்தில் முடித்து விடுகிறேன்.

அடுத்து, மதுவைப் பொறுத்தவரைக்கும், புரட்சித் தலைவர் அவர்கள், மதுவை இன்றைக்கு நாட்டை விட்டே போக்கியிருக்கிறார்கள். அந்த அரக்கனைப் போக்கியதற்காக அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதைப் போக்கினார்களே தவிர, கிராமப் பகுதிகளில், நகரப் பகுதிகளில் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் அதிகப்பட்டிருக்கிறார்கள். இதை ஒழிப்பதற்கு போலீஸ் மட்டும் போதுமா என்றால் போதாது. இந்த போலீஸ் மட்டுமே நாட்டிலே இருக்கிற மதுவை ஒழித்துவிடவோ அழித்துவிடவோ முடியாது. கிராமப் புறங்களிலே கிராமக் கண்காணிப்பாளர்கள்.

வி. ஏ. ஓக்கள், கிராம உத்தியோகஸ்தர்கள், தோட்டிகள், தலையாரிகள் என்று ஒவ்வொரு கிராமத்திலும் அரசாங்க அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகளை வைத்து ஒவ்வொரு கிராமத்திலேயும் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களையும், குடிப்பவர்களையும் பிடிப்பதற்கு, கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தால்தான் ஓரளவிற்கு, இந்த மதுவை ஒழிக்க வேண்டும் என்று நாம் மனதார விரும்பினோமே, அதை நிறைவேற்ற முடியும். அதைப் போலவே பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கிற அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள் இன்னும் இந்த மாதிரி உள்ளவர்களுக்கும், மது சம்பந்தமான நடவடிக்கை எடுப்பதற்கு, பிடிப்பதற்கு அதிகாரம் அளிக்க வேண்டும். அந்தந்தக் கிராமத்திலே மதுவிலக்கு கமிட்டியை, வி. ஏ. ஓ. தலைமையிலே அமைக்க வேண்டும். இந்த நாட்டிலே மது இருக்கக்கூடாது என்று நீங்கள் எண்ணுவது உண்மையானால், இந்த நாட்டிலே, உண்மையாக மது கட்டாயம் வரக்கூடாது, அதை அழித்தே தீருவோம் என்று நீங்கள் உறுதி மொழி எடுத்தது உண்மையானால், நீங்கள் இந்தத் திட்டத்தின் கீழே ஒவ்வொரு கிராம வாரியாக மதுவை ஒழிப்பதற்கு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நெய்வேலியைப் பொறுத்தவரைக்கும், நெய்வேலி கார்ப்பரேசனுக்கு நிலத்தைக் கொடுத்தவர்களுடைய நிலை பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய், 2 ஆயிரம் ரூபாய் என்று அன்றைக்கு இருந்த அதிகாரிகள் நியமித்துவிட்டார்கள். அதை நம்பி அந்த ஏழை மக்களும் அந்த நிலத்திற்கான பணத்தைப் பெற்றுவிட்டார்கள். ஆனால் பணக்காரர்கள் மட்டும் கோர்ட்டுக்குப் போனார்கள். கோர்ட்டுக்கு போனவர்களுக்கு, ஒரு ஏக்கருக்கு 60 ஆயிரம் ரூபாய் தர வேண்டும் என்று அங்கே தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். இதனால் 3 ஆயிரம் ரூபாய் வாங்கிய அந்த ஏழையினுடைய நிலை என்னவாகும்? எனவே அரசாங்கம் இதிலே தலையிட்டு, பணக்காரர்களுக்கு எந்த அளவிற்கு நிவாரணம் கிடைக்கிறதோ, அந்த அளவிற்கு, ஏழை விவசாயிகளுக்கும் நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏழை விவசாயிகள், உங்களை நம்பி—



ஒன்றும் தெரியாத அந்த அப்பாவிகள்—நிலத்தைக் கொடுத்தவர்களுக்குப் பணம் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் நிலம், வீடு எல்லாவற்றையும் இழந்து இருக்கிறார்கள். நிலத்தையும், வீட்டையும் விட்டு வெளியேறியவர்களுக்கு இன்னமும் மாற்று இடம் கொடுக்கப் படவில்லை. உழுவதற்கு நிலம் கொடுக்கப்படவில்லை, வேலை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. இடம், மனை எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, தெருவிலே நிற்கக்கூடிய அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும். இதற்கு முன்பாக நாம் பேசிய, அரசோடு என்.எல்.சி. பேசிய அந்த ஒப்பந்தத்தை அவர்கள் நிறைவேற்றவில்லை. அந்த ஒப்பந்தத்தை மீறியிருக்கிறாகள் என்பதை வருத்தத்தோடு நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து செருவம்பாவிற்கும் விருத்தாசலத்திற்கும் இடையில் 24-வது கிலோமீட்டரில் மணிமுத்தாறு என்ற ஒரு ஆறு போகிறது சின்ன ஆறு. 10 லட்சம் ரூபாய் போதும் தரைப்பாலம் கட்டுவதற்கு. அதன் வழியாகச் சென்றுதான் 24 கிராம மக்கள் நகரத்தை அடைய வேண்டும். இப்போது அப்படிச் செல்வது தடைப்பட்டு இருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் கட்டாயம் இதைச் செய்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ தெரியவில்லை, இன்னும் அந்த வேலை நடக்கவில்லை. அங்குள்ள 24 கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நகரத்திற்கு வந்து போவதற்கு 10 லட்சம் ரூபாய் செலவில் ஒரு தரைப்பாலம் கட்டுவதற்கு பல மனுக்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால் இன்னும் வேலைகள் நடக்கவில்லை. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் விருத்தாசலம் வந்தபோது, அவரிடமும் மனு கொடுத்தேன். அவர்களும் இதை ஆதரித்து ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் வேலை நடந்தபாடில்லை.

அதைப்போலவே, விருத்தாசலத்திலே பண்டையகாலத்திலே வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட முன்சிப் கோர்ட் கட்டிடம் சீர்கேடடைந்திருப்பதால் அந்த இடம் இடித்துத் தள்ளப்பட்டு, இப்போது அந்த இடம் காலியாக இருக்கிறது.

[திரு. ஆர். தியாகராசன்] [1987 மார்ச் 25

அங்கே சப்-டிவிஷனல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட், மற்றும் ஒரு கோர்ட்டும் வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக்கொண்டு வருகிறது. அந்தக் கோர்ட்டுக்கு புதிய கட்டிடம் கட்டவேண்டும் என்று 15 ஆண்டுக் காலமாக சொல்லிவருகிறோம். முதல்வர் அவர்கள் அங்கே வந்தபோது கூட, அங்குள்ள வக்கீல்களோடு பேசும்போது, நான் கட்டாயம் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்று சொன்னார். எனவே உடனடியாக என் தொகுதியிலே அதைக் கட்டி முடிப்பதற்கு நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 1987—88 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டம் மிக நேர்த்தியான முறையில் இந்த அவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது மாண்புமிகு பல்வேறு உறுப்பினர்களும் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தில், இன்றையதினம் நாட்டில் நிலவி வருகிற இயற்கை இடர்பாடுகளால், வறட்சியால், வாட்டத்தால் துயருறுகிற கிராம மக்களுக்கு பல்வேறு நல்ல திட்டங்களை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். அத்துனையையும், ஏழை எளிய மக்கள், கிராமப்புற மக்கள், இன்றைக்கு இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிற பல்வேறு சிறப்பு அம்சங்களை அறிகிறபோது பெரிதும் வரவேற்கிறார்கள், பாராட்டுகிறார்கள் என்கிற உண்மையை இங்கேயிருக்கிற எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் குறிப்பிட மறந்தாலும், நாட்டு நிலைமையையும், இந்த பட்ஜெட்டையும், எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். வாழ்த்துகிறார்கள் என்ற செய்தியை முதலாவதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே குறிப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிற பல்வேறு அம்சங்களையும் என்னுடைய உரையின் பிற்பகுதியில் எடுத்து வைக்கிறேன் என்று தெரிவித்து, முதலாவதாக என்னை இந்த அவைக்கு அனுப்பி இருக்கிற என்னுடைய சேடப்பட்டி



1987 மார்ச் 25] [திரு. இரா. முத்தையா]

தொகுதியினுடைய வறண்ட நிலைமையை அரசின் கவனத்திற்கு எடுத்து வைத்து, பின்னர் பட்ஜெட்டின் மீது பொது விளக்கங்கள் சிலவற்றைச் சொல்ல வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, என்னுடைய சேடப்பட்டி தொகுதி என்பது மதுரை மாவட்டத்திலே மிக வறண்ட நிலைமையில் இருக்கிற தொகுதி என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். பட்ஜெட் உரையில் இந்த ஆண்டும், சென்ற ஆண்டும், ஆக இந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிற வறட்சியை இந்த அவைக்கு மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் எடுத்து விளக்கியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு ஆண்டுகள் மட்டுமின்றி, அதற்கு முந்தைய ஆண்டிலும் வறட்சி ஏற்பட்டு, கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து மிக வறண்ட நிலைமைக்கு ஆளாகி நில வரி ரத்து என்கிற சலுகையைப் பெற்றிருக்கிற பகுதியாகும். அந்த வகையில் அந்தத் தொகுதிக்குப் பல்வேறு நிவாரணப் பணிகளை அரசாங்கம் செய்திட வேண்டுமென்று என்னுடைய முதலாவது வேண்டுகோளை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்திலேயே வறண்ட தாலுக்காக்கள் என்று எடுத்திருப்பது உசிலம்பட்டி, திருமங்கலம் தாலுக்காக்களாகும். அந்தத் தாலுக்காக்களிலேயும் உசிலம்பட்டி தாலுக்காவில் சேடப்பட்டி ஒன்றியமும், திருமங்கலம் தாலுக்காவில் கல்லுப்பட்டி ஒன்றியமும் 3 ஆண்டுகளாக வறட்சியாலே பாதிக்கப்பட்டு, எந்தவித விவசாய வருமானமும் இல்லாமல், விவசாயிகள் பெரிதும் தத்தளிக்கிற பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் இந்த ஆண்டு அரசாங்கம் அறிவித்திருக்கிற வறட்சி நிவாரணப் பணிகளை விரைந்து செய்திட வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த இரண்டு தாலுக்காக்களிலும் பெரிதும் வறண்ட பகுதிகள் கல்லுப்பட்டி, சேடப்பட்டி வட்டாரங்களானாலும், ஒதுக்கப்படுகிற நிதியும், செய்யப்படுகிற நிவாரண வேலைகளும் ஒட்டு மொத்தமாக தாலுக்கா என்ற அளவில் ஒதுக்கப்படுவதால், உண்மையிலே வறண்டிருக்கிற அந்தப் பகுதி அவற்றைப் பெறும் சூழ்நிலை

[திரு. இரா. முத்தையா] [1987 மார்ச் 25

இல்லாமல் இருக்கிறது. எனவே இயற்கையாக வறண்டுள்ள அந்த கல்லுப்பட்டி, சேடப்பட்டி வட்டாரங்களை ஒன்றாகச் சேர்த்து, பேரையூரை தலைமையிடமாகக் கொண்டு, பேரையூர் தாலுக்கா என்று புது தாலுக்கா அமைத்துக் கொடுத்தால், வறட்சி நிவாரணப் பணிகளை அந்தத் தாலுக்காவுக்கு இன்னும் வேகமாகச் செய்ய வாய்ப்பு ஏற்படும். அப்படி ஒரு புதிய தாலுக்காவை அந்த வறண்ட பகுதிகளுக்காக அமைத்துத் தர வேண்டுகிறேன்.

அந்தப் பகுதியில் இன்றைக்கு எந்தவிதமான விவசாய விளை பொருள்களும் சாகுபடியாகவில்லை என்றாலும் நில வரி ரத்து குறித்த ஆணை ஒவ்வொரு கிராம அதிகாரிக்கும் வந்து சேராத காரணத்தால், சில கிராமங்களில் அரசுக்கு அவப் பெயரை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு சில கிராம அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள். 5, 6 கிராமங்களில் இன்றைக்கு அரசு உத்தரவு வரவில்லை. எனவே நில வரியை வசூல் செய்கிறோம் என்று சொல்லி, வறண்ட பகுதி மக்களைத் துன்புறுத்தும் நிலைமை இருக்கிறது. அது பற்றிய புகாரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். அதன்மீது தக்க நடவடிக்கை எடுப்பதோடு, இந்த நிலவரி ரத்து ஆணையை விரைந்து அந்தப் பகுதிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வறட்சியின் காரணமாக ஒதுக்கப்பட்டிருக்கிற குழாய்க் கிணறுகளும், நிவாரண நிதியும் அந்த மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சரி சமமாகப் பகிர்ந்து கொடுக்கப் பட்டிருக்கிறது. எனவே மிக வறண்ட பகுதியாக இருக்கிற இந்தப் பகுதிக்கு அதிகமான அடிக் குழாய்களையும், ஆழ் குழாய்க் கிணறுகள் மூலம், ஓவர் டேங்க் மூலம் தண்ணீர் கொடுக்கும் திட்டத்தையும் விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அடிக் குழாய்கள் அமைக்கும் போது குடிநீர் வடிகால் வாரியம் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குழாய் இருந்தால் போதும், பெரிய கிராமமாக இருந்தால் 2 குழாய்கள் இருந்தால் போதும் என்பதுபோல ஒரு வரம்பை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த 3 ஆண்டு



1987 மார்ச் 25] [திரு. இரா. முத்தையா]

வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர் மிகவும் கீழே சென்று விட்ட காரணத்தால் ஒரு குழாய் இருக்கிற கிராமத்தில் அந்த ஒரு குழாய் பழுதுபட்டாலோ அல்லது அதில் தண்ணீர் சரியாக வரவில்லை என்றாலோ அந்த மக்கள் பெரிதும் துன்பப்படு கிறார்கள். ஆகவே ஒரு குழாய்தான், 2 குழாய்தான் என்று வரைமுறை கட்டாமல் அந்த கிராமத்தில் ஏற்கனவே புழக்கத்தில் எத்தனை குடிநீர்க் கிணறுகள் இருந்ததோ—4 கிணறுகள் பயன் படுத்தப்பட்டு இருந்தால் அந்த 4 கிணறுகள் இன்றைக்குத் தூர்ந்து போய் இருக்கிற கிராமங்கள் இருக்குமானால் அப்படிப் பட்ட கிராமங்களுக்கு 4 அடி குழாய்கள் கூட ஒதுக்குகிற அளவுக்கு இந்தக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஆழ் குழாய்க் கிணறுகளை அமைத்துத் தரவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதி ஒதுக்கத்தில் அந்தப் பகுதிகளுக்கு அதிகமாக நிதி ஒதுக்கவேண்டும் என்பதோடு ஏற்கனவே மின்சார வாரியத்தின் மூலம் பழைய காலத்தில் ஏற்பட்ட பாக்கிகளை ஒவ்வொரு மாத பாக்கியையும் ஒவ்வொரு மாதத் தவணையாக கட்டி வரலாம் என்ற சலுகையை அரசு அறிவித்தது. அந்த வகையில் ஒவ்வொரு மாதமாகக் கட்டி முடித்த பிறகு இன்றைக்கு அந்த பழைய பாக்கிக்கு வட்டி வேறு இருக்கிறது என்று சொல்லி ஒரேயடியாக அவர்கள் பாக்கி எல்லாம் முடிந்த பிறகு கூட அந்த வட்டி பாக்கியை மொத்தமாகக் கட்ட வேண்டும் என்று மின்சார வாரியத்தினர் விவசாயிகளைத் துன்புறுத்துவதாகத் தெரிகிறது. தற்போது அந்த நடவடிக்கை ஓரளவுக்கு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தாலும் அந்த வட்டி பாக்கி என்பது ஏற்கனவே இருக்கிற ஒப்பந்தத்தில் வேண்டுமானால் இருந்து இருக்கலாம். அதன் பின்னர் அவர்கள் பழைய பாக்கியை ஒவ்வொரு மாதமும் கட்டினால் போதும் என்று சலுகையை அறிவித்து இருக்கிற காரணத்தால் அந்தச் சலுகையின்படி கட்டி முடித்தவர்களுக்கு அந்த வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்கிற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்,

[திரு. இரா. முத்தையா] [1987 மார்ச் 25

இந்தத் தொகையைப் பொறுத்தமட்டில் பல்வேறு கண்மாய்கள், குளங்கள் எல்லாம் இன்றைக்குத் தூர்ந்து போய் இருக்கிற நிலைமை இருக்கிறது. 3 ஆண்டுக் காலமாக இங்கே தண்ணீர் வராத காரணத்தால் அவைகள் எல்லாம் பயனற்ற நிலையில் இருக்கிறது. அந்தக் கண்மாய்களையும், அந்தக் கிராம குளங்களையும் ஆழப்படுத்த வேண்டும் என்றும் மராமத்துப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது புதிதாக பல சாலைகள் அமைக்கப்பட்டு இருந்தாலும், பழைய சாலைகள் நெடுஞ்சாலைத் துறையில் இருப்பதை மிகவும் பாழடைந்த நிலையில் இருக்கிற அந்த சாலைகளையும் விரைந்து—என்னுடைய இந்த சேடப்பட்டித் தொகுதியில்—செப்பனிட்டுத் தர வேண்டும் என்று நான் அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்ற பணிகளின் மூலம் அந்தப் பகுதி மக்கள் இன்னும் பெரிதும் துன்பம் அடையாத அளவுக்கு அரசு துணை இருக்க வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். ஏனைய பகுதிகளுக்கு எல்லாம் 2 ஆண்டு வறட்சி என்றால், 3 ஆண்டு வறட்சிக்கு உள்ளாகி இருக்கிற இந்தப் பகுதிகளுக்கு சிறப்பான நிதி உதவியைப் பெற்றுத் தர வேண்டும் என்று நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய பட்ஜெட் உரையில் பல்வேறு திட்டங்களைப் பற்றி மாண்புமிகு நாவலர் அவர்கள் எடுத்து உரைத்து இருக்கிறார்கள். குறிப்பாக 30 லட்சம் வீடுகள் கட்டுகிற அந்தத் திட்டத்தையும் எடுத்து விளக்கி இருக்கிறார்கள். 30 லட்சம் வீடுகளை 3 ஆண்டுகளில் கட்டி முடிப்பதற்குரிய குறிக்கோளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது பற்றிப் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எங்கே 30 லட்சம் வீடுகள் எப்படிக் கட்டுவீர்கள்? எங்கே நிதி ஒதுக்கீடு என்று எல்லாம் வேகமாகக் கேட்டார்கள், மாண்புமிகு நாவலர் அவர்கள் வந்து கூட்டவா தெரியாமல் இந்த பட்ஜெட்டை சமர்ப்பித்து இருக்கிறார்கள் என்று அவர்களைப் பார்த்து நான் கேட்க ஆசைப்படுகிறேன். அவர் மிகவும் தெளிவாக தன்னுடைய



1987 மார்ச் 25] [திரு. இரா. முத்தையா]

பட்ஜெட் உரையில் இதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த 30 லட்சம் குடும்பத்ினருக்கு வீட்டு வசதி அளிக்க வேண்டும் என்ற நம்முடைய குறிக்கோளை எய்த பரந்த அளவில் வலுவான அடிப்படை வசதியை உருவாக்குவதுடன் இருக்கக்கூடிய அனைத்து வழிகளிலிருந்தும் பெருமளவு நிதியைத் திரட்ட வேண்டியதும் அவசியமாகும் என்று சொல்லிவிட்டு எந்த எந்த வகையில் அந்தப் பெரும் அளவு நிதியைத் திரட்ட முடியும் என்பதை எல்லாம் கோடிட்டுக் காட்டி இந்த இந்தத் திட்டத்திலிருந்து நிதியைப் பெற்று இந்த இந்த முறையில் எல்லாம் செய்யலாம் என்று குறிப்பிட்டுக் காட்டிவிட்டு இந்த அணுகுமுறையினால் ஆண்டு ஒன்றுக்கு மாதம் ரூபாய் 250 கோடி முதல் ரூபாய் 300 கோடி வரை நிதி உதவி கிடைக்கும் என்று அவர் இவ்வளவு தெளிவாகச் சொன்னதற்குப் பிறகும் எங்கே நிதி ஆதாரம் இருக்கிறது என்றும், துருவித் துருவிப் பார்க்கிறோம் தெரியவில்லை, தெரியவில்லை என்றும் சொல்லுகிறார்கள். இவ்வளவு பட்டவர்த்தனமாக சொன்னதற்குப் பிறகும் நேற்றுப் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் சகோதரர் பேரூர் நடராசன் அவர்கள் கடைசியில் ஒரு திருக்குறளைச் சொல்லிவிட்டு அமர்ந்தார்கள்.

(முற்பகல் 11-50)

'தன் நெஞ்சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்'

என்று நாவலரைப் பார்த்துக் கேட்கிறார்கள். இவ்வளவு பட்டவர்த்தனமாக அவர் உங்களுக்குக் கோடிட்டுக் காட்டியதற்குப் பிறகும், நீங்கள் அந்தக் குறளைச் சொன்னால், உங்களைப் பார்த்துவிட்டுத் தான் இவ்வளவு பட்டவர்த்தனமாக நிதியமைச்சர் அவர்கள் கூறியதற்குப் பிறகும், மாண்புமிகு தி.மு.க. உறுப்பினரைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன்.

'தன் நெஞ்சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்'

இப்படித்தான் பழைய காலத்திலே உங்களுடைய தலைவர் கேட்டார். 1982-83 ஆம் ஆண்டில் சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய நேரத்திலே, அதைப் பற்றிப் பேசினார்கள்,

அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள். 60 இலட்சம் குழந்தைகளுக்கு இலவச சத்துணவுத் திட்டம் தர இருக்கிறோம். ரூ. 100 கோடி செலவிலே என்றெல்லாம் சொல்கிறீர்களே, நானும் பட்ஜெட்டைத் துருவித் துருவிப் பார்க்கிறேன், படிக்கிறேன், இந்த பட்ஜெட்டினுடைய இணைப்பாகக் கொடுத்திருக்கிற அத்தனை புத்தகங்களையும் படித்தேன், 60 இலட்சம் குழந்தைகளுக்காக இலவச சத்துணவிற்காக, ஒரு பைசா கூட காண முடியவில்லையே என்று அவர் கேட்டார். அந்தத் திட்டம் நடக்குமா, எப்படி சாத்தியம் என்றெல்லாம் கேட்டார்களே, 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே கேட்டார்களே, ஆனால் இன்றைக்கு வரையிலும் அந்தத் திட்டம் நல்லமுறையில் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அதேபோன்று இந்தத் திட்டமும் மூன்று ஆண்டுகளில் நடந்துதான் தீரும்.

அதேபோன்று காலணி வழங்கும் திட்டம் என்று அறிவிக்கப் பட்டதற்கும் கேலி பேசுகிறார்கள். இதற்காக ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் தேவையென்றால், ஒதுக்கத் தான் செய்வார்கள். எங்களுடைய இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டிருக்கிற உணர்வை மதிக்க, புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். சில நேரங்களில் அவர்கள் கேட்பார்கள். அவர் நாடோடி மன்னனில் சொன்னதை யெல்லாம் செய்தார்களா என்று. இன்றைக்கும் அதை நினைவில வைத்துக் கொண்டு, புரட்சித் தலைவரவர்கள், இந்தத் திட்டத்தினை தீட்டியிருக்கிறார்கள். நாடோடி மன்னனில் ஒரு காட்சி வரும். உங்கள் எல்லோருக்கும் தெரியும். அந்தப் படத்தில் வீராங்கனாக இருக்கிற நாடோடி, மன்னன் மார்த்தாண்டனாக மாறிய பிறகு, ராணியிடம் சொல்வார்; "ராணி, உனக்கு அரண்மனையில் ரத்தினக் கம்பளங்கள் விரித்து வைத்திருக் கிறார்கள். ஆனால் நாட்டிலே தங்கள் காலிக குத்திய முள்ளில் பாதி முள்ளை ஒடித்து எரிந்துவிட்டு, மீதி முள்ளோடு நடந்து கொண்டேயிருக்கிறார்கள், எங்கள் சகோதரிகள்" என்று அன்றைக்குச் சொன்னார்கள், எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள். அந்த வாசகத்தை நினைவில் இருத்தி வைத்து, அந்தத் திட்டத்தினை அறிவித்திருக்கிறார்கள்.





கிராமங்களில் உள்ள ஏழைகள் இன்றைக்கும் கல், முள் நிறைந் திருக்கிற காடுகளைக் கடந்து செல்கிறார்கள். தங்கள் காலில் இருக்கின்ற முள்ளைப் பிடுங்கி எறிய முடியாமல், தாய்மார்கள். பாதி முள்ளை ஒடித்து எறிந்துவிட்டு, மீதி முள்ளோடு நடந்து கொண்டேயிருக்கிறார்கள். அவர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தினைக் கேலி பேசுகிறார்கள். இன்னும் என்ன பேசுகிறார்கள் தெரியுமா? இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறை வேறுமா? நடக்குமா என்றெல்லாம்கூடக் கேட்கிறார்கள். நாங்கள் எந்தத் திட்டத்தைப் போட்டாலும், செயற்படுத்தினா லும், அது தீர்க்காய்சாகத்தான் இருக்கிறது.

இன்றைக்கு சத்துணவுத் திட்டமானாலும், அதைப்போன்று தன்னிறைவுத் திட்டமானாலும் அவைகளை நல்லமுறையில் நிறை வேற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் உங்கள் காலத்தில் அரைகுறையாகக் கண் தெரிந்தவர்களுக்கு ஒரு கண்ணாடி போட்டு, அவர்களுடைய முழுக் கண்ணையும் கெடுத்ததைப் போல் எங்களுடைய ஆட்சியில் இன்றையதினம் நாட்டு மக்களுக்கு எந்த ஒரு பாதகமான செயலையும் நாங்கள் செய்வதில்லை. * * ஆனால் மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஊராட்சி ஒன்றியங்களின், நகராட்சிகளின் பொறுப்புக்களில் இருக்கிறார்கள். அவர்கள் சட்டத்தைத் தங்களுடைய கையிலே எடுத்துக் கொண்டு தாறுமாறான காரியங்களை இன்றைக்கும் செய்து கொண்டு இருக்கிறார்கள். போடியிலே ஒரு ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு இருக்கின்ற ஆதரவு 7 பேர்கள் தான். 16 பேர்கள் எதிர்க்கிறார்கள். 16 பேர்கள் எதிர்க்கின்றபோது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று எழுதி வைத்துக் கொண்டு அங்கிருக்கின்ற ஒன்றியத்தினுடைய பொதுநல நிதியினை அப்படியே எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதுபற்றிய புகாரை அந்த 16 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள். அரசுக்கு எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. இரா. முத்தையா] [1987 மார்ச் 25

அதுபோன்று ஆளும் கட்சிக்காரர்களை பட்டவர்த்தனமாக இந்த இடத்திலே தவறு செய்கிறார்கள் என்று யாராலும் குற்றம் சொல்ல முடிகிறதா? எனவே எப்படி நீங்கள் சொன்னாலும் கூட, இந்த ஆட்சியைக் குறை சொல்ல முடியும் என்று நீங்கள் என்னதான் திட்டமிட்டுச் செய்தாலும்கூட இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட 131 கோடி ரூபாய் பற்றாக்குறை இருப்பதைப் பலரும் குறை சொன்னார்கள். இதனால் பண வீக்கம் வந்துவிடும், ஏதோ கப்பலே கவிழ்ந்து விடும் என்பதைப்போல பலரும் வெளியிலேயும் இங்கேயும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மற்ற நண்பர்கள் பேசுவதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இதைக் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். 131 கோடி ரூபாய் பற்றாக் குறை . . . (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன் :** துணைத் தலைவர் அவர்களே, ஏதோ பற்றாக்குறை இருப்பது பண வீக்கத்தை உருவாக்கும் என்று எதிர்க்கட்சியான நாங்கள் குற்றம் சாட்டுவதாகக் குறிப்பிடு கிறார்கள். மரியாதைக்குரிய நாவலர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையின் துவக்கத்திலேயே இந்திய நாடு முழுவதும் இருக்கின்ற பற்றாக்குறை பண வீக்கத்தை உருவாக்குகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை அவருக்கு நினைவூட்டுகிறேன்.

**திரு. இரா. முத்தையா :** துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசாங்கம் 131 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் என்று அறிவித்துவிட்டு அந்த ரூபாயை எப்படி ஈடுகட்டுவது என்பதைக் கூடச் சொல்லி இருக்கிறார்கள். இன்றையதினம் நாங்களும் மத்திய பட்ஜெட்டைப் பாராட்டுகிறோம். அந்தப் பட்ஜெட்டில் ஏறத்தாழ 5,800 கோடி ரூபாய் திட்டத்திலும் பற்றாக்குறை. அவர்கள் திட்ட ஒதுக்கீட்டில் செய்திருக்கிறார்களே அது பண வீக்கத்தை உருவாக்கும் என்று கருதுகிறீர்களா? இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்களைச் செய்கின்றபோது பற்றாக்குறை பட்ஜெட் என்பது மாநில அரசாங்கத்திலே தவிர்க்கமுடியாதது. அதை எப்படி ஈடுகட்ட முடியும் என்பதையெல்லாம் எடுத்து விளக்கியிருக்கிறார்கள் டாக்டர் நாவலர் அவர்கள். அதற்குரிய



1987 மார்ச் 25] [திரு. இரா. முத்தையா]

வகையில் பிரதான எதிர்க்கட்சி ஒத்துழைப்பு நல்கி, அவர்கள் கேட்டிருக்கின்ற மத்திய உதவியை பெற்றுத் தருவதற்கு துணை நிற்க வேண்டுமே தவிர இதைக் குறை கூறிக்கொண்டிருப்பது நியாயம் இல்லை. சென்ற ஆண்டு கூட வறட்சி நிவாரண நிதிக்கு 300 கோடி ரூபாய் கேட்டோம். அவர்கள் 30 கோடி ரூபாய் ஒதுக்கு கிறார்கள். அதிலே 25 கோடி கடன், 5 கோடி தான் மான்யம். இப்போது 347 கோடி கேட்டிருக்கிறோம். இந்த ஆண்டாவது அந்தத் தொகையை பெற்றுக் கொடுத்தால் இந்தப் பற்றாக்குறை 131 கோடி ரூபாய் காரணமாக எந்தவிதமான பாதிப்புக்கும் தமிழக மாநிலம் ஆளாகாத அளவிற்கு எங்களுடைய டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பாதுகாப்பார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த பட்ஜெட்டை முழு மனதோடு வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

***திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்துள்ள 1987—88 நிதி நிலை அறிக்கையின் மீது ஜனதா கட்சி சார்பாக என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். இது ஏழை மக்களையும் நடுத்தர மக்களையும் வணிகர்களையும் கடுமையாக பாதிக்கக்கூடிய பட்ஜெட். இதில் 90 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. ஆனாலும் இன்னும் பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்கிறது. இந்த பட்ஜெட் ஏழை எளிய மக்களை மேலும் பாதிக்கிறது. இதில் லஞ்ச ஊழலை அதிகப்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. நிம்மதியான வாழ்வைக் குலைக்கிறது. மொத்தத்தில் இது ஏமாற்றம் அளிக்கும் பட்ஜெட் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அரியலூர் இரயில் விபத்து. திருச்சி மலைக் கோட்டை எக்ஸ்பிரஸ் 15—3—1987 அன்று கவிழ்ந்தது. பத்திரிகைச் செய்திப்படி 26 பேர்கள் இறந்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான மக்கள் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். இந்த கோர இரயில் விபத்தை, காட்டுமிராண்டித்தனமான செய்கையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 மார்ச் 25

(நண்பகல் 12-00)

இதிலே காவல்துறை பல செயல்களில் ஈடுபட்டு, பலரைக் கைது செய்திருக்கிறார்கள்; செய்து கொண்டிருக்கிறது. ஆனாலும்கூட இதில் அந்நிய சக்தி ஊடுருவல் இருக்கிறதோ என்று எங்களுக்கு சந்தேகம் இருக்கிறது. இதையும் இந்த அரசு, மத்திய அரசுடன் சேர்ந்து பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரியான ஒரு விபத்து தமிழ்நாட்டிலே இதுவரை ஏற்பட்ட தில்லை. குண்டு வெடிப்பினாலே எட்டு பெட்டிகள் மருதையாற்றுப் பாலத்திலே விழுந்து இருக்கிறது. தமிழ்நாட்டை ஆளுகின்ற முதல்வர் அவர்கள் நேரில் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறாதது ஒரு குறையாக எங்களுக்கு இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்றிருக்கவேண்டும் என்று நாங்கள் கருது கிறோம்.

அதைப்போல, நடுத்தர மக்கள், குறிப்பாக ஏழைகள் பெரிதும் உபயோகிக்கக்கூடிய ஆஸ்பெஸ்டாஸ், செங்கல், மரம் முதலியவற்றிற்கு எல்லாம் வரி போடப்பட்டிருக்கிறது. இந்த வரிகளினால் மிகவும் பாதிப்புள்ளாகிறவர்கள் ஏழைகள், நடுத்தர மக்கள். அதேபோல, உணவுச் சாலைகளுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. அந்த உணவுச் சாலைகள் மீதான் வரி குத்து மதிப்பான வரி. அந்தக் குத்து மதிப்பான வரியினால் வணிக வரித் துறை அதிகாரிகளின் தொந்தரவிற்கு, அந்த உணவுச் சாலைகளை நடத்துவோர் ஆளாகவேண்டிய நிலை ஏற்படும்.

ஏலக்காய்க்கு பலமுனை வரி 4 சதவீதம் ஆக இருந்ததை, 5 சதவீதம் என்று ஆக்கியிருக்கிறீர்கள். அந்த ஏலக்காயானது, பல கோடி ரூபாய்கள் அன்னியச் செலாவணி வருமானம் உள்ள ஏற்றுமதி தரக்கூடிய ஒரு வியாபாரம். அந்த வியாபாரத்தை நீங்கள் முடக்கியிருக்கிறீர்கள் என்று போடியிலிருந்து எங்களுக்கு தந்தி வந்திருக்கிறது. ஏலக்காய் வியாபாரத்திற்கு பல முனை வரியாக்குவது அந்த வியாபாரத்தை ஸ்தம்பிக்கச் செய்திருப்ப தாக செய்தி வந்திருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டும்.



1987 மார்ச் 25] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அதுபோல் விற்பனை வரி. விற்பனை வரி இல்லாத ஒரு சரக்கின் விற்பனைக்கு அடிஷனல் டாக்ஸ் போடப்பட்டிருக்கிறது. அதாவது எப்படி என்று சொன்னால், ஒருவர் வாங்கி விற்கின்ற சரக்குக்கு ஒருமுனை வரி—ஒருமுனை வரி கட்டிவிட்டால் அதற்குப் பிறகு வரி கிடையாது. செகன்ட் சேல்ஸ் என்று வாங்கி விற்பவர்களுக்கு வரியே கிடையாது. வரியே இல்லாததற்கு எப்படி வரி போட முடியும் என்று எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் என்பது இப்போது அவர்கள், செகன்ட் சேல்ஸ்—இரண்டாவது விலையிலே விற்பவர்களைக் கடுமையாகப் பாதிக்கிறது. சில வணிகர்கள் விற்பனை வரி அதிகாரிகள் தங்களுடைய கடைகளைச் சோதனை யிடக்கூடாது என்ற காரணத்தினால் செகன்ட் சேல்ஸ் என்று, அதாவது விற்பனை வரி கட்டமுடியாத பொருட்களை மட்டும் வாங்கி விற்கிறவர்கள். இது அவர்களை மிகக் கடுமையாகப் பாதிக்கிறது.

இன்னொன்று கூடச் சொல்வேன். நீங்கள் போடுகிற வரி, 80 கோடி என்று இப்படி வரி வசூலித்தீர்களானால், அது 500 கோடி 1000 கோடி. புதிதாக வரியைக் கொடுக்கும் என்ற நிலை ஏற்படுகிறது. வணிகர்களை மிகவும் சுமைக்குள்ளாக்குகிறது. அது போல, அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ். 10 இலட்சம் வரை விதிவிலக்கு இருந்தது. சென்ற ஆண்டுதான் கொடுத்தீர்கள். மிகவும் போராடி, வணிகர் சங்கங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் போராடி அந்தச் சலுகையைப் பெற்றோம். அதை மறுபடியும் 7 இலட்சமாகக் குறைத்திருக்கிறீர்கள். அதனால் வணிகர்கள் பெரிதும் அவதிக்குள்ளாகிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். அதிகமாக வணிகம் செய்யும் வியாபாரிகளுக்கு அபராதம் விதிப்பதைப்போல் இது இருக்கிறது. அந்த வரிகளை எல்லாம் சரிபார்த்து, நீங்கள் வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல வரிக்கு வரி, சர்சார்ஜ். இது சில நகரங்களிலே சாலைகளை சரிபார்ப்பதற்கென்று, சாலைகளை பரிபாலிப்பதற் கென்று போடப்பட்டதாக அறிகிறோம். ஆனால் இது இப்போது மாநிலம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 மார்ச் 25

வரிக்கு வரி என்பது மிகவும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாக இருக்கிறது. இதையும் இந்த அரசு பரிவுடன் கவனித்து வரிக்கு வரி என்பதை நிறுத்திவைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் காலணா—அப்போது இருந்த காலணா—1½ பைசா வரி போட்டு ரூபாய் 100 கோடி வந்திருக்கிறது. ஆனால் இப்போது சரக்குகள் எல்லாம் பல மடங்கு விலைகள் கூடியிருக்கிறது. இதுபோல், வரிகளும் பல மடங்கு போடப்பட்டிருக்கிறது. உற்பத்தியும் அதிகமாகி யிருக்கிறது. தொழிற்சாலைகளும் அதிகமாகப் பெருகி யிருக்கின்றன. இவ்வளவு எல்லாம் இருந்தும் கூட, 1000 கோடி ரூபாய் தான் வரி வருமானம் வருகிறது என்று சொல்கிறீர்கள். இது எங்கோ ஒரு இடத்திலே குறை இருப்பதாக நான் அறிகிறேன். பல மடங்கு வரி போடப்பட்டிருக்கிறது. பல மடங்கு உற்பத்தி இருக்கிறது. அப்படி இருக்கும்போது நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, இரண்டு சதவிகித வரி நீங்கள் போட்டாலே அனைத்து சரக்குகளுக்கும் 1,500 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று உறுதியாக என்னால் சொல்ல முடியும். இதை வணிக வரித் துறை அமைச்சரும், அரசும் பரிசீலிக்க வேண்டும்.

இரண்டு சதவிகித வரியாக, அனைத்துப் பொருட்களுக்கும் போட்டாலே, ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல பஸ் கட்டண உயர்வு. பட்ஜெட்டிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக போடப்பட்டது. அனைத்துப் பேருந்து களும் இலாபத்திலே ஓடுகின்றன. பல்லவன் போக்குவரத்துக் கழகம்கூட நஷ்டம் என்றாலும்கூட, அதற்கு மூன்று கோடி ரூபாய் வட்டி போட்டிருப்பதால்தான் நஷ்டம் என்று கேள்விப் படுகிறேன். இப்படி அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் இலாபத்திலே ஓடும்போது, ஏன் பஸ் கட்டணத்தை உயர்த்து கிறீர்கள் என்று தெரியவில்லை. 1985 ஜூலையிலே உயர்த்தும் போது, தனியார்களும் பஸ் கட்டண உயர்வு கேட்டார்கள். இப்போது அவர்கள் கேட்கவே இல்லை. அப்படியிருக்கும்போது இலாபத்திலே ஓடுகிற பஸ்களுக்கு, இந்த வறட்சி நேரத்திலே பஸ்



1987 மார்ச் 25] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

கட்டண உயர்வு தேவைதானா என்று கேட்டு, பஸ் கட்டண உயர்வை வாபஸ் பெறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அது போல * * * (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதெல்லாம் பட்ஜெட்டிலே எப்படி வரும்? பட்ஜெட்டிலே பேசுங்கள். * * அதுபற்றியெல்லாம் நீங்கள் பேசக் கூடாது. பட்ஜெட்டைப் பற்றி ஏதாவது விவரமாகப் பேசுங்கள். உங்கள் நேரம் போய்க் கொண்டிருக்கிறது. தொகுதியைப் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** நிர்வாகம் பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறேன். தமிழ்நாட்டிலே நிர்வாகம் பாதிக்கப்படு கிறது என்ற காரணத்தினாலே (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * அமைச்சரவை சம்பந்தப்பட்டவைகளை நீக்கிவிட உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு).

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** நிர்வாகம் பாதிக்கப்படுகிறது என்று சொல்ல வந்தேன். நிர்வாகம் பாதிக்கப்படுகிறது (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாதிக்கப்படுகிறது என்றால் எந்த இடத்தில் பாதிக்கப்படுகிறது என்று சொல்லுங்கள். பாதிக்கப்படுகிறது, பாதிக்கப்படுகிறது என்று ஸ்வீப்பிங்காகச் சொல்லக் கூடாது. கரெக்டாகச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு)

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாநிலம் முழுவதும் நெசவாளர் பிரச்சினை. அனைத்துப் பகுதிகளிலும் நெசவாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். ஊர்வலம் போகிறார்கள். ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம் போன்ற பகுதிகளிலே துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அங்கிருந்து பட்டினிப் பட்டாளம் சென்னை கோட்டையை நோக்கி ஜனதா கட்சியினுடைய பெருமாள்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றன.

தலைமையிலே வந்து இங்கே ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். நெசவாளர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே உள்ள பட்டு கூட்டுறவு நெசவாளர்களெல்லாம் நூலே கிடைக்கவில்லையென்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள்; தஞ்சை நெசவாளர்களுக்கு பட்டு நூல் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஜீப் தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். மாதம் இரண்டு முறை என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு வருடமாக ஜீப் கிடைக்கவில்லை. அதுபற்றி தபால்கூட வந்திருக்கிறது; அதைக் கொண்டு வந்திருக்கிறேன். ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர், இங்குள்ள அமைச்சர் அவர்களுக்கு காப்பிகூட போடப்பட்டிருக்கிறது. ஒரு வருடமாக ஜீப் கொடுக்கப்படவில்லை. ஜீப் கொடுக்காததால் பலமுறை சுற்றுப் பயண விவரத்தை அச்சடித்துவிட்டு செல்லமுடியாமல் செய்து விடுகிறார்கள். இதற்கெல்லாம் ஒரு முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். 50 லிட்டர், 75 லிட்டர் என்று பெட்ரோல் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். கார் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதையெல்லாம் எங்களிடம் கொடுத்துவிட்டால் நாங்கள் சுற்றுப்பயணம் செய்வதற்கு வசதியாக இருக்கும். ஒரு வருடத்திற்கு கணக்கு போட்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பத்திரப் பதிவு. தமிழ்நாடு முழுவதும் நிலத்தினுடைய விலைகள், மதிப்பை உயர்த்தி இருக்கிறீர்கள். இந்தக் காரணத்தினாலே சென்ற 15 நாட்களாக பத்திரமே பதிவு செய்யப்படவில்லை. காமராஜர் மாவட்டத்திலே 5 ஆயிரம் ரூபாய்க்கு நிலம் வாங்குபவர்கள் 6 ஆயிரம் ரூபாய்க்கு பத்திரம் பதிவு செய்ய வேண்டி இருக்கிறது. இது அதிசயமாக இருக்கிறது. இதையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டும். சென்ற ஒரு மாதமாக காமராஜர் மாவட்டத்தில் பதிவே





நடைபெறாமல் இருக்கிறது. இதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்து இதைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காமராஜர் மாவட்டத்திலே ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு ஏக்கர் 3 ஆயிரம் ரூபாய்க்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய விலை மதிப்பு 1 லட்சம் என்று போடப்பட்டிருக்கிறது. 3 ஆயிரம் ரூபாய்க்கு எடுக்கப்பட்டு 1 லட்சம் மதிப்பு போடப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் மாதத்திலே தர்மபுரி மாவட்டத்திலே புதிதாகப் பேருந்துக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே பாப்பாரப் பட்டி சுப்ரமணிய சிவா, அரசியல் வித்தகர் இராஜாஜி, அவ்வையார், மன்னன் அதியமான் போன்றவர்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே வாழ்ந்து மறைந்த தியாகிகள். இந்த அரசினுடைய கொள்கை வழிப்படி அவர்களுடைய பெயராலே வரிசைக்கிரமமாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமரர் சத்தியமூர்த்தி அவர்களுடைய நூற்றாண்டு விழா வருகிறது. 19—8—1987-லே அவரது நூற்றாண்டு விழா. அவர் சென்னை மேயராக இருந்திருக்கிறார்.

திரு சத்தியமூர்த்தி அவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினராகவும், மத்திய சட்டமன்ற உறுப்பினராகவும் டெல்லியில் காங்கிரஸ் கட்சியின் டெபுடி லீடராகவும் சென்ட்ரல் லெஜிஸ்லேச்சரில் இருந்திருக்கிறார்கள். அவருடைய நூற்றாண்டு விழாவை இந்த அரசு சிறப்பான முறையில் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அவருடைய நினைவுநாள் விழா வரும் 28—3—1987 ஆம் தேதி வருகிறது. சென்னை மாநகராட்சிக் கட்டிடத்திற்கு அருகே உள்ள அவருடைய சிலையைச் சரியாகப் பராமரிக்க வேண்டும் என்றும் அந்தச் சிலைக்கு மின் வசதி செய்து தர வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். நான் ஏற்கெனவே அங்கேயுள்ள ஆணையரிடம் இதைப்பற்றித் தெரிவித்திருக்கிறேன். அரசும் இதில் தலையிட்டு அந்தச் சிலைக்கு—அமரர் சத்தியமூர்த்தியின் சிலைக்கு—மின் வசதியைச் செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அமரர் சத்தியமூர்த்தி அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அரசியல் குரு என்று

அழைக்கப்பட்டவர். எனவே அவருடைய பெயராலே ஒரு மாவட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் நீண்ட தூர எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடப்பட்டன. கடந்த இரண்டாண்டுகளாகவே நான் ஏற்கெனவே சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டும் சொல்லுகிறேன். அவருடைய பெயராலே ஒரு போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையினைப் பற்றிச் சொல்லும்போது தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள காவல் துறையினர் வேண்டுமென்றே தேவையான வழக்குகளைப் போடாமல் தேவையற்ற வழக்குகளைப் போட்டு மக்களைச் சிரமப்படுத்துகிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விருதுநகரில் கொடிக் கம்பப் பிரச்சினை ஒன்று ஏற்பட்டது. அங்கே உள்ள கொடிக் கம்பத்தை காங்கிரஸ்காரர்கள் சேதப் படுத்தினார்கள் என்று நாங்கள் புகார் கொடுத்திருந்தோம். அவர்கள் மீது நடவடிக்கை இல்லை. ஆனால் ஜனதா கட்சிக்காரர்கள் தான் சேதத்தை ஏற்படுத்தினார்கள் என்று என் மீதும் மற்றும் ஐவர் மீதும் வழக்குப் போட்டிருக்கிறார்கள். கொடிக் கம்பத்தில் இருந்த கல்லை—எங்கள் கட்சிக் கொடிக் கம்பத்திலிருந்த கல்லை—நாங்கள்தான் எடுத்துவிட்டோம் என்று சொல்லி எங்கள் கட்சிக்காரர்கள் மீதே காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கிறார்கள். இது விசித்திரமாக இருக்கிறது.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தில் கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த எங்கள் கட்சிக்காரர் ஒருவரை விசாரிப்பதற்காக என்று சொல்லி ரோடிலேயே அடித்து இழுத்துச் சென்றிருக்கிறார்கள். அவருடைய பெயர் கோவிந்தராஜன். அவர் ஊராட்சி மன்றத் தலைவராக 17 ஆண்டுக் காலம் பதவி வகித்தவர். தர்மபுரி ஜில்லா. முக்கூர் காவல் துறையினர் வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் தெருவிலே அடித்து இழுத்துச் சென்றிருக்கிறார்கள்.



இந்தச் சம்பவத்தைக் குறித்து நீதி மன்றத்திலே அவர் ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறார் அதன் காரணமாக அந்த சப்-இன்ஸ்பெக்டரை அங்கேயிருந்து வேலூருக்கு மாற்றியிருக்கிறார்கள். ஆனால் அந்த அதிகாரியோ அங்கே வேலையை ஒப்புக் கொள்ளாமலேயே லீவு போட்டுவிட்டு அதே இடத்திற்குத் திரும்ப மாற்றல் வாங்கி வந்துவிட்டார். இது அவருக்கு எப்படி சாத்தியமாயிற்று என்றுதான் புரியவில்லை. அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே மதுராந்தகம் தாலுக்காவில் சூரியங்காடு நடராஜன் என்பவர் தன்னுடைய உயிருக்கு ஆபத்து என்று சொல்லி காவல் துறையில் புகார் செய்திருக்கிறார். ஆனால் அதைப்பற்றி இதுவரையும் ஒரு விசாரணையும் இல்லை. அதைப் போலவே வெண்கரும்பூர் திரு. ஈ. ராமலிங்கம் அவர்கள் ஜனதா கட்சியின் வட்டாரச் செயலாளர். அவரும் தன்னுடைய உயிருக்கு ஆபத்து என்று சொல்லி காவல் துறையில் புகார் செய்திருந்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. தங்களுக்கு வேண்டியவர்கள் புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பதும் வேண்டாதவர்கள் புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்காத நிலையும் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யும் நகராட்சியான விருதுநகர் நகராட்சியில் கடந்த 17—2—1987 அன்று லாரி ஷெட், கழிப்பறை, சைக்கிள் ஸ்டாண்டு, கடைகள் போன்றவற்றை ஏலம் விட்டார்கள். சென்ற வருஷம் இவைகள் எல்லாம் ரூ. 2 லட்சத்திற்கு ஏலம் போயிற்று. ஆனால் இந்த வருஷம் 1 லட்சத்திற்குத் தான் போனது. அது காங்கிரஸ் நகராட்சி. காங்கிரஸ் நகராட்சித் தலைவர் இதற்குக் காரணம் என்ன என்று பார்த்து இதில் முறைகேடுகள் இருந்தால் அதைக் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே 2 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது இந்த ஆண்டு ஒரு லட்சத்திற்கு மட்டும் ஏலம் போவானேன் என்று அரசு விசாரித்துப் பார்க்க வேண்டும். விசாரித்து தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் ஏற்கெனவே சொன்னபடி ஏழைத் தாய்மார்களுக்கும் பள்ளிச் சிறுவர்களுக்கும் காலணி கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பெண்களுக்கு மட்டும் தான் காலணி கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர்களுக்கு நல்ல காலணி கொடுக்க வேண்டுமென்றால் ரூ. 100 கோடி தேவைப்படும். தவிர எல்லா ஏழைகளுக்கும் காலணி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது ஏழை ஆண்களுக்கும் காலணி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நல்ல காலணியாகக் கொடுக்க வேண்டுமென்றால் ரூ. 50 வேண்டும். ஆனால் குறைந்த விலையில்தான் தற்போது காலணி வழங்க இருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். ரூ. 10 விலையில் காலணி கொடுத்தால் அது மட்டமாக இருக்கும். அதன் காரணமாக மக்கள் எல்லோருக்கும நோய் வந்து விடக் கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே நல்ல காலணிகளைக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தில் கள், சாராயக் கடைகளை ஒழிப்பதாகச் சொல்லி அதை எடுத்ததற்காக மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அதற்குப் பதிலாக பிராந்தி, விஸ்கி போன்ற கடைகளை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அதன் மூலமாக நீங்கள் ஏழைகளை எல்லாம் மேட்டுக் குடிமக்களாக ஆக்கியிருக்கிறீர்கள். முன்பு அவர்கள் 5 ரூபாய்க்குக் குடித்துவிட்டு 15 ரூபாயை வீட்டுக்குக் கொண்டு போய்க் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது ரூ. 20-க்குக் குடித்துவிட்டு ரோடிலேயே விழுந்திருக்கிறார்கள். எனவே இத்தகைய நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். பல இடங்களில் கள்ளச் சாராயம் விற்பதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. திருச்செந்தூர் தாலுக்கா புன்னக்காயலில் 25 ஆயிரத்திற்குப் போன ஏலம் ஊர்க் கூட்டத்தில் 26 ஆயிரத்திற்குப் போனதாக செய்தி வந்திருக்கிறது. அதைப் போலவே வடாற்காடு மாவட்டத்தில் நாட்ராம்பள்ளியில் சாராயக்கடைகளை ஒழிக்கக் கோரி செல்வம் என்பவர் டவுன் பஞ்சாயத்து ஆபீஸ் முன்பாக





சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்திருக்கிறார். இப்படி பல்வேறு குற்றச்சாட்டுகள் அங்கே இருக்கின்றன. விருதுநகர் நகராட்சித் தலைவர் காங்கிரஸ் கட்சிக்காரர். அந்த நகராட்சிப் பகுதியில் உள்ள பயணிகள் விடுதியில் 500 பாட்டில்கள் சாராயம் பிடிக்கப்பட்டன. பிறகு நடவடிக்கை எடுத்தார்கள். அந்த நடவடிக்கை எடுத்ததற்காக அந்தக் காவல்காரர்களுக்கு புரொமோஷன் ஆகிறது. இது சரிதானா?

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் நகராட்சியில் சாராயம் பிடிபட்டதாகச் சொல்லுகிறார்கள். இது சபைக் குறிப்பிலே இருப்பது நல்லதல்ல என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நகராட்சி என்று மட்டும் சொல்லுங்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: அதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நடவடிக்கை எடுத்ததாக நீங்கள்தானே சொன்னீர்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: நகராட்சி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். வறட்சி நிவாரணம்பற்றி சொல்லும்போது 28 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் விருதுநகரில் நகராட்சி நான்கு குழாய்களைப் போட்டிருக்கிறார்கள். விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தில் 8 குழாய்களைப் போட்டிருக்கிறார்கள். இன்னும் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் போடவில்லை என்று கேட்டால், பணம் இன்னும் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்தப் பணத்தை எப்போது கொடுக்கப் போகிறீர்கள்? காமராஜ் மாவட்டத்திலே 250 குழாய்களைப் போடுவதாகச் சொன்னார்கள். ஆனால் போட்டது 110 குழாய்கள்தான். ஆகவே மீதமுள்ள குழாய்களையும் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காமராஜ் மாவட்டத்திலே ஒரு சர்க்கரை ஆலை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கேயிருக்கக் கூடிய மக்களுடைய நீண்ட கால கோரிக்கை, சர்க்கரை ஆலை வைக்க

1987 மார்ச் 25] [திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்]

வேண்டும் என்பது. இன்னொன்று விருதுநகரில் இரயில்வே லெவல் கிராசிங்கில் மேம்பாலம் வேண்டும் என்பது அவர்களுடைய நீண்ட கால கோரிக்கையாக இருக்கிறது. விருதுநகர் ஊருக்குக் கிழக்கேதான் தலைமை மருத்துவமனை, பள்ளிகள், கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், திருமண மண்டபம் ஆகியவை இருப்பதால் அங்கே இரயில்வே லேவல் கிராசிங்கில் மேம்பாலம் போட்டுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கே யுள்ள பிற்பட்ட மக்கள் தலைநகருக்கு வர முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு மேம்பாலம் அர்ஜுனா நதியில் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 1987-88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது ஓரிரு கருத்துக்களைப் பாராட்டிப் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால் ஓரிரு கருத்துக்களை எங்கள் மாவட்டத்திலே உள்ள பிரச்சினைகளை குறித்து குறிப்பிட விரும்புகிறேன்.

பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டரை ஆண்டுக் காலம் மழை இல்லாத காரணத்தால் வறட்சியின் கோரப் பிடியில் தவிக்கிற அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்தாலும் இந்த மாவட்டத்திலே நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் பல்வேறு திட்டங்களின் மூலம் நிறை வேற்றுவதற்கு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதியை அள்ளித் தர வேண்டும் என்ற வேண்டுகோளை முதலிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பவானிசாகரிலிருந்து ஆயக்கட்டுப் பகுதியில் சேர்க்கப்படாத சுமார் 20,000 ஏக்கர் நிலத்தை ஆயக்கட்டுப் பகுதியில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதை ஏற்று இந்த ஆண்டு கூடுதலாக மேலும்



1987 மார்ச் 25] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

இருபதாயிரம் ஏக்கர் நிலத்தை கீழ் பவானி பாசனப் பகுதியில் சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மையில் வாழ்ந்து கொண்டுள்ள அந்தப் பகுதியில் தொழிற் கூடங்கள் இல்லை. வறட்சி வருகிறபோது, விவசாய வேலை செய்கிற தொழிலாளிகள், வேலையற்று வறுமைக் கோட்டிற்குள்ளே உள்ள விவசாயிகள் பயன்படக் கூடிய வகையில் அந்தப் பகுதியில் தொழிற் கூடங்களை அமைப்பதற்காக பெரியார் மாவட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை அந்த அந்த மக்கள் சார்பாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் நிதிநிலை அறிக்கை பற்றிப் பேசும்போது ஓரிரு கருத்துக்களை கோடிட்டுக் காட்டினார்கள். குறிப்பாக இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் ஒரு கருத்தை இங்கே கோடிட்டுக் காட்டினார். ஒரு புறத்திலே விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்றும் மறுபுறத்திலே விவசாயிகளுக்கு விளைபொருளின் விலையைக் கூட்டித் தர வேண்டும் என்றும் சொன்னார்.

(பிற்பகல் 12-30)

மேற்கு வங்காளத்தைப் பார்க்கிறபோது, தமிழகத்தில் இன்றைக்கு விலைவாசி குறைக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரத்தை ரிசர்வ் வங்கி புல்லட்டின் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு அவர்களுடைய கட்சியைப் பொறுத்தவரையிலும், பச்சோந்திகளைப்போல, இடத்திற்கு இடம் நிறம் மாறுவதுபோல, அவர்களுடைய கொள்கை இருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளைப் பார்க்கிறபோது, விவசாயிகளுடைய பொருள்களுக்கு நியாய விலை கிடைக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லுகிறார்கள். அதே நோக்கில், தொழிலாளர்களைப் பார்க்கிறபோது அவர்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தொழிலாளர்

களைப் பார்த்து, உங்களுக்கு சர்க்கரை குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். விவசாயிகளைப் பார்க்கிறபோது, கரும்பின் விலையைக் கூட்டித் தர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். விவசாயிகளைப் பார்க்கிறபோது நெல்லுக்கு நியாய விலையை உயர்த்தித் தர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் தொழிலாளர்களைப் பார்க்கிறபோது அரிசியை குறைந்த விலையில் தர வேண்டுமென்ற கருத்துக்களை முழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியினர் சொல்வதைத் தவறாகப் புரிந்துகொண்டு சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். உற்பத்தியாளர்கள் என்ற முறையில் விவசாயிகளிடம் மிகக் குறைந்த விலையில் வாங்கியும், உபயோகிப்பவர்கள் என்ற முறையில் பொது மக்களுக்கு அதிக விலைக்கு விற்றும் இந்த நாட்டில் தொடர்ந்து சூரையாடுவது வர்த்தகச் சூதாடிகள். ஆகவே இடையிலே உற்பத்தியாளர்களையும், உபயோகிப்பவர்களையும் இரட்டை முறையில் கொள்ளை அடிக்கிற வர்த்தகச் சூதாடிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய நிலையாகும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: அதற்காகத்தான் அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை வைத்து, இடைத் தரகர்களை ஒழிக்க வேண்டுமென்பதற்காக அரும்பணி ஆற்றி வருகிறது என்பதை எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் அறிவார்கள்.

நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், கடந்த 2 ஆண்டுக் காலமாக மழை இல்லாத நேரத்திலும்கூட, வறுமைக் கோட்டுக் குக் கீழே உள்ள மக்களை எண்ணிப் பார்க்கிறது. இதற்கு முன்னாலே 20 ஆண்டுக்காலம் ஒரு கட்சி ஆட்சியிலே இருந்த போது. 1965-லே பச்சரிசி 5 ரூபாய்க்கும், 6 ரூபாய்க்கும் விற்றது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருக்கிற நேரத்தில் 1973 ஆம் ஆண்டு 6 மாத காலம் மழை இல்லாத நேரத்தில், பச்சரிசி ஏறத்தாழ 7 ரூபாய்க்குக்கூடக் கிடைக்காமல், மக்கள் ரேஷன் கடையில் கியூவில் நின்ற காலம்



சென்னை-600 008. 1366



காலம். ஆனால் இன்றைக்கு 2½ ஆண்டுக்காலம் மழை ...த நேரத்திலும், வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள ...ின் நியாயமான உயர்வுகளைப் புரிந்துகொண்டு, நம்முடைய ...த்தின் தங்கத் தலைவன், புரட்சித் தலைவர் அவர்களுடைய நேர்மையான முறையிலே நடக்கிறது என்பதற்கு இதை ...ஒரு எடுத்துக்காட்டாகக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 2½ ...ண்டுகளாக வறட்சியின் கொடூரப் பிடியினால் விவசாயிகள் உற்பத்தி செய்ய முடியாத சூழ்நிலையின் காரணமாக, பல்வேறு மாநிலங்களிலிருந்து அரிசியைக் கொண்டு வந்து. தமிழக மக்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள்களைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் ஆட்சியைச் சீரான முறையில், ஏழை எளியவர்களுக்காக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, அன்புக்குரிய நண்பர்கள் இங்கே ஒன்றை குறிப்பிட்டுக் காட்டினார்கள். பொருளாதார அடிப்படையில் உயர்ந்த நாடுகள் இருக்கின்றன. அதே நேரத்தில் பொருளாதார அடிப் படையில் தாழ்ந்த நிலையில் இருக்கிற நாடுகளும் இருக்கின்றன. அந்த அடிப்படையிலே தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு பொருளாதார அடிப்படையிலே உயர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதே நேரத்தில் சமுதாயத்தில் நலிந்து கிடக்கிற மக்களுக்காக பல்வேறு திட்டங்களை இந்த ஆட்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் சரி, காங்கிரஸ் கட்சி ஆட்சியிலும் சரி, ஆழ் குழாய்க் கிணறு திட்டங்கள் கிடையாது. அன்றைக்கு ஒருவர் கிணற்றிலிருந்து தண்ணீர் இரைத்துக்கொண்டு வரவேண்டுமென்று சொன்னால் மூன்று பொருள்களை எடுத்துச் சென்றுதான் தண்ணீர் இரைத்து வர வேண்டிய சூழ்நிலை இருந்தது. ஒரு கையிலே கயிறு, மறு கையிலே பக்கெட்டு, தலையிலே குடம் ஆகியவற்றைச் சுமந்து செல்லும் ஒரு நிலைமை அந்தக் காலத்திலே இருந்தது. அதை மாற்றி அமைக்கவேண்டுமென்று சொல்லி, ஒரு பொருளை எடுத்து

[திரு. கு. அ. செங்கோட்டையன்] [1987 மார்ச் 25

வந்தாலே போதும், அது பக்கெட்டாக இருந்தாலும் சரி அல்லது குடமாக இருந்தாலும் சரி அல்லது வழிப் போக்கனாக இருந்தாலும் சரி, ஆழ் குழாய்க் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லலாம்; அங்கே மின்சாரம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஆழ்குழாய்க் கிணற்றுக்குச் சென்றால் தண்ணீர் எடுத்து வரலாம் என்ற நிலைமை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் அரசில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, On a p int of order திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஆழ் குழாய்க் கிணறுகள் இருந்தன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்):** இது எல்லாம் பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**திரு. கு. அ. செங்கோட்டையன்:** நகர்ப்புறங்களிலே அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் ஆழ் குழாய்க் கிணறுகளை அமைத்தார்களே தவிர, கிராமப்புறங்களில் அமைக்கவில்லை. கிராமப்புறங்களில் கிணறுகள் இல்லாத இடத்தில் வாழ்கிற வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள மக்கள், பக்கத்தில் இருக்கிற தோட்டத்திற்குச் செல்கிறபோது, அந்தத் தோட்ட முதலாளிகள் அந்த கிராமப்புற ஏழை எளிய மக்களைச் சுரண்டுகிற நிலைமையை மாற்றி அமைத்திருப்பது இந்த ஆட்சி என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் இங்கே அன்புக்குரிய நண்பர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள், ஏழைக் குழந்தைகள் நல்ல முறையிலே கல்வி அறிவு பெற்று, சமுதாயத்தில் ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காக சத்துணவுத் திட்டத்தை இந்த ஆட்சி நல்ல முறையிலே தீட்டியிருக்கிறது. அன்பிற்குரிய நண்பர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டுகிறபோது பேருந்துபற்றிச் சொன்னார்கள். குறிப்பாக இன்றைக்கு அத்தனை கார்ப்பரேஷன்களும் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றது என்று சொன்னார்கள். அதுபோலவே இன்றைக்கு எரிபொருள்கள் விலை ஏற்றப்படாமல்தான் இருக்



1987 மார்ச் 25] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

கின்றன. இருந்தாலும் ஏன் கட்டணத்தை உயர்த்தியிருக்கின்றார்கள் என்பது போன்ற கருத்துக்களை இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். இங்கே இருக்கின்ற நண்பர்கள் நகர்ப்புறங்களிலே பேருந்துகளை விட்டால் போதும் என்ற கருத்துக்களைச சொல்லியிருக்கிறார்கள் போல் இருக்கிறது. இன்றைக்குக் கிராமப்புறங்களிலே இருப்பவர்கள் 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் தூரத்திலே இருப்பவர்கள் நகர்ப்புறத்திற்கு வருவதற்குக் கூட பேருந்து இல்லாமல் இருக்கின்றார்கள். ஏறத்தாழ 5, 6 கிலோ மீட்டர்கள் தூரம் நடந்து வருகின்றார்கள். அப்படி நடந்து வருகின்ற மக்களைப் பார்த்துதான் புரட்சித் தலைவர் அவர்கள் திட்டங்களைத் தீட்டி இருக்கின்றார்கள். அவர்கள் எண்ணிப்பார்த்தார்கள். அப்படி அவர்கள் எண்ணிப்பார்த்த பிறகுதான் இன்றைக்கு 4 ஆயிரம் பேருந்து என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்ததைக் கூடுதலாக்கி 11 ஆயிரம் பேருந்துகளை விட்டிருக்கின்றார்கள். கிராமப்புறங்களிலே இருக்கின்ற நலன் கருதி பல்வேறு திட்டங்களை கிராமப்புறங்களிலே இன்றைக்குச் செய்துகொண்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு பஸ் கட்டணத்தை உயர்த்துகின்ற நேரத்தில் கிராமப்புறத்திலே மேலும் கூடுதலாக 20 சதவிகிதம் மக்களுக்கு பேருந்து விடுவதிலே கவனம் செலுத்தியிருக்கின்றார்கள். பேருந்து வசதியை அத்தனை கிராம மக்களுக்கும் நாம் எப்படி தருவது? இதையெல்லாம் எண்ணிப் பார்த்துதான் புரட்சித் தலைவர் அவர்கள் திட்டங்கள் தீட்டியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு பஸ் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்ற ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். எதிர்க் கட்சியிலே உள்ள நண்பர்கள், கோடிட்டுக் காட்டுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். பஸ் கார்ப்பரேஷன்கள் எல்லாம் லாபத்தில் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதே நேரத்திலே எரி பொருள்கள் விலை ஏறாமல் இருக்கின்றன, ஏன் கட்டணத்தை ஏற்றுகின்றார்கள் என்று கேட்கின்றார்கள். கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுக்கு, பேருந்து இல்லாத கிராமப்புறங்களிலே பேருந்து விடுவதென்றால் நிதி தேவைப்படுகின்றது. இன்றைக்கு பேருந்து ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 4 லட்சம் செலவாகிறது. அதை வாங்கி அதற்குப் பிறகுதான் நாம் விடவேண்டிய சூழ்

நிலையில் இருக்கிறோம் என்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோலவே கிராமப்புறத்தைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் கிராமப்புறங்களிலே பாதை வசதிகள் செய்திருக்கின்றார்கள். ஆலமரத்தடியிலே படித்துக்கொண்டிருந்த குழந்தைகளுக்கு நல்ல கட்டிடங்களை, சுகாதார வசதியுடன் கூடிய காற்றோட்டமுள்ள கட்டிடங்களைக் கட்டிக்கொடுத்து அதிலே படிக்கின்ற அளவுக்கு செய்திருக்கின்றார்கள். அந்தக் கட்டிடங்களை தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த வரையிலே, சமுதாயத்தில் நலிந்த மக்களுக்கு என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டி, ஆண்டுதோறும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே தான் காவிரி நதி நீர் திட்டத்தைப் பற்றி சொல்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இங்கே பேசும்போது காலணிகள் வழங்குகின்றபோது, சுகாதாரக் கேடுகள் வருமா என்ற கருத்தையும் சொன்னார்கள். நாம் நடந்து செல்கின்றவர்களுக்கு காலணிகளை வழங்குகிறோம். நடந்து செல்கின்றவர்களுக்கு நாம் காலணி வழங்குகின்றபோது, அவர்களுக்கு சுகாதாரக் கேடுகள் குறைக்கப்படுமே தவிர, அது கூடுதலாக இருக்காது என்பதை இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைத்தான் மாண்புமிகு திரு. முத்தையா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இங்கே இருக்கின்றவர் ஒருவர் நாடகப்பாணியில் ஒரு கருத்தைச் சொன்னார். "காலிலேபட்ட முள்ளை பாதியிலே உடைத்து எறிந்துவிட்டு பாதையிலே கிடப்பவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள்" என்று சொன்னார். அந்த அடிப்படையிலே புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்கள், அடித்தளத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் இருக்கின்றார்களே அவர்களுக்காக பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்காகத்தான் இன்றைக்கு பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சொன்னார்கள்...



அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கின்றபோது, இன்றைக்கு எங்களுக்குப் பாசன வசதிகளைச் செய்து தந்தால் போதும் என்ற கருத்தைச் சொன்னார்கள். மத்திய அரசு நினைத்தால் கங்கை-காவேரியைக்கூட இணைக்கமுடியும். இன்றைக்கு இங்கே காங்கிரஸ் கட்சியிலே இருக்கின்ற நண்பர்கள் அவர்கள் சொன்ன கருத்துக்களை வலியுறுத்தவேண்டும். மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துச்சொல்லவேண்டும். தென் மாநிலங்கள் பயன்படவேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு கங்கை-காவேரியை ஒன்றாக இணைத்து அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுடைய, வேளாண்மையை நம்பிக் கொண்டிருக்கின்ற மக்களுடைய துயரைத் துடைக்க முடியும் என்ற கருத்தை நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், அந்த அளவிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற ஒரு ஆட்சியாக நடத்திக் கொண்டிருக்கிறார். அன்றைக்கு சொல்லப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தத்துவங்களை நிறைவேற்றுகின்ற ஆட்சியாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றது. 'ஒழுகாத வீடு, கிழியாத ஆடை, ஆறாத சோறு' என்ற தத்துவங்களை இன்றைக்கு படிப்படியாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான், இன்றைக்கு 30 லட்சம் ஏழைகளுக்கு வீடுகளைக் கட்டித் தருகிறோம் என்ற திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். இந்தத் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். நல்ல முறையிலே திட்டங்களைத் தீட்டுகின்ற ஆட்சிக்கு மக்களும் உறுதுணையாக இருக்கின்றார்கள் என்பதை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையினை வாழ்த்திப் பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய மார்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

*திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே இன்றைக்கு பெருகி வருகின்ற சுகாதாரத் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு. கிராமங்களில் புதிது புதிதாக வியாதிகள் தோன்றி, ஏழையெளிய நடுத்தர மக்களைப் பாதிக்கின்ற நிலையில், புதிதாக 500 சுகாதார துணை நிலையங்களையும், 140 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் அரசு துவக்க இருப்பதை நான் வரவேற்கிறேன்.

(பிற்பகல் 12.30)

அடுத்து, பள்ளி செல்லும் சிறார்களுக்கும் ஏழைத் தாய்மார் களுக்கும் இலவசமாக காலணி வழங்கும் திட்டத்தையும் நான் வரவேற்கிறேன். ஆனால் இவ்வாறு இலவச காலணி வழங்கும் போது அவற்றை கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வாங்கி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக சுமார் 597 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்றைக்கு புதிதாக பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும், ஏற்கெனவே இருக்கின்ற பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிடுவதற்கும் ஒதுக்கப்பட்டிருக் கின்ற தொகை குறைவு. ஏற்கெனவே 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமைதான் தொடர்ந்து இப்போதும் இருக்கிறது. பள்ளிக்கூடங்களில் படிக்க வருகிற மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு பெருகிக் கொண்டு வருகிறது. ஆதலால் இருக்கின்ற பள்ளிக் கட்டிடங்களுடன் கூடவே மேலும் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும், ஏற்கெனவே மோசமாக இருக்கின்ற பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிடுவதற்கும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு உட்காரக் கூட வசதியில்லை. அங்கே வேலை பார்க்கின்ற ஆசிரியர்களுக்கு மேஜை, நாற்காலி போன்ற வசதிகள் கூட இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமை எல்லாம் போக்குவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்மென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கெனவே தன்னிறைவுத் திட்டம்





என்கிற பெயரில் தமிழகத்திலே ஆங்காங்கே ஆரம்பப் பள்ளி வசதியில்லாத இடங்களில் எல்லாம் ஆரம்பப் பள்ளிகளைக் கட்டிக் கொடுத்தார்களே, அதுபோல இந்தப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையிலும் கூட ஒரு திட்டத்தைத் தீட்டி அரசு ஏற்கெனவே மோசமாக இருக்கின்ற பள்ளிக்கூடங்களைச் செப்பனிடுவதுடன் கூடுதலாக கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று சத்துணவு, பொதுச் சுகாதாரம், வேளாண்மை போன்றவை களைப்பற்றி மக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையிலும், வளர்ந்து வருகின்ற வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் பற்றி கிராமப்புறகளிலுள்ள ஏழை எளிய விவசாய மக்கள் அறிய வேண்டுமென்பதற்காகவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வி. சி. பி. மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க இருப்பதை நான் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். இதன்மூலம் நிச்சயமாக கிராமப்புறங்களிலே வாழ்கிற ஏழை யெளிய விவசாய மக்கள் புதிய விவசாய முறைகளைப் பற்றியும், சுகாதாரத்தைப் பற்றியும், சத்துணவுத் திட்டத்தைப் பற்றியும், நாட்டின் அன்றாட நிலவரத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, இன்றைக்கு தமிழகம் முழுவதும் 3 ஆண்டுகளுக்குள் 30 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் செங்கல், மரம், ஆஸ்பெஸ்டாஸ்சீட் போன்றவைகளுக்கு விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இது நிச்சயமாக ஏழையெளிய. நடுத்தர மக்களைப் பாதிக்கும் என்பதால் இந்த விற்பனை வரி உயர்வை நிச்சயமாக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல மின்னணுப் பொருள்களுக்கு 6 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரியைக் குறைத்திருப்பதை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு வெளி மாநிலங்களுக்கு, குறிப்பாக புதுவை போன்ற மாநிலங்களுக்குச் சென்று மோட்டார் வாகனங்கள், இரண்டு சக்கர ஊர்திகள் போன்றவைகளை வாங்கிக்கொண்டிருந்ததன் காரணமாக நம் மாநிலத்திற்கு வர வேண்டிய வருவாய் மற்ற மாநிலங்களுக்கு சென்றுகொண்டிருந்தது. இன்றைக்கு மோட்டார் வாகனங்

களுக்கான வரியையும் குறைத்திருப்பதால் அந்த மோட்டார் வாகனங்களும், கார்களும், இரண்டு சக்கர ஊர்திகளும், இன்னும் இதுபோன்றவைகளும் நம் தமிழகத்திலேயே அதிகமாக விற்பனை யாவதன் காரணமாக நம் மாநிலத்தின் வருவாய் நிச்சயமாகப் பெருகும். அதற்கு வழிவகை செய்து வரியைக் குறைந்திருப்பதால் நான் இதனை மனதாரப் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் மோட்டார் வாகனங்களுக்கான காலாண்டு வரியைப் பொறுத்தவரையில் அதை உயர்த்தி யிருப்பதால் அத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை அது நிச்சயமாக பாதிக்கும். காரணம் இன்றைக்கு ஏற்கெனவே டீசல், சேஸிஸ் போன்றவைகளின் விலையும், உதிரி பாகங்களின் விலையும் உயர்ந்து அவர்களை பாதித்திருக்கிறது. இப்போது காலாண்டு வரியும் உயர்த்தப்படுவதால் இந்த வரி உயர்வு அவர்களை நிச்சயமாக பாதிக்கும் என்பதால் இந்த காலாண்டு வரி உயர்வு குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திரை அரங்குகளில் பல இனங்களில் விதிக்கப்பட்டு வந்த வரியை இப்போது ஒரே இனத்தின்கீழ் விதிக்க வழிவகை செய்திருப்பதையும், அதுபோல மொத்தத்தில் இந்தவகையில் கிடைக்கும் வருவாய், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 35க்கு 65 என்கிற விகிதத்தில் பகிர்ந்து அளிக்கப்பட்டு வந்ததற்கு மாறாக இனிமேல் 30 க்கு 70 என்கிற விகிதத்தில் பகிர்ந்து அளிக்க வழிவகை செய்திருப்பதையும் நான் பாராட்டுகிறேன். இதன் மூலம் உள்ளாட்சி மன்றங்கள் தன்னிறைவு அடைந்துவிட முடியாது. இன்றைக்கு பெரும்பாலும் தமிழகத்தில் இருக்கின்ற உள்ளாட்சி மன்றங்களிலும், ஊராட்சிகளிலும் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கக்கூட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



எங்களுடைய தென்னாற்காடு மாவட்டம் எந்த மாவட்டத்திலுமே இல்லாத அளவிற்கு ஐந்து சர்க்கரை ஆலைகளைப் பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அண்டை மாநிலமாக இருக்கின்ற புதுவை மாநிலத்திலே இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆக ஏழு சர்க்கரை ஆலைகளை கிட்டத்தட்ட நாற்பது கிலோமீட்டர் விஸ்தீரணத்திற்குள் நாங்கள் பெற்றிருக்கிறோம். இப்படி இந்தச் சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கக் கூடிய கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி, புகளூரிலே தொடங்கப்பட்டிருப்பது போன்ற ஓர் பெரிய காகித ஆலையை எங்களுடைய திருக்கோவிலூர் பகுதி தென்பெண்ணையாற்றின் கரையிலே தொடங்க வேண்டும். அங்கே நல்ல நீர்வளம் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை அங்கே தொடங்குவதால் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். அது நம்முடைய வளர்ந்து வரும் காகிதத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற விதத்தில் நிறைவு செய்யும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, அப்படிப்பட்ட காகித ஆலையைத் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற செயற்குறிப்பு கடந்த ஆண்டிலிருந்து இருந்து கொண்டு வந்திருக்கிறது. அந்த மாவட்டப் பிரிவினையை இந்த ஆண்டுக்குள்ளேயே முடித்து புதிதாக அமைய இருக்கின்ற மாவட்டத்திற்கு அன்னை இந்திரா காந்தி மாவட்டம் என்று, விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு அன்னை இந்திரா காந்தியினுடைய பெயரையும், கடலூரைத் தலைமையகமாகக் கொண்டு அமைய இருக்கின்ற மாவட்டத்திற்கு வள்ளலார் பெயரையும் சூட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள ரிஷிவந்தியம் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய ஒன்றியமாகும். அதுவும் நிலப்பரப்பும், மக்கள் தொகையும் அதிகமாகக் கொண்ட ஒன்றியம் ஆகும். ஆகவே, நிர்வாக வசதி காரணமாக அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சு. சிவராஜ்] [1987 மார்ச் 25

என்னுடைய தொகுதியில் உள்ள ரிஷிவந்தியம் ஒன்றியம் வறட்சியின் கோரப்பிடியிலே சிக்கி இன்றைக்கு அங்கே குடிநீர்ப் பஞ்சமும், பயிர்களுக்குத் தண்ணீர் இல்லாத நிலையில் ஏரிகளெல்லாம் வறண்டும் இருக்கின்றன. அதைப்போல, திருக்கோவிலூரிலே சில பகுதிகளிலேயும் இந்த நிலைதான் காணப்படுகிறது. ஆகவே ரிஷிவந்தியம் ஒன்றியத்தையும், திருக்கோவிலூர் ஒன்றியத்திலுள்ள சில பகுதிகளையும் வறட்சிப் பகுதிகளாக அறிவித்து அங்கே நிவாரண வேலைகளைத் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருக்கோவிலூர் பேரூராட்சிக்குச் சொந்தமாகப் புதிய பேருந்து நிலையம் ஒன்று கட்டுவதற்கு ஐ.யு.டி.பி. திட்டத்தின் கீழ் ரூபாய் 85 லட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக அங்கே எந்த வேலையும் தொடங்கப்படாமல் இருக்கின்றது. அதற்கான இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டும்கூட இன்றைக்கு அந்த வேலை அப்படியே முடங்கிப் போய்க் கிடக்கிறது. அதை இந்த ஆண்டு நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று என்னுடைய தொகுதியிலே உள்ள தியாக துருக்கத்தையும், மணலூர்பேட்டையையும் இணைக்கும் பெண்ணையாற்றின் குறுக்கே ஓர் பாலம் கட்டுவதற்குக் கடந்த 1985-86 ஆம் ஆண்டு ரூபாய் முப்பது இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டும் கூட கடந்த இரண்டு ஆண்டுகளாக அங்கே எந்த வேலையும் தொடங்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பாலத்தைக் கட்டுவதன் மூலம் தென் மாவட்டங்களிலேயிருந்து திருவண்ணாமலை, வேலூர், திருப்பதி போன்ற இடங்களுக்குச் செல்பவர்களுக்கு சுமார் 25-லிருந்து 30 கிலோ மீட்டர் வரை பயண தூரமும், பயண நேரமும் குறையும். இதனால் எரிபொருள் சிக்கனம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் கூறி, விரைந்து அந்த வேலைகளை முடித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 25] [திரு. சு. சிவராஜ்]

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள பல சாலைகள் கடந்த பத்தாண்டுகளாகப் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. அந்தச் சாலைகளையெல்லாம் பழுதுபார்ப்பதற்கு அதிக நிதியினை ஒதுக்கி இந்த ஆண்டிலே அதைச் சரி செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, அத்தியூர் ஐம்படை சாலை என்ற சாலை ஒன்று இருக்கிறது. அந்தச் சாலையிலே சென்று கொண்டிருந்த மூன்று பேருந்துகள் அந்தச் சாலை சரியில்லாத காரணத்தினால் கடந்த ஓராண்டுக் காலமாக அந்தத் தடங்களில் ஓடாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இதுபோன்று பல சாலைகள் இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளைச் சரி செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று திருக்கோவிலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட சந்தப்பேட்டை பகுதியிலே புதிதாக ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று என்னுடைய தொகுதியிலே உள்ள பல கிராமங்களுக்கு கடந்த இரண்டாண்டுகளாக ஒப்புதல் அளிக்கப் பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்கூட இன்னும் கட்டப் படாமல் இருக்கின்றன. கேட்டால் அந்த ஒப்பந்தக்காரர்கள் வேலையை எடுத்துவிட்டு செய்யவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, குடிநீர் வடிகால் வாரியம் ஒப்பந்தக்காரர்களுக்கு விடப்படுகின்ற அந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை ஒரு கால வரையறை நிர்ணயம் செய்து அந்தக் காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்றும், அப்படி அவர்கள் கட்டத் தவறினால் அவர்கள் மீது நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஏழை அரிசன மக்கள் வீட்டு மனைப் பட்டா வேண்டி அதற்கான இடத்தையெல்லாம் அங்கேயிருக்கின்ற அதிகாரிகளால் தேர்வு செய்யப்பட்டு அதற்கு அரசின் ஒப்புதலுக்காக அங்கிருந்து அனுப்பப்பட்ட கோப்புகளெல்லாம் இன்றைக்குக் கிடப்பில் போடப்பட்டுக் கிடக்கின்றன. கடந்த மூன்றாண்டுகளாக என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில்

அந்த ஏழை ஆதிதிராவிட மக்கள் வீட்டு மனைப் பட்டா வேண்டி மனுச் செய்து அதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டும் அதற்கு அரசு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. கேட்டால் இங்கே சென்னையில் கோப்பு பெண்டிங்காக இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆகவே உடனடியாக அந்த வீட்டு மனைப் பட்டாக்களை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.40)

அதேநேரத்தில், இன்றைக்கு பல கிராமங்களில் மோட்டார் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட நாட்களாக மின் இணைப்பு கொடுக்கப்படாமல் பல கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களுக்கு விரைந்து மின் இணைப்பு கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போர் வெல்ஸ் போடப்படவில்லை என்று சொன்னார். அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் போர் வெல்ஸ் தேவைப்படவில்லை. நிலத்தடி நீரைப் பெற கிணறுகள் போதுமானவையாக இருந்தன. ஆனால் இன்றைக்கு நிலைமை வேறாக இருக்கிறது. குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க ஆழ் குழாய்க் கிணறுகள் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அன்றே இந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் நிச்சயமாக போர் வெல்ஸ் போட்டிருப்போம் என்று கூறி, பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். பி. துரைராசு: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அரசின் சார்பாக நம்முடைய நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் அறிவித்திருக்கும் நலம் கொழிக்கும் வரவு செலவுத் திட்டத்தை வரவேற்று, சிந்தை நிறைந்த நன்றியினை காரைக்குடி தொகுதி மக்களும் நானும் தெரிவித்துக் கொள்வதிலே மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரைப் போல தாய்மை உள்ளம் படைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இந்த ஆண்டிலே புத்தம்



புது பட்ஜெட்டாக, மக்களுக்கு நலம் பயக்கும் திட்டங்களையும் சலுகைகளையும் அறிவித்து, நிதி ஒதுக்கியுள்ளதை நான் வரவேற்று, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் மறுமலர்ச்சி உருவாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற திட்டங்கள் சிறப்பாக நடைபெற நிதியைத் தாராளமாக ஒதுக்கியுள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இங்கே 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று கூறிய பேரறிஞர் அண்ணா வழியில் வந்தவர்கள் நாங்கள் என்று தனக்குத்தானே பாராட்டுப் பத்திரத்தை வாசித்து பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக அரசினுடைய ஆயிரமாயிரம் சாதனைத் திட்டங்களில் ஒன்றைக் கூட வாயார வாழ்த்தும் பக்குவம் பெறாமல் வக்கணை பேசுவதில் வல்லமை பெற்றிருக்கிறார்கள். குறை கூறாமல் போனால் கௌரவம் குன்றிப் போகும் என்ற கொள்கை உடையவராய் சிந்தனை சிறிதும் இல்லாமல் காலணி வழங்கும் திட்டத்தைப் பற்றி தாவணி நினைவில் லாவணி பாடுகிறார்கள். இந்தத் திட்டம் செயல்படுமா, திட்டம் வருமா என்றெல்லாம் நல்ல இதயம் இல்லாமல் பேசுகிறார்கள். 30 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டுவசதி செய்துதர மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு முனைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்காக 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு இருக்கிறது. அதைப் போன்று பள்ளிக்குச் செல்லுகிற குழந்தைகளுக்கும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தாய்மார்களுக்கும் காலணி வழங்கும் திட்டத்திற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடை வழங்கும் திட்டத்தின் மூலம் 40,000 மகளிருக்கு வேலைவாய்ப்பை இந்த அரசு தந்திருக்கிறது. 1987-88 ஆம் ஆண்டிலே 15.53 கோடி ரூபாய் சீருடை வழங்கவும் 11.54 கோடி ரூபாய் பாடப் புத்தகங்கள் வழங்கவும் ஒதுக்கப்பட்டிருப்பது மன நிறைவைத் தருகிறது.

[திரு. எஸ். பி. துரைராசு] [1987 மார்ச் 25

1982-லே தொடங்கப்பட்ட முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் மூலம் 84 இலட்சம் சிறார்களும், முதியோர் ஓய்வூதியம் பெறும் 1.98 இலட்சம் முதியோர்களும் 66,000 மையங்கள் மூலம் பயனடைகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக 1.99 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பினை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அரசு பெற்றுத் தந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசு நாடு முழுவதற்கும் ஒதுக்கியிருக்கும் கல்விக்கான முதலீட்டில் 80 விழுக்காட்டினை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஒதுக்கியுள்ளதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு மத்திய அரசு அரிசி விலையை ஏழு முறை உயர்த்தியிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் இதுவரையில் அரிசி விலை உயர்த்தப்படவே இல்லை. கிலோ அரிசி ஒரு ரூபாய் எழுபத்தைந்து காசுக்கு வினியோகிக்கப்படுகிறது. ஆனால் பம்பாயிலே ஒரு கிலோ அரிசி 3 ரூபாய் 6 காசுக்கு விற்கப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படி குறைந்த விலைக்கு அரிசியை நம்மை விட வேறு எந்த மாநிலமும் வினியோகிக்கவில்லை என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு 50 கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கியுள்ளது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

தமிழகத்தில் உள்ள கார் விற்பனை செய்யும் நிறுவனங்கள் பாண்டிச்சேரியில் கிளைகள் வைத்திருப்பதாகச் சொல்லி பாண்டிச்சேரியில் ரிஜிஸ்டர் செய்வதால் விற்பனை வரி அங்கே சென்று கொண்டிருந்தது. அதைத் தடுக்கும் வகையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் மோட்டார் வாகனங்கள், மொப்பட் ஆகியவற்றுக்குக் கணிசமான அளவுக்கு வரியைக் குறைத்து இருப்பது பாராட்டுக்குரிய செயலாகும்.



1987 மார்ச் 25] [திரு. எஸ். பி. துரைராசு]

20 ஆம் நூற்றாண்டில் அனைவருக்கும் சுகாதார வசதி என்ற அல்மா ஆட்டா உறுதிமொழியை நிறைவேற்ற கூடுதலாக 140 தொடக்க சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த அரசு முன்வந்திருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய காரைக்குடி தொகுதியில் கண்டரமாணிக்கம், பெரிய கோட்டைப் பகுதியில் தொடக்க சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சக்திக்கு இந்த அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. 1987-88-ல் 408.69 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1987 ஆம் ஆண்டு ஜனவரி வரையில் 12,333 மில்லியன் யூனிட் மின் சக்தி வழங்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டை விட 12.5 சதவீதம் அதிகமாகும். கிராமங்களில் குடிசைகளில் வாழும் மக்களுக்கு இலவச மின்வழங்கு திட்டத்தின் மூலமாக 7 இலட்சத்து 49 ஆயிரம் பேர்கள் பயன்பட்டு வருகிறார்கள் என்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

காரைக்குடியில் நிலக்கரி கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது. எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் காரைக்குடியில் ஒரு அனல் மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்விக்காக இந்த ஆண்டு 597 கோடி ரூபாயை நம்முடைய தமிழக அரசு ஒதுக்கி இருக்கிறது. இது சென்ற ஆண்டை விட 46 கோடி ரூபாய் அதிகமாகும். நடுநிலைப்பள்ளிகள், உயர் நிலைப்பள்ளிகள் ஆகியவற்றில் இடை நிலை ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோர் 750 பேர்களை நியமிக்க, அதாவது கூடுதலாக நியமனம் செய்வதற்கு நிதியினைத் தாராளமாகத் தமிழக அரசு ஒதுக்கி இருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். காரைக்குடியில் இருக்கக்கூடிய அழகப்பச் செட்டியார் பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரியை விரிவுபடுத்த மாண்புமிகு கல்வியமைச்சர்

அவர்கள் இங்கே 11.25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதற்காக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் காரைக்குடியில் இருக்கக்கூடிய அழகப்பச் செட்டியார் பொறியியல் கல்லூரியில் 'கம்ப்யூட்டர்' அறிவியல் பயன்பாடு பி.இ., பட்டப் படிப்பைத் துவக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களையும் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களையும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். காரைக்குடியில் அழகப்பா அரசுக் கலைக் கல்லூரி இயங்கி வருகிறது. அந்த அழகப்பா கலைக் கல்லூரியை அழகப்பா பல்கலைக் கழகத்தோடு இணைக்க வேண்டுமென்று அங்கே பணியாற்றக்கூடிய ஆசிரியப் பெருமக்களும், பொதுமக்களும் விரும்புகிறார்கள். அதற்கான உரிய நடவடிக்கையை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் காரைக்குடியில் உள்ள மூ.வி. அரசு மேல்நிலைப் பள்ளிக்கட்டிடம் எல்லாம் இடிந்து விழக்கூடிய அபாய நிலையில் இருக்கிறது. அதற்கு புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தகுந்த நிதியாதாரங் களைத் தேடித்தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் மிகப்பெரிய நகரமாக காரைக்குடி நகரம் திகழ்கிறது. ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கும் அதிகமாக அங்கே மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். எனவே காரைக்குடி நகரத்திற்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அவசர உணர்வோடு நிறைவேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள் கிறேன்.

நெசவாளர்களுக்கு புரட்சித் தலைவருடைய அரசு செய்து வரும் நன்மைகள் சொல்லில் அடங்காது. சென்ற ஆண்டு பட் ஜெட்டில் 10 கோடி ரூபாய் ரிபேட்டாக ஒதுக்கீடு செய்திருந் தார்கள். ஆனால் நெசவாளர்களுடைய துயரைத் துடைப்பதற் காக இந்த அரசு 37 கோடி ரூபாயை ரிபேட்டாகக் கொடுத்திருப் பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1986 ஆம் ஆண்டிலே பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் நலிவுற்று இருந்த சோமசுந்தரம் நூற்பு ஆலையை அரசு எடுத்து அரசுடைமை ஆக்கிய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது அந்த சோமசுந்தரம் நூற்பு ஆலையில் கடந்த ஒரு மாத காலமாக அங்கே இருக்கக்கூடியவர்களினாலும், மூலப் பொருள் தட்டுப்பாட்டினாலும், அங்கே பணிபுரியக் கூடியவர்கள் இன்னலுற்றுக் கொண்டிருக்கிறார்கள். என்பதை மாண்புமிகு கதர் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





கள் சாராயக் கடைகளை எடுத்ததன் மூலமாக தாய்மார் களுடைய கண்ணீரை துடைத்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை நான் இங்கே பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த நல்ல நேரத்திலே இன்னொன்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வானம் பார்த்த பூமியாகிய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் இந்த ஆண்டு முழுவதுமாக மழை பெய்யாது பஞ்ச பூமியாக ஆகிவிட்டது. எனவே எங்கள் மாவட்டத்து மக்களுடைய தேவைகளை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுகிறேன். விவசாயிகளுடைய பரிதாப நிலையைக் கருத்தில் கொண்டு வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்த மாற்றுத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவையினுடைய தற்காலிகத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை இந்த மன்றத்திலே அளிப்பதற்கு வழி வகை செய்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்த வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த தமிழகத்தினுடைய நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி என்னுடைய சில கருத்துக்களை இங்கே வைக்க முன் வருகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியின் பல்வேறுபட்ட சாதனைகளை தாங்கிக் கொள்ள மனம் இல்லாதவர்கள் தங்களுடைய வேதனையை இங்கே வந்து சொல்வதையெல்லாம் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய சீர்காழி தொகுதியைப் பொறுத்த வரையில் புரட்சித் தலைவர் அவர்கள் எந்தெந்த நல்ல தத்துவங்களை எல்லாம் திரைப்படங்களில் சொன்னார்களோ அவைகள் எல்லாம் இன்றைக்கு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இங்கே சொல்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

“தரைமேல் பிறக்க வைத்தான்—எங்களை
தண்ணீரில் பிழைக்க வைத்தான்
கரைமேல் இருக்க வைத்தான்—பெண்களை
கண்ணீரில் குளிக்க வைத்தான்”

என்று அன்று பாடிய பாடல்போல் தரைமீது பிறந்து தண்ணீரில் பிழைக்கிற மீனவர்களுக்கு தரைமேல் இருந்து கண்ணீரில் மிதக்கின்ற அந்த தாய்மார்களின் வாட்டத்தை போக்குவதற்காக எங்களுடைய தொகுதியில் பழையாறை என்ற இடத்தில் மிகப் பெரிய அளவில் 90 லட்சம் ரூபாய் செலவில் மீன் பிடித் துறைமுகம் ஒன்று அமைத்து தந்து விரைவிலே புரட்சித் தலைவர் அதனை திறக்க இருக்கிறார்கள். இப்படி அவர்கள் அன்றைக்கு சொன்னதை இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதை என் தொகுதி மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல ‘கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி’ என்று பாடினார்கள். அந்த விவசாயி களுக்கு உதவும் வகையில் என்னுடைய தொகுதியில் எருக்கூர் என்னும் இடத்தில் 1½ கோடி ரூபாய் செலவில் மிகப் பெரிய நவீன அரிசி ஆலையை நிறுவி, அரிசி போக மீதி இருக்கிற உமியிலே, தவிட்டிலே சில உணவுப் பொருள்கள் தயாரிக்கக் கூடிய சாதனங்களையும் பொருத்தி அதையும் விரைவிலே திறக்க இருக் கிறார்கள் என்பதை எண்ணும்போதே என் தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அது மட்டும் அல்ல, நாடோடி மன்னன் என்ற படத்திலே சொன்னார்கள்.

சும்மா கிடந்த நிலத்தைக் கொத்தி சோம்பல் இல்லாமல் ஏர் நடத்தி
கம்மாங்கரையை ஒசத்திக் கட்டி கரும்புக் கொல்லையில் வாய்க்கால் வெட்டி—என்று

பாடினார்களே, அது போல கரும்புக் கொல்லையில் வாய்க்காலை வெட்டி கரும்புகள் அதிகமாக தயார் செய்து அவை நல்ல முறையில் நாட்டுக்கு பயன் பட வேண்டும் என்ற எண்ணத்திலே என்னுடைய தொகுதியிலேயும், பக்கத்திலே இருக்கிற மயிலாடு துறை தொகுதியையும் இணைக்கிற இடத்தில் மத்திய அரசின் உதவியுடன் மிகப் பெரிய சர்க்கரை ஆலை ஒன்றை அங்கே ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்காகவும் இந்த இரண்டு தொகுதி மக்களின் சார்பாக, குறிப்பாக தஞ்சை மாவட்ட மக்களின் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் செய்கிற புரட்சித் தலைவர் அவர்களை, இந்திக்கு இடம் கொடுக்க மாட்டோமென்று எங்கோ உட்கார்ந்து கொண்டு, சந்தியிலே பேசுகிறார்கள் என்று சொல்ல மாட்டேன், ஆனால் பல காரியங்களை முந்திக்கொண்டு பேசுகிறார்களே, அவர்களுக்கெல்லாம் முந்திக் கொண்டு, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள், இந்தி அதிகமாகப் பேசப்படுகிற, இந்தியைத் தவிர வேறெதுவும் பேசமுடியாது என்று சொல்கிற அளவிற்கு இருக்கிற டெல்லியிலே அதிகமான மக்கள் உள்ள பகுதியிலே, புரட்சிக் கவி பாரதியினுடைய சிலையை வைத்து, அந்தச் சிலைக்கு அடியிலே தமிழில் பாரதியி னுடைய கவிதையை எழுதி, அதற்கு பக்கத்திலே விளக்கம் ஆங்கி லத்திலே எழுதி, அதனை கடந்த மாதம் 4-ம் தேதி நம்முடைய பாரதப் பிரமதர் அவர்களை திறக்க வைத்ததை எண்ணிப் பார்க் கிறபோது, தமிழ்மொழிக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த அளவிற்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கிறேன். அதை நான்

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1987 மார்ச் 25

சொல்கிறபோது கவியரசு கண்ணதாசன் எழுதி நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் பாடிய பாடல் தான் எனக்கு நினைவிற்கு வருகிறது.

"அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடைமையடா"

என்ற பாடலில் புரட்சித் தலைவர் மீண்டும் பாடுகிறார்.

"கனக விசயனின் முடிதனை நெறித்து
கல்லினை வைத்தான் சேரமகன்.
இமயவரம்பில் மீன்கொடி ஏற்றி இசைபட
வாழ்ந்தான் பாண்டியனே"

என்று பாடுகிறார்கள். கவியரசு கண்ணதாசன் அவர்கள் இன்று இருந்திருந்தால் எப்படி பாடியிருப்பார்கள் என்றால்,

"புதுடெல்லிதனிலே புலவருக்குப் பெருமை
புகழ்பட சேர்த்தார் எம்.ஜி.ஆரே"

என்று பாடியிருப்பார்கள். அப்படி தமிழுக்கு இங்கே மட்டுமல்ல, எங்கேயெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ அங்கேயெல்லாம் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். இந்த நேரத்தில் இந்தச் சாதனையை செய்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுக்கு இந்த மாமன்றமே நன்றியை சொல்லியிருக்க வேண்டும், பாராட்டு களைத் தெரிவித்து இருக்க வேண்டும். அது இல்லையென்றாலும் பரவாயில்லை. நம்முடைய தமிழ் நாட்டில் தமிழர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்களில் சிலர் புரட்சித் தலைவர் அவர்களின் பல காரியங்களை சந்தேகிக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். புரட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவிற்கு தமிழ் உணர்வு உடையவர்கள் என்பதைக் காட்டுவதற்கு மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நல்ல எண்ணத்திற்கு எந்த அளவிற்கு பாத்திரமானவர்கள் என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாரதிக்கு சிலை திறப்பதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற மாதம் இரண்டாம் தேதியே டெல்லிக்குச் சென்று விட்டார்கள். அடுத்த நாள் மூன்றாம் தேதி அண்ணா அவர்களின் நினைவு நாள். அன்றையதினம் புரட்சித் தலைவர்



1987 மார்ச் 25] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

அவர்கள் இங்கே சென்னையில் இருக்க முடியாது. இதற்கு புரட்சித் தலைவர் என்ன நினைத்திருந்தார் என்பதை என்னாலே யூகித்து சொல்ல முடிகிறது. தான் இல்லையென்றாலும் பரவாயில்லை, கடுந்தண்டனை பெற்ற கலைஞர், கருணாநிதி அவர்கள் அண்ணாவின் நினைவு நாளில் இருக்க வேண்டுமென்றுதான் அதற்கு முதல் நாளில் அவரை விடுதலை செய்து நினைவு நாளில் கலந்து கொள்ள வைத்தார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களைப் புரிந்து கொள்ள முடியாத சிலபேர் களங்கம் கற்பிக்கிறார்கள். எப்படியென்றால் அண்ணாவுக்கு நினைவு அஞ்சலி செலுத்த வில்லை, டெல்லிக்குச் சென்று விட்டார், அதனுடைய மர்மம் என்னவென்று சில துண்டு பத்திரிகைகள், துக்கடா பத்திரிகைகள் எழுதுவதைப் பார்த்தோம். இதையெல்லாம் பார்க்கிறபோது நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் உள்ளம் எப்படிப் பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் இல்லை யென்றாலும் பரவாயில்லை, நம்முடைய எதிரணியில் இருக்கிற கலைஞராவது நம்முடைய அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென்று நல்ல எண்ணத்தில் அவர்களை விடுவித்து இருக் கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் விடுதலையானவுடன் கலைஞர் அவர் களை பத்திரிகைக்காரர்கள் கேள்வி கேட்கிறார்கள். அதற்கு அவர் பதில் சொல்கிறார், இந்த பைத்தியக்கார ஆட்சியில் எதுவும் நடக்கலாம் என்று. அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவ தெல்லாம், பைத்தியக்கார ஆட்சி என்று புரட்சித் தலைவருடைய ஆட்சியைச் சொன்னால், எழுத்தறிவித்தவர்கள் ஆசிரியர்கள், அவர்களை சிறையில் அடைத்தார்களே அது என்ன ஆட்சி? மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று விவசாயிகள் போராடினார்களே, அவர்களைச் சுட்டுத் தள்ளினார்களே அது என்ன ஆட்சி? திருச்சியிலே மாணவர்கள் சிறைவ் ஹாஸ்டலில் சின்ன விஷயத்திற்காகப் போராடியபோது அவர்களை அடித்து நொறுக்கினார்களே அது என்ன ஆட்சி? பெற்ற தகப்பனையே தன்னுடைய பிள்ளை இல்லையென்று சொல்ல வைத்தார்களே, அது என்ன ஆட்சி? அதுமட்டுமல்லாமல் தஞ்சையிலே இருக்கிற நெல் முழுவதையும் கடத்திச் சென்று வேறு மாநிலங்களுக்கு அனுப்பினார்களே, அது என்ன ஆட்சி? வீணான திட்டமென்று தெரிந்திருந்தும் வீராணம் திட்டத்தைச் செயல்படுத்துவேன்

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1987 மார்ச் 25

(பிற்பகல் 1.00)

என்று பல கோடிக்கணக்கானப் பணததை செலவழித்தார்களே அது என்ன ஆட்சி? காவிரி நீர் ஒப்பந்தத்தை 1974-ல் புதுப்பிக்காமல் கை கழுவியதுடன், தஞ்சை விவசாயிகளை காலை வாரி விட்டார்களே அது எந்த ஆட்சி? இப்படி நான் நீட்டிக் கொண்டு போக முடியும். ஆனால் கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். இங்கே நமக்கு முன்னால் தி.மு.க. வரிசையிலே இருக்கிற நாவுக்கரசர் நாஞ்சிலார் அவர்கள் அண்ணா தி.மு.க.விற்கு ஆதரவு தெரிவித்துவிட்டு சென்னை விமான நிலையத்திற்கு சென்றார்களே, அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது சென்றார்களே, அந்த நேரத்திலே கூட அவர்களுடைய சட்டையையும், வேஷ்டியையும் கிழித்து, அவர்களை அடித்து அனுப்பினார்களே, அது எந்த ஆட்சி? ஆக இப்படி எத்தனையோ காரியங்களைச் சொல்லிக் கொண்டு போகலாம். யார் நடத்தியது பைத்தியக்கார ஆட்சி, காட்டுமிராண்டி ஆட்சி என்று, தமிழக மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இதைப் பற்றி மேலும் சொல்லாமல் என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் ஒரு சில கருத்துக்களைச் சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்ற ஒரு சில விவரங்களை மட்டும் விளக்கிச் சொல்லி, முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

எனது தொகுதியான சீர்காழி, புரட்சித் தலைவருடைய வாழ்க்கையோடு ஒன்றிப்போன ஊர். 1957-லே அவர்களுடைய காலில் அடிபட்டபோது இனிமேல் வாழ்க்கையிலே அவர்கள் முன்னேற முடியாது என்று சொன்ன ஊர். அந்த ஊரிலே புரட்சித்தலைவர் அவர்கள் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருந்தாலும், அங்கே இருக்கிற அரசு மருத்துவ மனையிலே—இங்கே இருக்கிற நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—ஒரு அறுவைச் சிகிச்சை அரங்கம் இருக்கிறது. அதற்கான டாக்டர்கள் இருக்கிறார்கள். அதற்காக Boyce Apparatus என்று சொல்லக்கூடிய கருவிகள் கூட இருக்கின்றன. ஆனால் Anaesthetist என்ற டாக்டர் இல்லை. எனவே அவர்களை அங்கே நியமிப்பதன் மூலம்



1987 மார்ச் 25] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

அங்கேயிருக்கிற மக்களுக்கு அறுவைச் சிகிச்சையை நல்ல முறையிலே செய்ய முடியும். மயிலாடுதுறைக்கோ அல்லது நாகைக்கோ செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

அதேபோல் பெண்கள் மருத்துவமனையிலே அறுவை சிகிச்சை அரங்கம் இருந்தும், அங்கே போதுமான படுக்கை வசதிகள் இல்லை, எனவே அதையும் செய்துதரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நாள் ஒன்றுக்கு 2000-க்கும் மேற்பட்ட மக்கள் வெளிப்புற நோயாளிகளாக வருகிறார்கள். ஆகவே அதனுடைய அவசியம் கருதி. ஏற்கனவே 56 படுக்கைகள் அங்கே இருக்கின்றன. அதிக படுக்கை வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குளங்களைத் தூர் எடுப்பதன் மூலம் கிராமப்புற மக்களுக்கு வேலைக்கு உணவுத் திட்டத்தாலே நல்ல வாய்ப்பை அளிக்கமுடியும். தஞ்சை மாவட்டத்தின் கடை கோடிப் பகுதியாக இருக்கிற சீர்காழி பகுதியில் உள்ள குளங்களையும், கால்வாய்களையும் தூர் எடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு உணவு அளித்து, அந்த இடங்களை சீர்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டூர் அணையை எதிர்பார்த்து இருக்க வேண்டிய அவசியம் இல்லாத நேரத்தில், கொள்ளிடத்திலே ஒரு தடுப்பு அணையைக் கட்டுவதன் மூலம், பல்வேறுபட்ட காரியங்களைச் செய்ய முடியும். ஆகவே அதற்கும் மாண்புமிகு நாவலர் அவர்கள் நிதி உதவி அளித்து அந்தக் கொள்ளிடத்திலே ஒரு தடுப்பு அணையைக் கட்டுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறுபட்ட காரியங்களை என்னுடைய தொகுதிக்கு செய்ய வேண்டியிருந்தாலும், இதுவரை செய்தது ஓரளவிற்கு நிறைவு தருவதாக இருக்கிற காரணத்தால், வரப்போகின்ற காலங்களிலே வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்யும் போது இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1987 மார்ச் 25

அடுத்து இங்கே குழந்தைகள் நல மையங்களில் என்ன என்ன காரியங்களைச் செய்ய இருக்கிறார்கள் என்பதைப் பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். வீட்டு வசதியைப் பொறுத்த வரையில், 30 லட்சம் வீடுகளைக் கட்டுவதாக இருக்கிறார்கள். இதை எப்படிக் கட்ட முடியும் என்று இங்கே சிலர் கேட்கிறார்கள். 30 லட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., போன்ற திட்டங்களை எல்லாம் இணைத்து இதைச் செயல்படுத்தப் போகிறோம் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இதை எல்லாம் சேர்த்து செய்தால், நிச்சயமாக 30 லட்சம் வீடுகளைக் கட்ட முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து இலவசமாக காலணி கொடுக்கிற திட்டத்தை கேலி பேசுகிறார்கள், கிண்டல் செய்கிறார்கள். இங்கே ஆளுநர் உரை மீதான விவாதம் முடிந்தபிறகு நான் கிராமத்திற்குச் சென்றேன். அப்போது ஒரு கிராமத்திலே பள்ளிக்குச் செல்கிற ஒரு பையனுடைய சகோதரன், மாடு மேய்த்துக் கொண்டிருப்பவன் ஒரு பாட்டு பாடினான். "காட்டு வழி போற தம்பி கவலைப் படாதே. காட்டு முள்ளு காலைக் குத்தும், கலங்கிவிடாதே, எம்.ஜி.ஆரு பேரைச் சொன்னால் முள்ளு ஒதுங்கிவிடும் பாரு" என்று அந்தப் பையன் பாடியதை நான் இங்கே எண்ணிப் பார்க்க விரும்புகிறேன். கிராமப்புறத்திலே இருக்கிற மக்கள் அந்த அளவிற்கு இன்றைக்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து பார்த்த புரட்சித் தலைவர் அவர்கள் இப்படிப்பட்ட நல்ல திட்டங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல, இங்கே அரிசியைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கூட ஒரு ரூபாய்க்கு 3 படி அரிசி தருவோம் என்று சொன்னார்களே, கொடுத்தார்களா என்று சொன்னார்கள். மேலும் ரூபாய்க்கு 3 படி அரிசி எங்கள் இலட்சியம், 1 படி அரிசி நிச்சயம் என்று சொன்னார்களே அது என்ன ஆயிற்று என்று கூட நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கேட்டார். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். நான் கொடுக்கின்ற ஒரு கணக்கை அவர்கள்



1987 மார்ச் 25] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

எண்ணிப் பார்க்கவேண்டும். அண்ணா அவர்கள் ஒரு ரூபாய்க்கு ஒரு படி என்று சொன்னார்கள். அந்த காலத்தில் ஒரு ரூபாயின் மதிப்பு ஏறக்குறைய 67 பைசா. ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ரூபாயின் மதிப்பு 16.36 பைசா. அண்ணா அவர்கள் காலத்தில் ஒரு லிட்டர் அரிசியின் விலை 2 ரூபாய். கலைஞர் காலத்தில் ஒரு லிட்டர் அரிசியின் விலை 4 ரூபாய். ஆனால் பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் நெல்லின் விலை 60 கிலோ மூட்டையின் விலை 20 ரூபாய், கலைஞர் காலத்தில் 60 கிலோ மூட்டையின் விலை 40 ரூபாய், இன்றைக்கு 60 கிலோ மூட்டை நெல்லின் விலை 90 ரூபாய். நெல்லின் விலை 90 ரூபாயாக இருந்தாலும் அரிசியின் விலை பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் இருந்த அதே விலையில்தான், இன்னும் சொல்லப் போனால் அதைவிட கூடுதலான அரிசியை— —அன்றைக்கு ஒரு லிட்டர் அரிசி— —இன்றைக்கு ஒரு கிலோ அரிசியின் விலை 1¾ ரூபாய்க்கு தமிழகம் முழுவதும் கொடுத்துக்கொண்டு இருக்கிற புரட்சித் தலைவர் அரசு அண்ணா அவர்கள் சொன்ன அன்றைய ஒரு ரூபாய் இன்றைய அளவுக்கு சரியாக இருக்கிறது என்பதைச் சொல்லி இப்படிப்பட்ட நல்ல காரியங்களை செய்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே இப்படிப்பட்ட குறைபாடுகளை சுட்டிக்காட்ட வேண்டாம், அது குறைபாடுகள் அல்ல; உங்களுடைய கண்ணில் ஏற்படுகின்ற குறைபாடுகளே ஒழிய கருத்தில் குறைபாடுகள் இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே அண்ணா அவர்களுடைய அரசு தொடர்ந்து புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடந்து கொண்டு இருக்கிறது.

அது மட்டும் அல்ல, அரிசியின் விலை ஒரு கிலோ 1¾ ரூபாய் என்பது மட்டும் அல்ல, 84 லட்சம் குழந்தைகளுக்கு அரிசி உணவு இனாமாக கொடுக்கிறோம், வயது ஆனவர்களுக்கு இனாமாக அரிசி உணவு கொடுக்கிறோம். அதையும் சேர்த்துப் பார்த்தால் மொத்தமாக பார்த்தால் ஒரு கிலோ ஒரு ரூபாய்க்கு கணக்கு வரும். இப்படிப்பட்ட கணக்குகள் எல்லாம் தெரியாமல் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை களங்கப்படுத்த வேண்டாம் என்று கேட்டு இன்னும் பல ஏழை எளியவர்களின் துன்பங்களை போக்குகின்ற புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பாராட்டி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

முதலில் என்னுடைய தொகுதியின் தேவைக்கான சில கோரிக்கைகளை முன் வைத்து அவைகளை இந்த ஆண்டு நிதிநிலையில் சேர்ந்து முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள மாரண்டஅல்லி என்ற இடத்தின் அருகில் சாஸ்த்திரமுட்லு என்ற இடத்தில் அணை கட்ட வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இணங்க ஆய்வுகள் செய்யப்பட்டு நீண்ட நாட்கள் ஆகி வேலையை எடுக்கின்ற தருவாயில் அதை நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலையில் அதை இணைத்து இந்த ஆண்டு அதை முடித்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கம்பையநல்லூர் அருகில் உள்ள கூட்டாத்துப்பள்ளம் என்கின்ற இடத்தில் ஒரு அணை வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அந்த அணையை கட்டும் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்து முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாரண்டஅல்லி என்ற ஊர் ஒரு முக்கியமான, அதைச் சுற்றி பல கிராமங்கள் சூழ்ந்த, ஒரு சிறிய நகரமாக இருக்கிறது. அங்கு இருக்கின்ற கால்நடைகளுக்கு மருத்துவ வசதி இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அங்கே கால்நடை மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாலக்கோட்டில் இருக்கின்ற அரசு மருத்துவமனை மிகவும் சுகாதாரக் கேடு அடைந்த நிலையில் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அது மிகவும் அருவருப்பான சூழ்நிலையில் இருக்கிறது என்று கூட சொல்லலாம். அதற்கு உரிய கவன



ஈர்ப்புத் தீர்மானத்தைக்கூட இந்த அவையில் கொடுத்து இருக்கிறேன். அங்கே இருக்கின்ற நிர்வாகமும் மருத்துவர்களும் அதைவிட மோசமான நிலையில் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அந்த அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலையில் அதையும் இணைத்து ஒரு நல்ல மருத்துவ மனையைக் கட்டித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பாலக்கோடு ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து பாலக்கோடு ஒன்றியம் என்றும், காரிமங்கலம் ஒன்றியம் என்றும் வைத்து இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். முன்பு ஒரு ஒன்றியமாக இருந்தபோது அளிக்கப் பட்ட நிதியைத் தான் இப்போது இரண்டு ஒன்றியமாக பிரிக்கப்பட்டபோதும் இரண்டாகப் பிரித்து கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலையிலே தனியாக இரண்டு ஒன்றியங்களுக்கும் நிதியினை ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அங்கு வரவேண்டிய கல்வி அலுவலர் அலுவலகம் மற்ற அனைத்து அலுவலகங்களையும் அங்கே ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தபோது நீண்ட நாட்களாக வேலை முடிகின்ற தருவாயில் இருந்த கேசரகும் அல்லா அணைக் கட்டுத் திட்டம் தனியார் ஒருவரின் கோர்ட் தடை உத்தரவின் பெயரால் நீண்டநாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. தற்போது முதலமைச்சர் அவர்கள் தனியாக அதற்கு ஒரு அரசு ஆணையை பிறப்பித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காக ஆணை இட்டு இருக்கிறார்கள். வேலைகள் துவக்கப்பட்டிருக் கின்றன. அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. தீர்த்தராமன்] [1987 மார்ச் 25

(பிற்பகல் 1-10)

அதே நேரத்தில் ஹொகேனக்கல் குடிநீர்த் திட்டம் அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் கிடைக்கவில்லை. இருந்தாலும், இந்த நிதிநிலையிலாவது அதையும் சேர்த்து, தர்மபுரி நகர மக்களுக்கும், அதைச் சுற்றியுள்ள கிராமப் பகுதி மக்களுக்கும் குடிநீர் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா மாவட்டங்களிலும் வறட்சி மிகக் கடுமையாக இருக்கிறது. அதைப்போலவே தர்மபுரி மாவட்டத்தினுடைய வறட்சியைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அங்கேயிருக்கின்ற மக்களில் பாதிக்கு மேலே பெங்களூருக்குச் சென்று கூலி வேலை செய்கின்ற அளவிற்கு அந்த மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வறட்சியைக் காண வந்த கமிஷனர் மரியாதைக்குரிய ரகுபதி அவர்கள் காலையிலே விமானத்தில் பெங்களூருக்கு வந்தார். அங்கிருந்து நேராக ஹொசூருக்கு வந்தார். காலை உணவை அங்கே முடித்துவிட்டு நேராக தர்மபுரி வந்து, மாலை ஜோலார்பேட்டை ரயில் நிலையத்திற்கு வந்து சென்னை வந்திருக்கிறார். எங்களைப் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கூட அவர் சந்திக்கத் தவறிவிட்டார். அங்கேயிருக்கின்ற சூழ்நிலைகளை எப்படி அவர் அறிந்திருக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மீண்டும் மறு ஆய்வு செய்து அந்த மாவட்டத்திலே வறட்சிப் பணிகளை மிகத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில் இன்றைக்கு அதில் தனியாருடைய ஆதிக்கம் இருக்கிறது என்று சொன்னால், அதை யாரும் மறுத்துவிட முடியாது. கார்ப்பொரேஷன் வண்டிகளை எல்லாம் கரையான் போய் செல்அரித்துக் கொண்டிருக்கிறது. ஒரு வண்டியையுடைய தனிப்பட்ட முதலாளி, ஓராண்டு, இரண்டாண்டுகளுக்குள் மூன்று, நான்கு வண்டிகளுக்கு அதிபர் ஆகின்ற அளவிற்கு இன்று போக்குவரத்துத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தனியார் வண்டிகளிலே 50 பேர்கள் உட்காருகின்ற இருக்கைக்கு வரி செலுத்திவிட்டு, 150, 200 என்று இருக்கின்ற அளவிலே



1987 மார்ச் 25] [திரு. ப. தீர்த்தராமன்]

ஆட்களை ஏற்றிக் கொண்டு, வரி ஏய்ப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முறையான ஒரு திட்டத்தை வைத்து, முறையான வரி வசூல் செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல்வர் அவர்கள் தர்மபுரி வருகின்ற நேரத்திலே என்னுடைய தொகுதியில் பாலக்கோட்டிலே, எ.டி.சி. பஸ் டிப்போ ஒன்றை துவக்கி வைத்தார்கள். அதற்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த டெப்போவிலே ஒரேயொரு டவுன் பஸ் தான் விடப்பட்டிருக்கிறது. அங்கு இன்னும் ஏழு, எட்டு பஸ்கள் தேவைப்படுகிறது. அதை விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று அரசு அலுவலகங்களில் பணியாற்றுகின்ற அரசு அதிகாரிகளும், கார்ப்பொரேஷன்களிலே பணியாற்றுகின்ற அலுவலர்களும் இன்று பகிரங்கமாக கட்சி உடையை அணிந்தும், கட்சிப் பொறுப்புக்களிலே இருந்து கொண்டும் அரசுப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இது அரசுக்கும் தெரியும். இதனால் பொது மக்களும், மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களும் செல்கின்ற நேரங்களில், அவர்களுக்கு எந்த வகையில் நீதி கிடைக்கும் என்பதை உணர்ந்து, அந்த நிலைமையை மாற்ற அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் வாகனங்களையும். பப்ளிக் கேரியர்களையும் அரசு அனுமதியோடு, பர்மிட்டோடு வாங்கிதான் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ஆட்டோ, டாக்சியானாலும் சரி, லோட் ஏற்றிச் செல்லும் லாரி, மற்ற வாகனங்கள் ஆனாலும் சரி, அந்த வாகனங்களில் கட்சிச் சின்னம் பொருத்தப்பட்டிருப்பது எந்த வகையில் நியாயம்? அந்தச் சின்னங்களைப் பொருத்தி இருக்கின்ற காரணத்தாலே மற்ற கட்சியினரும், அந்த வண்டிகளில் செல்கின்ற நேரத்தில் சற்று அச்சத்தோடு அமர வேண்டிய சூழ்நிலை தான் இருக்கிறது. இதைத் தவிர்க்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

விவசாயக் கடன்களைப் பொறுத்தவரையில் பெரிய நல்ல தொரு காரியத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றியிருக்கிறார்கள். கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருந்திருக்கிறது. விவசாயக் கடன் தள்ளுபடி என்பது மிகப் பெரிய பாராட்டக் கூடிய ஒன்றாகும். இதிலே மேலும் ஒரு திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே வாங்கியிருக்கின்ற விவசாயக் கடன்களுக்கும் அரசு நிர்ணயித்திருக்கின்ற சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு வருகின்ற கடன்களுக்கும், அரசு நிவாரணம் அளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று தமிழகம் முழுவதும் நில மேம்பாடு திட்டத்தின் கீழ் நில அளவை செய்யப்பட்டது. இந்த அளவை எந்த அளவிலே சரியாக இருக்கிறதென்று நிச்சயம் அங்கேயிருக்கின்ற சாதாரண மக்களைக் கேட்டால் அவர்களுக்கே தெரியும். முறையானவர்களுக்கு அந்த நிலப் பட்டா போய்ச் சேர்வதில்லை. உதாரணத்திற்கு என்னுடைய பெயரால் உள்ள நிலத்திற்கு என்னுடைய பெயரால் பட்டா கொடுக்கப்படவில்லை என்பதை மிக வருத்தத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சாதாரண மக்களுக்கு பட்டா போய்ச் சேராமல், பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழித்தும்கூட, பட்டா பெறாத நிலையில் அவர்கள் அலைந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு ஆவன செய்ய வேண்டி, இனியாவது மறு பரிசீலனை செய்து, அந்தப் பட்டாக்கள் எல்லாம் முறையாக வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை மறுபரிசீலனை செய்து, அந்தப் பட்டாக்களை உரியவர்களிடம் சேர்ப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய தேசியத்தைப் பொறுத்தவரையில் பாரதப் பிரதமர். ராஜீவ் காந்தி அவர்கள் தலைமையேற்றதற்குப் பின்னாலே, அவர்களுடைய செயல்பாட்டினையும் இந்தியாவினுடைய வளர்ச்சியையும் கண்டு, அன்னிய ஏகாதிபத்திய சக்திகளும், இங்கே இருக்கின்ற ஏகாதிபத்திய வாதிகளும் கொடுக்கின்ற இன்னல்





களுக்கு அளவே கிடையாது. அந்த இன்னல்கள் காரணமாக மொழியின் பெயரால், இனத்தின் பெயரால் பல்வேறுவிதமான தொல்லைகளை கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். உதாரணமாக சமீபத்திலே நடந்த வெடிகுண்டு சம்பவத்தை குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய முதல்வர் அவர்களைப் பொறுத்தவரை தேசீய ஒருமைப்பாட்டில் மிக அழுத்தமான நம்பிக்கை உடையவர். நம்முடைய முதல்வர் அவர்கள் சுவற்றை வைத்துத்தான் சித்திரம் வரையவேண்டும் என்ற ஒரு நல்ல அடிப்படையிலே இருக்கின்றவர். அந்த அடிப்படையிலேதான் கொடுக்கப்பட்ட சத்துணவுகூட என்பதை உதாரணமாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வலுவான இந்தியாவும், அதில் வலுவான ஆட்சியும் இருந்தால் தான் சாதாரண மக்களுக்கும் ஒரு நல்ல ஆட்சியை கொடுத்து நல்ல வாழ்க்கையை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையிலே அவர் இருக்கின்ற காரணத்தினாலே தென்னகத்திலே இன்று ஒரு அரணாக இருந்து இங்கிருக்கின்ற தேச விரோத சக்திகளையும், சமூக விரோத சக்திகளையும் உரிய நேரத்திலே இனம் கண்டு அவைகளை அழித்து வருகிறார்கள். இந்த தேசீயத்தை காப்பதிலே மிக மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக அவரை பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே மது விலக்குக் கொள்கையைப் பொறுத்தவரை நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கிருக்கின்ற அனைத்து உறுப்பினர்களை விட மிக அழுத்தமான நம்பிக்கை உடையவர் என்பதிலே யாருக்கும் ஐயப்பாடு கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்கை எடுத்த நேரத்திலே கூட, அவர் அந்த கட்சியிலே இருந்தாலும் கூட வெளியே வந்து மது அருந்துவது தவறு என்ற பிரச்சாரத்தை அவர்கள் செய்தார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அப்படிப்பட்டவர் ஆட்சிக்கு வந்த நேரத்திலே கள்ளச் சாராயத்தை ஒழிக்க இயலவில்லை, எனவே நல்ல சாராயத்தை கொண்டுவர வேண்டியிருக்கிறது என்று சொல்லி மீண்டும் மதுவிலக்கை ஒழித்து சாராயக் கடைகளை கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பது நாடறிந்த உண்மை. ஆனால் இப்போது கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடிந்ததா என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே அந்த கள்ளச்

சாராயம்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுக்க மாட்டார்கள், உண்மையைத்தான் சொல்கிறேன்—ஊர் ஊராக இன்று பெருகிக் கொண்டுதான் இருக்கிறது. அவர்கள் ஏற்கனவே கட்டிய வரி களைப்போல தற்போதும் ஏதோ ஒரு அரசுக்கு வரி கட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த வரிப்பணம் எங்கே சென்றுகொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இவை அனைத்தும் சாதாரண மக்களைப் பாதித்துக்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். 1984 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமெரிக்கா மருத்துவமனையில் இருந்த நேரத்திலே அனுமதி பெற்று நல்ல சாராயம் விற்ற கடைகளிலே—தர்மபுரி மாவட்டத்திலே மாவட்டம் முழுவதும் பினாமி பெயரிலே கடை களை எடுத்து நடத்தியவர்கள் கடைகளிலே—குறிப்பாக 7, 8 கடைகளிலே மது அருந்தியவர்கள் 200-க்கு மேற்பட்டவர்கள் இறந்தார்கள் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அரசினுடைய கணக்குபடி 27 பேர்கள் என்று கணக்கு காட்டப் பட்டது. அப்படி நல்ல சாராயம் இருந்த நேரத்திலேதான் கள்ளச் சாராயமும் இருந்தது. அது இயல்பு. அதை நாங்கள் மறுக்கவில்லை. எனவே அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாமல் சாதாரண மக்களுக்கு குடிப்பதினால் ஏற்படுகின்ற இழப்பினை, குடிப்பதினால் ஏற்படுகின்ற பாதிப்பினை குடும்ப கட்டுப்பாட்டிற்கு எப்படி பிரச்சாரம் செய்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றோமோ அதைப்போல், இந்த கள்ளச் சாராயத்தினால் ஏற்படுகின்ற பாதிப்பினையும், பொருளாதாரச் சீரழிவினையும் தெரிவிக்கின்ற வகையிலே அதை பிரச்சாரத்தின் வாயிலாகவும், சினிமாப் படங்களின் வாயிலாகவும் எடுத்துச் சொல்ல வேண்டும். அதைப்போல பாரதப் பிரதமர் கொண்டு வந்த பட்ஜெட்டிலே ஒரு . . . . . .

(மணியடிக்கப் பெற்றது).





திரு. த. பழனி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும் வணக்கங்களைச் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திருக்கின்ற 1987-88 ஆம் ஆண்டினுடைய நிதி நிலை அறிக்கை மிகச் சிறப்பான பல்வேறு அம்சங்களை, தமிழக மக்களுக்கு. குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு நல்ல பல வாய்ப்பு களை உருவாக்கி செயல்படுத்துகின்ற திட்டங்களை அறிவித்திருக் கின்ற அறிக்கையாக இருக்கிறது என்பதைக் கூறி அதை வரவேற்று பேசுவதிலே நான் மனமகிழ்வு கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்திலே இருக்கிற ஏழை எளிய மக்கள், வீடற்றவர்களுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டத்தை கடந்த ஆண்டு—30 இலட்சம் பேருக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை இந்த அவையிலே அறிவித்தார்கள். அதற்கேற்றாற் போல, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு முனைப் பான திட்டங்களின் அடிப்படையில் தேசிய வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் வாயிலாகவும், ஏற்கனவே பெற்றிருக்கிற பல்வேறு திட்டங்களின் வாயிலாகவும், சற்றேறக்குறைய ரூபாய் 300 கோடிக்குண்டான திட்டத்தை, கிராமப்புறத்திலே இருக்கிறவர்களுக்கு வீடு கட்டுகிற திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே, அனைத்து நாடுகள் வீட்டு வசதி ஆண்டான இந்த ஆண்டில் ஒதுக்கியிருப்பதை நான் மனமார வரவேற்கிறேன்.

அதேபோன்று, பல்வேறு திட்டப் பணிகளின் வாயிலாக கடந்த ஆண்டுகளிலே குடிசை மாற்று வாரியம், அதனது விரிவாக்கத் திட்டங்கள், அதேபோன்று பல்வேறு திட்டங்கள்—வீட்டு வசதி வாரியம், மற்றைய திட்டங்களுக்கு எல்லாம், ஏற்கனவே நகர மேம்பாட்டுக் கழகம் மற்றும் ஆயுள் இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலம் 1985-86 ஆம் ஆண்டுக்கு 26.23 கோடியும், 1986-87 ஆம்

[திரு. த. பழனி] [1987 மார்ச் 25

ஆண்டிற்கு 46.36 கோடியும் பெற்று மிகச் சிறப்பாக அந்தத் திட்டப் பணிகளை நிறைவேற்றி இருக்கிற அரசாக புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டிட ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று மக்கள் நல்வாழ்விலே மிக அக்கறை கொண்டிருக்கிற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆண்டு மிகச் சிறப்பான முன்னோடித் திட்டத்தினை இன்றைக்கு இந்த அவையிலே அறிவித்து இருக்கிறார்கள். ஏற்கனவே, குழந்தைகள் நல மையங்களாக 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் படிக்கின்ற மையங்கள் 28,125. அதிலே 5,000 மக்களுக்கு மேலாக இருக்கிற பகுதிகளுக்கு துணை சுகாதார நிலையங்கள் ஏற்கனவே 7,200 என்று இருந்ததை இன்றைக்கு 7,700 ஆக உயர்த்தித் தந்து இருக்கிறார்கள். கூடுதல் தொடக்க சுகாதார நிலையங்களை உருவாக்கிக் காட்டுவதிலேயும், சற்றேறக்குறைய 698 சுகாதார நிலையங்கள் கடந்த ஆண்டு வரை செயல்பட்டுக் கொண்டிருப்பதை, 140 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்கிக் காட்டி மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தின் வாயிலாக மிகச் சிறப்பான பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து சிறப்புறச் செய்திருக்கிறார்கள்.

அதேபோன்று ஏழை எளிய மக்கள் பயன் பெறுகிற விதத்தில் காலணித் திட்டத்தை இன்றைக்கு அறிவித்து இருக்கிறார்கள். அப்படி அறிவித்து இருப்பது, மனிதாபிமானத்தின் அடிப் படையில் புரட்சித் தலைவர் அவர்கள், கடந்த காலத்திலே சத்துணவையும், பள்ளி மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களையும் சீருடையையும், தந்து, இன்றைக்குக் காலணியையும் அறிவித்திருப்பதால், மக்களிடத்திலே அவருக்கு இருக்கிற மனிதாபிமானத்தை இன்றைக்கு இந்த அவையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அத்திட்டங்களின் வாயிலாக நிறைவு செய்திருக்கிறார்கள்.



987 மார்ச் 25] [திரு. த. பழனி]

கடந்த காலத்திலே கல்விக்கும், மற்றைய பல்வேறு துறை களுக்கும் இந்த அவையிலே ஒதுக்கியிருக்கிற பல்வேறு நிதிகளை இந்த ஆண்டு கூட்டியிருப்பது, இந்த நிதி நிலை அறிக்கைக்கு பெருமை சேர்த்திருக்கிறது. மரியாதைக்குரிய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் கல்விக்கு 551 கோடி ரூபாயை கடந்த ஆண்டு அறிவித்தார்கள். இந்த ஆண்டு அது 597 கோடி ரூபாய். அதே போன்று வேளாண்மைக்கு கடந்த ஆண்டு 118 கோடி ரூபாய். இந்த ஆண்டு ரூபாய் 141 கோடி. நகராட்சி மற்றைய சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கு கடந்த ஆண்டு 177 கோடி ரூபாய். இந்த ஆண்டு 193 கோடி ரூபாய். சமூக நலனுக்கு கடந்த ஆண்டு ரூ. 76 கோடி. இந்த ஆண்டு 92 கோடி ரூபாய். பொதுப் பணி பாசனத்திற்கும் மற்றைய பாசனங்களுக்கும் கடந்த ஆண்டு 129 கோடி ரூபாய். இந்த ஆண்டு 142 கோடி ரூபாய். இப்படி வளர்ச்சிப் பணிகளிலே நாட்டம் செலுத்துகிற அரசாக, இந்த தமிழகத்தினுடைய பல்வேறு திட்டங்களுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கி நாவலர் அவர்கள் இந்தத் திட்டங்களை அறிமுகப்படுத்தி யிருக்கிறார்கள்

கிராமப்புறங்களுக்கு, தொலைக்காட்சிப் பெட்டிகள், வீடியோ காசட்டுகள் வழங்குகிற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல், 1984 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று தமிழக முதல்வர் அவர்கள், கிராமப்புறங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டும், அனைத்து கிராமங்களுக்கும் வழங்கவேண்டும் என்ற உத்தரவை அறிவித்தார்கள். பல்வேறு கிராமங்களிலே தொலைக்காட்சிப் பெட்டிகள் பெறுவதற்கு உண்டான வாய்ப்பாக அங்கே நிதிநிலைமை இல்லை; ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலைமை இல்லை. எனவே, அதற்காக இந்த நிதி நிலைகளை அந்தந்த ஒன்றியங்களுக்கும். மன்றங்களுக்கும் ஒதுக்கித் தந்து, மக்கள்—கிராமப்புற ஏழை எளிய மக்கள் பயன் பெறுவதற்குண்டான திட்டத்தை உருவாக்கித் தந்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. த. பழனி] [1987 மார்ச் 25

அதேபோன்று, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மிகப் பயங்கரமான சூழ்நிலையான வறட்சி தமிழகத்திலே விரிந்து, பரந்து இருக்கிறது என்பதை அனைத்து மன்ற உறுப்பினர்களும் பேசினார்கள். நானும் என்னுடைய தொகுதியின் சார்பாகவும், தொகுதியினுடைய மக்களின் சார்பாகவும் பேசியாக வேண்டும். எங்களையொட்டி இருக்கிற பாலாற்றிலே கடந்த பல ஆண்டுகளாகத் தண்ணீர் வருவதே இல்லை. பாலாற்றுப் பாசனமாக இருக்கிற ஏரிகள் வறண்டு கிடக்கின்றன. குடிநீர் திட்டங்கள் அங்கே குன்றிப்போய் இருக்கின்றன. ஏற்கெனவே தோண்டியிருக்கிற கிணறுகள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் காய்ந்துபோய் இருக்கின்றன. இங்கே போடப்பட்டிருக்கிற போர் வெல்களில் நீர் மட்டம் குறைந்து போய் இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே குடிநீர்ப் பிரச்சினை மிக பரவலாக்கப்பட்டு குடிநீருக்காக மக்கள் பல இடங்களில் பல பம்ப்செட்டுகளைத் தேடிப் போகக் கூடிய சூழ்நிலை பெருகிக் கிடக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே பாலாற்றிலே கழிவுகளின் காரணமாக பொலூசன் ஏற்பட்டிருக்கிறது. குடி நீர்த் திட்டங்கள் பாழ்பட்டு போய்க்கொண்டிருக்கின்றன. பல்வேறு திட்டங்கள், குடிநீர் திட்டங்களை நிறைவேற்றுவதிலே அரசு அதிகாரிகள் மெத்தனமாக இருக்கிறார்களோ என்ற எண்ணம் அங்கே இருக்கின்ற மக்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. குடிநீர்த் திட்டங்களை விரைவுபடுத்தியாக வேண்டும். குடிநீர்த் திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கிற நிதியைப் பெற்றிருக்கிற துறை மிக வேகமாக சிறப்பாகச் செயலாற்றினால்தான் இதுபோன்ற வறட்சி காலங்களில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளை, மக்களின் பிரச்சினைகளைப் போக்குவதற்கு, சிறப்பான ஏற்பாடுகளாக அமையும். அதை விரைவுபடுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்தாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



1987 மார்ச் 25] [திரு. த. பழனி]

அதேபோன்று ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்திலே மிகச் சிறப்பான பணிகளை தமிழக அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டியாக வேண்டும். முதலாவது ஆண்டிலே திட்ட இலக்கு 960 கோடி ரூபாய். ஆனால் திட்டம் நிறைவேறி இருப்பது 1,012 கோடி ரூபாய். 1986—87 ஆம் ஆண்டிலே திட்டத்தினுடைய இலக்கு 1,153 கோடி ரூபாய். திட்டம் நிறைவு பெற தேவையான பணம் 1,200 கோடி ரூபாய். 1987-88-ம் ஆண்டிலே திட்டத்தினுடைய இலக்கு 1,250 கோடி ரூபாய். திட்டம் முடிவு பெறுவதற்கு 1,341 கோடி ரூபாய். இப்படி பல்வேறு துறைகளிலேயும் வெற்றியை நிலை நாட்டிக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவருடைய அரசு பல்வேறு நாட்டு நலப் பணிகளை இன்றைக்கு மிகச் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. உணவு விலையிலே ஏற்றத்தை உருவாக்கி காட்ட முடியாமல் பல்வேறு நியாயவிலைக் கடைகளைத் திறந்து வைத்ததன் மூலம் நாட்டிலே ஸ்திரத் தன்மையை உணவு வகையிலே ஏற்படுத்திக் காட்டியிருக்கிற அரசாக இன்றைக்கு புரட்சித் தலைவருடைய அரசு இருக்கிறது.

அதேபோன்று, மின்சாரத் திட்டத்திலே, தன்னிறைவு பெற்றுக் கொண்டிருக்கிற அரசாக கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளிலே 300-க்கும் மேற்பட்ட கோடி ரூபாய்களை ஆண்டாண்டுக்கு செலவு செய்து இன்றைக்கு ஏறக்குறைய 408 கோடி ரூபாய்க்கு மேலே திட்டங்களை அரசு அறிவித்து மின்சாரத் துறையிலே தன்னிறைவு பெறக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

அதேபோன்று போக்குவரத்துத் துறையிலே மிகச் சிறப்பான பெயரை இந்திய நாட்டிலே தமிழகம் பெற்றிருப்பதற்கு உண்டான வாய்ப்பினை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. அதேபோன்று மதுவிலக்கைக் கொண்டு வந்ததால் ஏறக்குறைய 250 கோடி ரூபாய்க்கு மேலான இழப்பை இந்த அரசு பெற்றிருக்கிறது. அதே போன்று சத்துணவு, சீருடை, பாட புத்தகங்கள், இப்போது ஏற்படுத்தித் தந்திருக்கிற காலணித் திட்டம், இப்படி இந்தத் திட்டங்களினால் ஏற்பட்டிருக்கிற செலவு ஏறக்குறைய 227 கோடியிலிருந்து 230 கோடி ரூபாய்க்கு மேல் ஆகி இந்தப் பணிகளால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

[திரு. த. பழனி] [1987 மார்ச் 25

அதேபோன்று கூட்டுறவுக் கடன். முதுகெலும்பு இல்லாமல் நின்றுகொண்டிருந்த விவசாயிகளை, முதுகெலும்பு உள்ள விவசாயிகளாக இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு விவசாயக் கடன் வட்டிகளை தள்ளுபடி செய்ததன் காரண மாக, இன்றைக்கு மிகச் சிறப்பான விவசாயிகளைப் பெற்றிருக்கிற நாடாக தமிழகம் விளங்குவதற்குண்டான வாய்ப்பினை உரு வாக்கித் தந்திருக்கிற அரசாக புரட்சித் தலைவர் அரசு விளங்கு கிறது. அதனால் ஏற்பட்டிருக்கிற இழப்பு, இப்படி படிப்படியாக பல்வேறு இழப்புகளையும் பெற்று, பல்வேறு சாதனைகளை நாட்டு மக்களுக்காக நல்ல திட்டங்களை உருவாக்கித் தந்து கொண்டிருக்கிற அரசாக புரட்சித் தலைவருடைய அரசு இருக்கிற காரணத்தால் இந்த பட்ஜெட்டிலே துண்டு விழுந்திருக் கிறது. இருப்பினும் ஏற்கெனவே மிகச் சிறப்பான நிதிநிலையைப் பெற்றிருக்கிற, மிகச் சிறப்பான நிதிநிலையை அளித்திருக்கிற மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு நாட்டு மக்களுக் கான திட்டங்களை, நாட்டு மக்களுக்குத் தேவையான திட்டங் களை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக மக்களுக்கு அளித்திருப்பதன் காரணமாக ஏற் பட்டிருக்கிற இழப்பை எந்த மக்களுக்காக இந்த மத்திய அரசு இருக்கிறதோ அந்த மத்திய அரசு இந்த மாநிலத்திற்கு ஏற்பட்டிருக்கிற இழப்பை நிச்சயமாக ஈடு செய்தாக வேண்டும். இதில் ஏதோ கடன் தருவதுபோல, மாற்றாந்தாய் மனப் பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படி மாற்றினால் தான் மத்திய மாநில உறவுகள் மிக நன்றாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்டிட ஆசைப்படுகிறேன்.

இப்போது என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். பல்வேறு திட்டங்களை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களை என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை பார்ட் 2 ஸ்கீமிலே அத்தித்தாங்கல், கரிக்கண்தாங்கல் சாலையிலே ஒரு மிகப் பெரிய பாலத்தை கட்டித் தரும்படி நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோன்று, ஆரணி-ஆற்காடு சாலைக்கு மாற்றுச் சாலையை உருவாக்கித் தருமாறு நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1987 மார்ச் 25] [திரு. த. பழனி]

(பிற்பகல் 1-30)

கடந்த 7 ஆண்டுக்காலமாக முடிக்கப்படாது இருக்கிற அந்தச் சாலையை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அடுத்து, கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல்வேறு சாலைத் திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதையும் விரிவுபடுத்தி செயல்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் வாயிலாக ஆர்க்காடு-திண்டிவனம் சாலையிலிருந்து முள்ளுவாடி, குருமுடித்தாங்கல், அத்தித்தாங்கல், எசையனூர், அத்திப்பட்டு வழியாக பாலாற்றின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டி, காவிரிப்பாக்கத்தில் சென்னை-வேலூர் சாலையை இணைத் திடல் வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே கலவை, வாழப்பந்தல் வழியாக செய் யாற்றில் பாலம் ஒன்றைக் கட்டி ஓரக்காட்டில் இணைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே பொதுப்பணித் துறையின் சார்பாக பல்வேறு மாடர்னைசேஷன் திட்டங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி இன்றையதினம் கிராமப்புற ஏரிகளையெல்லாம் நவீனப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பிய திட்டத்தின் வாயிலாக பொதுப்பணித் துறையில் பல நவீன திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையும் விரிவுபடுத்தி எங்கள் பகுதியில் மேலும் பல்வேறு ஏரிகளையும் செப்பனிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வேலைவாய்ப்புத் திட்டத்தின் வாயிலாக தூர்ந்து போயிருக்கும் பல்வேறு கால்வாய்களையும் தற்போது செப்பனிட்டுக் கொண்டிருக்கிற இந்த அரசு மிகவும் பின்தங்கி இருக்கிற எங்கள் பகுதிக்கும் அதை விரிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே திட்டப் பணியில் சேர்க்காமல் இருந்தாலும் பரவாயில்லை. இப்போது திட்டப் பணியில் சேர்த்து செப்பனிட்டுத் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. த. பழனி] [1987 மார்ச் 25

மேலும் காவிரியில் மாடர்னைசேஷன் செய்வதைப்போல் பாலாற்றிலும் மாடர்னைசேஷன் செய்து பாலாற்றுப் படுகையை நவீனப்படுத்துவதன் வாயிலாக பாலாறில் கிடைக்கிற தண்ணீரை பாசனத்திற்குச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள இயலும். ஆகவே அந்த வகையில் கால்வாய்களைச் சீரமைத்து, தூர்ந்து போயிருக்கிற ஏரிகளையெல்லாம் செப்பனிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்று வதன் மூலமாக எங்கள் பகுதியில் இருக்கிற விவசாயிகள் எல்லோரும் பயன் பெறுவார்கள் என்று சொல்லி வாய்ப்பை நல்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

* **திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு முன்னால் நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரசுக்கு நன்றி தெரிவித்து, ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தீக்குச்சிக்கு வரிக் குறைப்புச் செய்திருப்பதையும் அதைப் போலவே பழைய நகை களை விற்கிற ஏழை எளிய மக்களுக்கு நலம் பயக்கிற வகையில் வரிக் குறைப்பு செய்திருப்பதையும் நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் உணவுப் பொருள்களின்மீது வரி விதிப்பதானது சாதாரண மக்களைப் பாதிக்கக் கூடியது என்று இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் இயங்கி வருகிற போக்குவரத்துக் கழகங்கள் அனைத் திலும் லாபம் கிடைக்கிறது. நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் திறமை காரணமாக அவைகள் லாபத்தில் இயங்கி வருகின்றன. ஆனாலுங்கூட பொதுமக்களுக்குச் சேவை செய்கிற ஸ்தாபனங்களாக விளங்குகிற போக்குவரத்துக் கழகங்கள் லாப நோக்கோடு பேருந்துகளில் பயணம் செய்கிற



1987 மார்ச் 25] [திரு. மு. இராசாங்கம்]

சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய வகையில் போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தியிருப்பதை அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்தப் போக்குவரத்துக் கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மோட்டார் வாகன வரியைக் குறைப்பு செய்திருப் பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் வேன்களில் சாதாரணமாக 14 அல்லது 15 பேர் பயணம் செய்கிற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அரசு 7 பேர்கள் மட்டும்தான் வேன்களில் பயணம் செய்யலாம் என்று அனுமதித்துள்ளதை மாற்றி 15 பேர்கள் பயணம் செய்யத்தக்க வகையில் உத்தரவை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில் எங்கள் பகுதியில் உள்ள சில குறைகளை தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த சில ஆண்டுகளாக தஞ்சை மாவட்டம் வறட்சியாலும் வெள்ளத் தாலும் பாதிக்கப்பட்டு வருகிறது என்பதை கடந்த கால ஆளுநர் உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் மற்றும் அரசிடமிருந்து விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுவரும் பல்வேறு சலுகைகள் மூல மாகவும் இந்த அரசு உணர்ந்திருக்கிறது. இருந்தபோதிலும் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயப் பெரு மக்கள் கூட்டுறவுக் கடன்களை ஓராளவுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள்.

ஆனாலும் அரசு ஒத்தி வைத்திருக்கின்ற நிலவரி ஒரு சில பகுதிகளில் அதிகாரிகளின் கெடுபிடியால் வசூல் செய்யப்பட்டிருக் கிறது. அரசு ஒத்தி வைத்திருக்கின்ற சில பசலிகளில் உள்ள நில வரியை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து ரத்து செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை பல்வேறு காலக் கட்டங்களில் அரசு அறிவித்திருந்தாலும் கூட குத்தகை விவசாயிகளுடைய குத்தகை பாக்கியை வசூல் செய்யும் வகையில் சிறு விவசாயிகளை ரெவின்யூ கோர்ட்டுகளுக்கு நிலச்சுவான்தார்கள் இழுத்து அவர்களைப் பாதிக்கிற வகையில் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். ஆகவே ரெவின்யூ கோர்ட் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அரசு அறிவித்திருந்த வருஷங்களில் குத்தகை தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான திருவிடைமருதூரில் பல கோயில்கள் மடங்கள் இருப்பதால் அரசு அறிவித்துள்ள 75 : 25 என்ற குத்தகை விகிதத்தை நடைமுறைப்படுத்தாமல் இன்னும் கட்டாய வசூலில் இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில் 75:25 ஆக அமுல்படுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி பிரச்சினையைப் பொறுத்தவரையில் நடுவர் மன்ற தீர்ப்புக்கு விட மத்திய அரசோடு கலந்து பேசி விரைவிலே உரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த ஆண்டு ஒருபோக விவசாயத்தின் காரணமாக தாங்கள் வைத்திருந்த நெல்லை விற்று கூட்டுறவு கடன்களையும் சர்க்காருடைய நில வரியையும் செலுத்தியிருக்கிறார்கள். இன்று அவர்கள் விற்ற நெல்லிலிருந்து பெற்ற உர கூப்பன்களை ஒன்றுக்குப் பாதியாக உர வியாபாரிகளிடம் விற்றுக்கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே எங்கள் பகுதியில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் அன்றாட வாழ்க்கை வாழ்வதற்கு எங்கள் பகுதியில் உள்ள எல்லா பாசன கால்வாய்களையும், குளங்களையும் தூர் எடுக்க திட்டம் போட்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.





வீட்டு வசதித் திட்டத்தைப் பொறுத்தவரையில் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. ஆகிய திட்டங்களின் கீழ் வீடு கட்டுவதற்குத் தேவையான மூலப் பொருள்களை கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தயாரிப்பதில் காலதாமதம் ஆகும் என்று கருதுவதால் தொடர்ந்து குறிப்பிட்ட காலத்திற்குள்ளே அரசு அனுமதிக்கிற குடியிருப்பு இல்லங்களைக் கட்டுவதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காலணி வழங்கும் திட்டத்தை நான் வரவேற்கும் அதே நேரத்தில் மக்களுக்கு காலணியை வழங்கும்போது சர்வோதயா சங்கங்கள் மூலம் காலணிகளை அமைத்துக் கொடுத்தால் அந்த சங்கங்களும் வளரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மதுவிலக்கைப் பொறுத்தவரையில் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். மது அருந்துவது தீய பழக்கம் என்று கருதி நம்முடைய அரசு மதுவிலக்கைக் கொண்டு வந்தாலுங்கூட, குறிப்பாக எங்கள் பகுதியில் குடிசைத் தொழிலாக சாராயம் காய்ச்சும் தொழில் நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால் காவல் துறையின் கண்காணிப்போடு. தெருத் தெருவாக இன்னின்னார்தான் விற்க வேண்டும் என்று முறைப்படுத்தி சாராயத்தை விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் உயர் ரக மதுபானம் விற்பதையும் தடை செய்து பூரண மதுவிலக்கை அமுலாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒரு கருத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். பொதுவாக உணவு தானியங்களுக்கு தங்களுடைய பெயரை வைத்த இயக்கங்களும் தமிழகத்திலே இருக்கின்றன. தமிழகத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிறுவனம் சிறப்பாக பணியாற்றி வருகிறது.

அந்த ஆடுதுறையை நினைவுகூர்கிற வகையில் தஞ்சை மாவட்டத்தில் அரசு அனுமதித்துள்ள விவசாயக் கல்லூரியை ஆடுதுறையில் ஆரம்பித்து வைத்து ஆடுதுறையின் பெயர் நிலைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். என்னுடைய தொகுதியில் மூன்று அரசு மருத்துவமனைகள் இருக்கின்றன. அதிலே பணியாற்றுகின்ற பெண் மருத்துவர்கள் அந்த ஊரிலே தங்குவதில்லை. வேறு ஊர்களிலிருந்து பணியாற்ற வருகிறார்கள். இதனால் அந்த ஊரில் இருந்து மகப்பேறுக்காக வருகிற பெண்கள் கும்பகோணம் செல்லும் நிலை இருக்கிறது. முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்திருப்பதால் புதிய கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் பல்வேறு கல்வி நிறுவனங்களிலே—ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும், அரசுப் பள்ளிகளிலும்—ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தப் பணியிடங்களை அரசு நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நான் ஒரு சில கருத்துக்களைக் கூறி, விரைவிலே முடித்துக்கொள்கிறேன். தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு நிரந்தரமாக குதிரை சக்திக்கு 75 ரூபாய் என்று நிர்ணயம் செய்துள்ளதை மாற்றி, அவர்கள் உபயோகிக்கும் மின்சாரத்திற்கு கட்டணம் வசூலிக்கவேண்டும் அல்லது இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





## 6. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் 1—4—1987 ஆம் தேதியன்றும், மானியக்கோரிக்கைகள் 20—வேளாண்மை. 49—குடிநீர் வழங்கல், 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு 2—4—1987 ஆம் தேதியன்றும் மற்றும் மானியக் கோரிக்கைகள் எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும், எண். 33—வீட்டு வசதி மற்றும் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி ஆகியவை 10—4—1987 ஆம் தேதியன்றும் விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக் கொள்ளப்படும்.

## 5. வரவு-செலவுத்திட்டம் 1987-88, பொது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் அளித்திருக்கிற நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நிதிநிலை பற்றி கருத்து தெரிவித்த ஒருசில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இது ஒரு பற்றாக்குறை பட்ஜெட் என்று குறை கூறினார்கள். மேலும் புதிதாக வரியைப் போட்டு விட்டார்கள் என்று குறைபட்டுக் கொண்டார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது, புரட்சித் தலைவரவர்களுடைய அரசு எந்த அளவுக்குச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதையும், டாக்டர் நாவலர் அவர்கள் எந்த அளவுக்கு சிறப்பாக இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அளித்திருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறபோது அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

[திரு. தி. அன்பழகன்] [1987 மார்ச் 25

மதுவிலக்கைக் கொண்டு வந்ததன் விளைவாக நமது வருவாயில் 250 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. வறட்சிப் பணிகளுக்கு அனுமதி வழங்கியிருந்தாலும், கூட்டுறவுக் கடன்கள் தொடர்பாக விவசாயிகள் செலுத்த வேண்டிய கடனையும், வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்திருந்தாலும், மத்திய அரசு வழங்கும் அகவிலைப்படிக்கு நிகராக தமிழகத்தில் இருக்கின்ற அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி தந்திருந்தாலும் பொங்கல் பரிசு கொடுத்திருந்தாலும், நிர்வாகத்தில் செம்மையான, சீரான, சிக்கனமான நடவடிக்கையை மேற்கொண்டதால், அதிக அளவுக்கு பற்றாக்குறை இல்லாமல் சிறப்பாகத் தடுக்கப்பட்டிருக்கிறது.

விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குதல், கைத்தறித் துணிகளுக்கு தள்ளுபடி வழங்குதல், பொது விநியோக முறையில் அரிசி வழங்கி, அதன் காரணமாக ஏற்படும் இழப்புத் தொகையை ஏற்றுக்கொள்ளுதல். விவசாயிகளுக்கு கொள்முதல் விலைக்குமேல் ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற பல சிறப்பான திட்டங்களைச் செய்வதன் வாயிலாக அரசுக்கு அதிக அளவுக்கு செலவு ஏற்பட்டாலும், இது மக்களுக்காகப் பணியாற்றும் அரசு, மக்களுக்காக தன்னுடைய கடமையை சிறப்பாகச் செய்யும் அரசு என்பதை நிரூபிக்கும் வகையில் மக்களுக்குரிய சமுதாய நலப் பணிகளை இன்றைக்குச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறது. வருவாய் குறைவாக இருந்தாலும்கூட, ஒதுக்கீடுகள் குறைவாக இருந்தாலும்கூட, நமது வளர்ச்சிப் பணிகளை, நலப் பணிகளைச் செய்வதிலே அரசு இன்றைக்கு முன்னிலையில் நின்று செயல்படுத்துவதோடு, கூடுதல் வருவாய் திரட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. புதிய வரிகளை விதிக்கிறபோது, ஏழை எளிய மக்கள் பாதிக்காத அளவுக்கு வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோக, பொருளாதார வளர்ச்சி தடைபடாத அளவுக்கு இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் எதிர்பார்ப்பது, யார்மீது எப்படி வரி போடப்படுகிறது என்பதுதான். தாங்கக்கூடியவர்கள்மீது புதிதாக வரி போடப்பட்டிருக்கிறது.



1987 மார்ச் 25] [திரு. தி. அன்பழகன்]

ஆகவே இது சாமானிய மக்கள் ஏற்றுக்கொள்ளும் சிறந்த நிதிநிலை அறிக்கை என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே மதுவிலக்கால் ஏற்படும் அந்த இழப்பை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு தமிழகத்திற்குக் கூடுதலாக நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று மன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசு இயற்கையிலே வருகின்ற இடர்ப்பாடுகளை, இன்னல்களை செயற்கை சூழ்நிலையிலே ஏற்படுகின்ற இன்னல்களையும் ஏற்றுக்கொண்டு சமாளித்து மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கின்ற முறையிலே சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நாவலர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். செயற்கை சூழ்நிலைகளை உருவாக்கி மக்களுக்கு இன்னல்களைத் தந்து அரசுக்கு தொல்லைகளை ஏற்படுத்தி வந்தாலும், இன்றைக்கு அரசு அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. தென்றல் தவழ்கிற தமிழகத்தில் புயல் வீசாதா? என்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். சோலைவனமாக இருக்கின்ற தமிழகம் பாலைவனமாக மாறவேண்டுமென்று இன்றைக்கு சிலர் எண்ணிக்கொண்டு இருக்கின்றார்கள். "அமைதி தவழும் ஆட்சியில், அடக்குமுறையும் வன்முறையும் உருவாக்கவேண்டும் என்று சிலர் விரும்புகின்றார்கள். தியாக உணர்வு படைத்த மொழி உணர்வை இன்றைக்கு மாற்றி அதற்குக் களங்கம் ஏற்படும் வகையில் நடந்துகொண்டிருக்கின்றார்கள். அதை திசை மாற்றி செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள். தமிழரின் மீது குண்டினை வீசி தமிழர்களை அழித்துவிட்டு, எப்படித் தமிழுணர்வை தமிழ் உணர்வைக் காப்பாற்றுவார்களோ தெரியவில்லை. அந்த அளவுக்குத் தமிழகத்திலே அமைதியைக் குலைக்க விரும்புகின்றார்கள். பாலங்களைத் தகர்ப்பதும், கட்டிடங்களை இடிப்பதும், ரெயில்களைக் கவிழ்ப்பதும், பஸ்களைக் கொளுத்துவதும் போன்ற நிலைமைகள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை அரசு கடுமையான நடவடிக்கைகள் மூலம் அடக்கி ஒடுக்கவேண்டும். இதைத் தூண்டுபவர்கள் மீது அவர்கள் யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. தி. அன்பழகன்] [1987 மார்ச் 25

வறட்சிப் பணிகள் சம்பந்தமாக அரசு மீது குறைகளைச் சொல்கின்ற அளவுக்கு இங்கே பேசினார்கள். இது சம்பந்தமாக ஆளுநர் அவர்கள் உரைமீது பேசும்போது மாண்புமிகு நாவலர் அவர்கள் மிக விளக்கமாக கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் அவருடைய கருத்தை எடுத்துச்சொல்லும்போது அரசு ஒழுங்காக தன்னுடைய கடமைகளைச் செய்யவில்லை என்று சொன்னார்கள். அதிலே நான் ஒன்றை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1975 ஆம் ஆண்டு தமிழகத்திலே வறட்சி ஏற்பட்ட போது, அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அன்றைய மத்திய அரசு நிதி அமைச்சர் அவர்கள் அன்றைய தமிழக அரசு வறட்சி பணிகளைச் சரியாகச் செய்யவில்லை, கணக்குகள் சரியாக வைத்திருக்கவில்லை என்று குறை சொன்னார்கள். அப்போது தமிழகத்தினுடைய நிலைமைகளை மறந்துவிட்டு. வறட்சி காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்களே, அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையிலே வழிவகை தேடவேண்டும் என்ற நிலைமையைக்கூட மறந்துவிட்டு வீராவேசமாக இதை ஒரு மானப்பிரச்சினையாக எடுத்துக் கொண்டு மத்திய அரசிலேயிலிருந்து நிதியைப் பெறமாட்டோம் என்று சொன்னார்களே, அப்படிப்பட்ட அவர்கள் இன்றைக்கு இந்த அரசை குறைசொல்வது என்பது வேடிக்கையாக இருக்கிறது ; வேதனையாக இருக்கிறது.

இன்றைக்குத் தமிழக அரசைப் பொறுத்தவரையில் வறட்சிப் பணிகளைச் சிறப்பாக செய்துகொண்டிருக்கின்றது. மத்திய அரசிடம் இருந்து 334 கோடி ரூபாய் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். மத்திய அரசு அதை முழுமையாக வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே 8 ஆயிரத்திற்கு அதிகமான ஆழ்துளை கிணறுகளைப் போடுவதற்கு ரூ. 28 கோடி அளவுக்கு ஒதுக்கீடு செய்து தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் மாவட்டத்திலே 700 ஆழ்துளைக் கிணறுகளை அமைக்க அரசு அனுமதி தந்திருக்கின்றது. எங்க



1987 மார்ச் 25] [திரு. தி. அன்பழகன்]

ளுடைய மாவட்டம் முழுவதும் வறட்சியினால் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் காரணத்தினால் அந்த மாவட்டத்தில் அதிகமான அளவிற்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக்கொள்வதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையில் வறட்சிப் பணிகளை அதிகரித்து அவர்களுக்கு அதிகமான வேலை கிடைக்கச் செய்யவேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்ய வேண்டும். அவர்களுக்கு போதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில் கிணறுகளை வெட்டுகின்ற போது, எந்த அளவுக்கு அவர்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். காலையிலேகூட பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தின் மீது பேசும்போது, சொன்னார்கள். அரசு வெடி மருந்து விவசாயிகளுக்கு சுலபமாகவும் விரைவாகவும் கிடைக்கின்ற அளவுக்கு செய்ய வேண்டும் என்று கோரினார்கள். இன்றைக்கு யாரோ சில பாவிகள் செய்த கொடுமைகளால் தமிழகத்திலே இருக்கின்ற அப்பாவி விவசாய மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். காலையிலே மாண்புமிகு நாவலர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, இன்றைக்கு விவசாயிகளுக்கு வெடி மருந்து கிடைக்கும் என்று சொன்னார்கள். அதிலே இருக்கின்ற கடுமையான விதிகள் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு விவசாயி நேரடியாகச் சென்று வெடி மருந்துப் பொருள்களை வாங்க முடியாத அளவுக்கு பல சங்கடமான சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே மாவட்டத்தினுடைய தலைமை அலுவலகத்திலே போய் அனுமதி பெறுவதைவிட, வட்ட ஆட்சியாளர் மூலம் தாலுக்கா அலுவலகத்திலேயே அனுமதியைப் பெற்று வெடி மருந்துகளைப் பெறவேண்டும். அப்படி அனுமதியைப் பெற்று விவசாயிகள் தங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்திக்கொள்ள அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்

கிறேன். அதே நேரத்திலே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்தினால்தான் விவசாயமே செய்ய முடியும் என்று சூழ்நிலையில் இருப்பதால் அவர்கள் கிணறுகளை வெட்டிக் கொள்வதற்கு நிதி உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-50)

அதுபோலவே, இன்றைக்கு இருக்கின்ற முக்கியமான பிரச்சினை காவிரி நதி நீர்ப் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு மேலும் கால தாமதம் ஏற்படாத அளவுக்கு நிலைமைகளை உருவாக்க வேண்டும். காரணம் இன்றைக்கு மத்திய அரசிடம் அனைத்து அதிகாரங்களும் இருக்கின்றன. அதன் காரணமாக காவிரி நதி நீர் பிரச்சினையாக இருந்தாலும் சரி, கிருஷ்ணா ஆற்று நீர் பிரச்சினையாக இருந்தாலும் சரி, மேற்கு நோக்கி ஓடி கடலில் கலக்கின்ற நீரை தமிழகத்திற்குத் திருப்புகின்ற நீர் பிரச்சினையாக இருந்தாலும் சரி மத்திய அரசு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளை கலந்து பேசி விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கவேண்டும். காவிரி நதி நீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கர்நாடகாவிலே ஏற்கெனவே ஹேமாவதி, ஹேரங்கி, கபினி என்ற மூன்று அணைகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற மாதம் கர்நாடக சட்டமன்றத்திலே ஒரு கேள்விக்கு கர்நாடகா மின் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது மேகதோடு என்ற இடத்தில் ஓர் அணை கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தப்பட்ட சர்வே முடிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் வேலை துவக்கப்படும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு அதற்கு அனுமதி தரக் கூடாது. இதற்கிடையே காவிரி நதி நீர் பிரச்சினையை நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை கேட்டுக்கொண்டு ஓராண்டு காலமாகியும் இன்னும் அவர்கள் காலதாமதம் செய்துகொண்டிருக்கும் நிலையில் மீண்டும் கர்நாடகாவிலே அணைகள் கட்டப்படுமென்றால் தமிழகத்திற்கு இப்பொழுது வருகின்ற தண்ணீரும் நிறுத்தப்படும் அளவுக்கு



நிலைமை போய்விடும். இப்படிப்பட்ட நிலையில் தமிழகம் மேலும் பாதிப்புக்கு உள்ளாகும். ஆகவே மத்திய அரசு உடனடியாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் கிருஷ்ணா நீர் பிரச்சினையைப் போல என்னுடைய தொகுதியில் ஒரு பிரச்சினை இருக்கிறது. பாலாற்றை எடுத்துக்கொண்டால் என்னுடைய தொகுதியில்தான் அது துவங்குகிறது. அங்கேயுள்ள புல்லூரில் ஒரு நீர்த் தேக்கத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. ஆனால் சுமார் 120 ஏக்கர் பகுதி ஆந்திராவில் இருப்பதால் இந்த நீர்த் தேக்கத்தை அமைக்க அனுமதி தர ஆந்திரா மறுக்கிறது. ஆகவே இதில் தீவிர கவனம் செலுத்தி, ஆந்திர அரசுடன் கலந்து பேசி இந்தப் பகுதியிலே ஒரு நீர்த்தேக்கம் வர இந்த அரசு ஏற்பாடு செய்தால் இரண்டு தாலுக்கா மக்களைக் காப்பாற்றுகின்ற பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பெருமை நிச்சயமாக இந்த அரசுக்குக் கிடைக்கும். ஆகவே புல்லூரில் நீர்த் தேக்கம் ஏற்பட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஆந்திர அரசுடன் பேசி விரைவில் ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

இன்னும் என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் சொல்லுவதற்கு இருந்தாலும் ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியான நாட்றாம்பள்ளி தொகுதியிலுள்ள அலசந்தாபுரம் மற்றும் நிம்மாமேடு ஆகிய இரண்டு இடங்களிலும் பாலாற்றில் வருகின்ற காட்டாற்றின் குறுக்கே பாலங்களைக் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை கடந்த 10 ஆண்டு காலமாக இருப்பதால் இந்த இரண்டு பாலங்களையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டு இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்று அமர்கிறேன். வணக்கம்

[1987 மார்ச் 25

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் வறட்சியாக இருக்கிற நேரத்தில் திட்டங்கள் இல்லாத வறண்ட பட்ஜெட் பற்றி பேசுவதற்காக வயிற்றுப் பசியோடு இருக்கிற உறுப்பினர்கள் மத்தியில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சுருக்கமாகச் சொல்ல விழைகின்றேன். வரிகள் ஏற்றப்படாமல், விலைவாசிகள் குறைக்கப்பட வேண்டிய நேரம் வறட்சி மிகுந்த நேரம். இந்த நேரத்தில் வரிச் சலுகைகளுக்குப் பதிலாக வரி உயர்வையும், வரிகளுக்கு மேலாக உபரி வரியையும் விதித்து மக்களை எல்லாம் பாதிக்கத்தக்க வகையில் இந்த பட்ஜெட்டை இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். சாதாரணமாக மக்கள் பயன்படுத்தும் மிளகாய், சீரகம், மிளகு, எண்ணெய் போன்ற பொருள்களுக்கு உரிய வரியை ரத்து செய்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ஏமாற்றம் தருகிறது. இன்னும் சொல்லப்போனால் இந்த ஆண்டில் வீடு கட்டுபவர்களுக்கு தேவைப்படுகின்ற செங்கல்லுக்கும், ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுக்கும், மரத்திற்கும் இந்த நிதி நிலை அறிக்கையில் வரி விலக்கு அளித்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நேர்மாறாக இங்கே மக்களைப் பாதிக்கின்ற வகையில் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது.

ஹோட்டல்களில் இன்றைக்கு Turn over அடிப்படையில் வரி விதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், ஹோட்டல் தொழிலில் இந்தச் சர்க்கார் கொள்கை Single point Tax என்பது தான். ஒருமுனை வரியாக இருக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருக்கின்ற இந்த நேரத்தில், சாதாரணமாக ஹோட்டல்களில் பயன்படுத்துகின்ற அனைத்துப் பொருட்களும் வரி செலுத்தி வாங்கப்பட்டு பலமுனை வரியாக மாறுகின்ற ஒரு நிலைமை ஹோட்டல் தொழிலைப் பாதிக்கும் என்பதை இந்த மன்றத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1987 மார்ச் 25] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற திட்டங்களோ, படித்தவர்களில் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற அறிவிப்போ இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது.

கல்விக்காக கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 46 கோடி ரூபாய் அதிகப்படியாக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். கடந்த ஆண்டைவிட 46 கோடி வருகின்ற ஆண்டுக்கு அதிகப்படியாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் கூட, கடந்த ஆண்டு கட்டிடங்கள் கட்டுவதற்காக இரண்டு கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற பாடசாலைகள் கூரைகள் இல்லாத பாடசாலைகளாக, சுற்றுச் சுவர்கள் இல்லாத பாடசாலைகளாக இருக்கின்றன என்பதை இந்த மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். எனவே இந்த 46 கோடி ரூபாயில் எத்தனை கோடி ரூபாய் கட்டிடங்களைக் கட்டுவதற்காக ஒதுக்கப்பட இருக்கிறது என்பதை நம்முடைய நிதியமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக ஆசிரியர்களில் ஒரு பிரிவினருக்கு இன்சென்டிவ் இன்கிரிமென்ட் என்ற வகையில் இன்சென்டிவ் இன்கிரிமென்டாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த இன்சென்டிவ் இன்கிரிமென்ட் தமிழ் ஆசிரியர்களுக்கு, மொழி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில் மொழி ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த நிலையில் தமிழாசிரியர்களைச் சமநிலையில் வைத்துப் பார்க்காமல் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படாமல் இருப்பது சம நிலை தாராது என்பதை இந்த நல்ல சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1987 மார்ச் 25

இன்னும் சொல்லப்போனால், வறட்சிப்பற்றி மிகுந்த அக்கறையோடு இந்த நிதிநிலை அறிக்கையில் அதிகப்படியான ஒதுக்கீட்டைத் தந்திருக்க வேண்டும். ஆனால் மத்திய அரசினிடத்தில் 347 கோடி ரூபாய்க்கு நிதியுதவி கேட்டிருக்கின்ற இந்தச் சர்க்கார் குழாய்க் கிணறுகளைப் போட 28 கோடி ரூபாயும், வேலை வாய்ப்பை உருவாக்குகின்ற திட்டங்களுக்கு ஐந்து கோடியும், திறந்த கிணறுகளை வெட்ட ஒரு கோடியும், லாரிகளில் தண்ணீர் வழங்க 15 இலட்ச ரூபாயும்தான் ஒதுக்கியிருக்கிறது. இதைப் பார்க்கின்றபொழுது 28 கோடி ரூபாய் குழாய்க் கிணறுகளைப் போடுகின்ற கான்ட்ராக்டர்களுக்கும், குடிநீர் வாரியத்திற்குமே போய்ச் சேருகிறது. மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்தால்தான் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகப்படியான வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆனால் வேலை வாய்ப்பை அதிகரிக்கின்ற திட்டத்திற்காக, வேலைவாய்ப்பைத் தருகின்ற திட்டத்திற்காக வெறும் ஐந்து கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருப்பது ஏமாற்றமாக இருக்கிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பாக இந்து பத்திரிகையிலும், எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலும், தினமலர், தினத்தந்தி, மாலை முரசு இன்னும் அனைத்துப் பத்திரிகைகளிலேயும் பல்வேறு பகுதிகளில் உள்ள வறட்சியைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பசுமைப் பூங்காவாக, கண்ணைக் கவரும் காட்சியாக இருந்த அந்தக் குமரி மாவட்டம் இன்றைக்கு வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது என்பதைப் பத்திரிகைகள் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றன. அங்கே இருக்கின்ற அரசு அதிகாரிகளும் அரசுக்குத் தெரிவித்திருப்பார்கள். இந்த நிலைமையில் நெல் பயிர் மட்டும் சாவியாகிப் போய்விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குடிதண்ணீருக்காகப் பெண்கள் பேருந்துகளில் ஏறி பல மைல் தூரம் சென்று தண்ணீர் கொண்டு வர வேண்டிய நிலைமை. கருங்கல், செங்கம்புதூர். திங்கள்சந்தை போன்ற பல்வேறு பேரூராட்சிப் பகுதிகளில் குடிதண்ணீர் குடம் ஒன்றுக்கு ஐம்பது



1987 மார்ச் 25] [திரு. கி. அன்பழகன்]

ளுடைய மாவட்டம் முழுவதும் வறட்சியினால் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் காரணத்தினால் அந்த மாவட்டத்தில் அதிகமான அளவிற்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக்கொள்வதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையில் வறட்சிப் பணிகளை அதிகரித்து அவர்களுக்கு அதிகமான வேலை கிடைக்கச் செய்யவேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்ய வேண்டும். அவர்களுக்கு போதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில் கிணறுகளை வெட்டுகின்றபோது, எந்த அளவுக்கு அவர்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். காலையிலேகூட பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தின் மீது பேசும்போது, சொன்னார்கள். அரசு வெடி மருந்து விவசாயிகளுக்கு சுலபமாகவும் விரைவாகவும் கிடைக்கின்ற அளவுக்கு செய்ய வேண்டும் என்று கோரினார்கள். இன்றைக்கு யாரோ சில பாவிகள் செய்த கொடுமைகளால் தமிழகத்திலே இருக்கின்ற அப்பாவி விவசாய மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். காலையிலே மாண்புமிகு நாவலர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, இன்றைக்கு விவசாயிகளுக்கு வெடி மருந்து கிடைக்கும் என்று சொன்னார்கள். அதிலே இருக்கின்ற கடுமையான விதிகள் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு விவசாயி நேரடியாகச் சென்று வெடி மருந்துப் பொருள்களை வாங்க முடியாத அளவுக்கு பல சங்கடமான சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே மாவட்டத்தினுடைய தலைமை அலுவலகத்திலே போய் அனுமதி பெறுவதைவிட, வட்ட ஆட்சியாளர் மூலம் தாலுக்கா அலுவலகத்திலேயே அனுமதியைப் பெற்று வெடி மருந்துகளைப் பெறவேண்டும். அப்படி அனுமதியைப் பெற்று விவசாயிகள் தங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்திக்கொள்ள அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்

51. 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 15—10—1986 ஆம் நாளிட்ட 1965 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.**

76. 1987—88 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

77. 1987—88 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

78. 1986—87 ஆம் ஆண்டில் கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

79. 1986—87 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

80. 1986—87 ஆம் ஆண்டு இறுதி துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்)

136587
சென்னை-600 008.
D
V211,31 N87
N87.34.4

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1,
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1,

### IN OTHER STATES.

1 J[illegible] Book Agency, New Delhi.
2 [illegible] Book House, Trivandrum.
3 [illegible] Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 [illegible]ghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

---

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.